Registered as a News Paper in Sri Langka

பக்கம் 24 ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஒக்.07-ஒக்.13, 2004

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 583

# நோர்வே மத்தியஸ்த அணுகுமுறை மாறுமா?

## ஆணுக்கும் பெண்ணுக்கும் இணக்கப்பாடு அவசியம்

## கமல் அஜித் புதிய படம்

## சினிமா ஸ்பெஷல்





வே. ரவீந்திரன்

ஆ. ரமணி

க. பாலநடராஜ ஐயர்

மா. சந்திரமோகன்

த. சிவகுமார்

சோ. வர்ணகுலசிங்கம்

வல்லிசுந்தரம்

## படுகொலைகள் ~ ஒரு பார்வை

## பிதிர்க் கடமைகளுக்கு ஏற்ற காலம்

இறந்தவர்களுக்காகச் செய்யப்படும் பொதுவான சிரார்த்த தினம் அமாவாசை திதியாகும்.

பொதுவாக திதி தெரியாதவர்கள் ஆடி, புரட்டாதி, மார்கழி, மாசி, மாதங்களில் அமரபட்ச அட்டமி அல்லது அமாவாசை திதியில் இறந்தவர்களுக்கான கடன்களைச் செய்யலாம்.


புரட்டாதி மாதத்தில் சூரியனின் தென்பாகம் பூமியின் நடுப்பகுதியில் நேராக நிற்கிறது. அப்போது சந்திரனின் தென்பாகமும் நேராக நிற்கின்றது. அத் தருணம் பிதிர் கர்மங்களுக்கு மிக விசேஷமான காலமாகும்.

சூரியன் கன்னி இராசியில் புகும் ஆஷாடாம் முதல் ஐந்தாவது அமரபட்சம் வரையான காலத்தில் யமதர்மராஜன் தம்மிடருக்கும் பித்ருக்களைப் பூமிக்குச் செல்லும்படி அனுப்புவதாக ஐதீகம்.

இந்தப் பதினாறு நாட்களும் மகாளய விதிப்படி சிரார்த்தம் செய்ய வேண்டும். இயலாவிடின் ஒரு நாளாவது சிரார்த்தம் நடாத்தி மற்ற நாட்களில் தர்ப்பணம் செய்யலாம்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.

# ஆன்மீகம்



## வார்த்தையின் அதிகாரம்

ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரமுண்டு; நீர் என்ன செய்கிறீர் என்று அவனுக்குச் சொல்லத் தக்கவன் யார்? பிரசங்கி 8:4.

ஆம் சகோதரரே! நாம் ராஜாதிராஜனாகிய இயேசு ராஜாவின் வார்த்தைகளை எமக்குள்ளே வைத்திருக்கிறோம். வேதம் சொல்லுகிறது. அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்; யோவான் 1:14.

ஆம்! ராஜா எமக்குள்ளே வாசம் பண்ணுகிறார். அவருடைய அதிகாரமுள்ள வார்த்தை எமக்குள்ளே வாசம்பண்ணுகிறது. சாவத்தை சிருஷ்டித்தவருடைய வார்த்தை எமக்குள்ளே வாசம்பண்ணுகிறது. அது ஜீவனுள்ளது. வியாதிகளை சொஸ்தப்படுத்தக் கூடியது, பிசாசுகளையும் துரத்தக் கூடியது. ஞானத்தையும் புத்தியையும் தர வல்லது. அவர் கொடுத்துள்ளவற்றை உபயோகிக்காமல் இருந்தால் அவர் கொடுத்துள்ள வல்லமை அதிகாரங்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும். எனவே அவற்றைப் பாவியுங்கள். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். மத்தேயு 25:29.

-போல் ஜோன், தெல்தெனிய.

## குப்ர் — நிராகரித்தல்

இறை நிராகரிப்பு மிகவும் பயங்கரமானது என்பதனை ஒரு முஸ்லிம் உணர்ந்துகொள்ள வேண்டும். முஸ்லிமாக வாழ்ந்து முஸ்லிமாக மரணிப்பதே ஈருலக வாழ்வின் வெற்றியாகும்.

விசுவாசிகளே! நீங்கள் ஸ வை அஞ்ச வேண்டியவாறு அஞ்சிக்கொள்ளுங்கள். முஸ்லிம்களாகவே அன்றி நீங்கள் மரணிக்க வேண்டாம். - ஆல் இம்றான் 102.)

உங்களின் பெற்றோரை வெறுக்காதீர்கள். ஏனெனின், உங்கள் பெற்றோரை வெறுப்பது குப்ராகும். -முஸ்லிம்.


யார் தொழுகையை விட்டுவிடுகின்றானோ அவன் இறைவனை நிராகரிப்பவனாவான். - ஹதீஸ்.

யார் ஸவை இறக்கி அவற்றைக் கொண்டு தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள் காபிர்கள்.
-சூறத்துல் மாயிதா - 44.

ஸ வைத் தவிர சட்டம் இயற்றும் அதிகாரம் வேறு எவர்க்கும் கிடையாது. அவனைத் தவிர வேறு யாரையும் வணங்க வேண்டாம் என்று அவன் கட்டளை பிறப்பித்துள்ளான். இதுவே நேரான மார்க்கமாகும்.
-சூறா யூசுப் - 40.

—றஸீன் றஸ்மின், ரஹ்மத்புரம்.

## கவிதைப் போட்டி இல.580 பரிசுக்குரிய கவிதை



### விடா முயற்சி

தோல்வியைக் கண்டு துவளாது
மீண்டும் மீண்டும் முயற்சித்தால்
இம் மலையென்ன இந்த
உலகத்தையே
பெயர்த்து விடலாம்.

–ட.டெனி, மட்டக்களப்பு.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### சுமைகள்

உலகையழிக்க அணுச் சுமை.
உழைப்பாளிகளுக்கோ வேலைப்பளுச் சுமை.
ஊழலால் உலகெங்கும் பணச் சுமை.
ஊதுகுழலாகும் ஊடகத்தால் பழிச் சுமை.
மக்கள் மீது பல வரிச் சுமை.
வடகிழக்கிலோ போர்ச் சுமை.
தலைமுறை அரசியலால் இனச் சுமை.
தமிழர்கள் வாழ்விலோ கொலைச் சுமை.

–லிங்கராஜா கிரிசாந்தி, மட்டக்களப்பு.

### சுமை தாங்கி

எத்தகைய சுமைகள் வந்தாலும்
தாங்குகின்ற பாமரனுக்கு - இந்த
உலகைச் சுமந்து செல்வது
பெரும் சுமையில்லையே!

–சிவசம்பு சிவகுமார், ஆலயடிவேம்பு.

### சுமை!

உலகச் சுமையை
நீ சுமக்க நினைக்கிறாய்
ஆனால்
அவ்வுலகமே உனை
சுமையாய் கருதுகிறது!!

–ஜே.பிரோஸ்கான், கிண்ணியா – 03.

### சூசகத் தனித்தன்மை

விலைவாசி உயர்வின்
பளுவைத் தாங்காது
வேதனையுறும் மக்களின்
இதயக் குமுறலை
பக்குவமான முறையில்
படம்பிடித்துக் காட்டும்
சூசகத் தன்மை
முரசுக்கன்றி
வேறு யாருக்கு வரும்.


–ஏ.எம்.அல்–அப்ஸர், ஏறாவூர் – 03.

### ஒரு பொய்யும் ஒருவனின் மெய்யும்

ஒரு கவிஞன் சொன்ன
பொய்யை
ஒரு கலைஞன் செய்தான்
மெய்யாக.
பூமியை சுமந்து செல்லவும்
மனிதன் கனவு கண்டானே.

–காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா.

## கவிதைப் போட்டி இல.583



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.10.2004

கவிதைப் போட்டி இல.583
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772,
கொழும்பு.



### புதிய நியாயங்கள்!

நீங்கள் தொலைத்து விட்ட
புனிதத்தை - மானுட தர்மத்தை
நான் சுமந்து நிற்பதால்
'துரோகி' யாகிறேன்
இத்தனைக்கும்
இதுவொரு ஜனநாயக தேச(மா)ம்!

–எஸ்.எச்.முஜீபூர் ரஹ்மான், வவுனியா.

### விலை ஏற்றம்

விடிவில்லா விலைவாசி
ஏற்றத்தில்
வீழ்ந்து கிடக்கும்
மக்களுக்கு இன்று
மலிவாகக் கிடைக்கும் சொல்
உலகச் சந்தையில்
விலையேற்றம்.

–எஸ்.பி.பி.கணேஷ், தாண்டியடி.

### கட்டளைகள்

வன்னி சென்று
திரும்பும்போது
பல
சுமைகளோடுதான்
வருகிறார்கள்
நம்ம
கூட்டமைப்புக்
காரர்கள்.

–
த.நதுலேஸ்வரன்,
மட்டக்களப்பு.

### இலங்கையன்!

இவன்
வாழ்க்கைச்
சுமையால்
வளைந்து போன
இலங்கையன்!

–ரேணுகா றிபாய்தீன்,
ஏறாவூர்.

# உங்கள் பக்கம்

## பொகவந்தலாவ - கிள்ளார்னி பாதை புனரமைக்கப்படுமா?

எங்களது கிராமம் கிள்ளார்னி. பொகவந்தலாவ நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. பொகவந்தலாவையிலிருந்து எமது கிராமத்தினூடாகச் செல்லும் பாதை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இப் பாதை ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்டது. இப் பாதையால் தினமும் ஆறாயிரத்துக்கும் அதிகமானோர் பயணிக்கின்றார்கள். பாதையிலுள்ள குண்டுகள், குழிகளால் வாகனப் போக்குவரத்து மிகவும் சிரமத்துடனேயே நடக்கிறது. மழையற்ற காலத்திலேயே இப் பாதையால் பிரயாணம் மேற்கொள்வது பெருஞ் சிரமம். மழை காலத்தில் பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள், வாகனங்கள் செல்லவே முடியாத நிலை.

காலத்துக்குக்காலம் நடைபெறும் தேர்தல்களின்போது இப் பாதையால் இங்கு வரும் அரசியல்வாதிகள் திரும்பிப் போகும்போது இப் பாதையை அமைத்துத் தருவதாகச் சொல்வதே வழமை. இப் பகுதியில் வாழும் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவது போல இப் பாதைக்கு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் பொகவந்தலாவையிலிருந்து 1/2 கி.மீ. தூரமே திருத்தப்பட்டது.

மேலும், இப் பாதையைப் புதிய வடிவில் அமைத்துத் தருவதாகக் கூறிய ஒரு அரசியல்வாதி, பாதைக்குப் புறம்பான வேறொரு இடத்தில் பாலம் ஒன்றைக் கட்டியுள்ளார். அதன்பின் எந்த நடவடிக்கையும் தொடரவில்லை. பாலமும் அப்படியே இருக்க பாதையும் புனரமைக்கப்படாமல் அப்படியே இருக்கிறது.

எனவே, இப் பாதையில் பயணிக்கும் மக்களின் சிரமத்தைப் போக்கவும், இக்கிராமத்து மாணவர்கள் சிரமமின்றிப் பாடசாலைக்குச் சென்று வரவும் இப் பாதையைச் சீரமைக்கப் பொறுப்பானவர்கள், அரசியல்வாதிகள் - பிரதேச சபை - மாகாண சபை உறுப்பினர்கள் அக்கறையுடன் செயற்படுவார்களா?

-இரா.கனகு, கிள்ளார்னி.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# வாசக(ர்) சாலை

### முரசுக்கு முத்தங்கள்!

முரசு....இதழ் 573 அரசியல் விடயங்களோடு அழகாக அசத்திச் சென்றது. 'விடிவுக்கான பயணத்தில் பலஸ்தீனம்' பற்றிய சுண்டுக்குளி கஜோலின் கட்டுரை உண்மையை உணர்த்தி நின்றது. பாராட்டுக்கள். தேன் கிண்ணம் தேனாய் இனித்தது. மரங்கள் பற்றிய மூவரின் கவிதைகளும் அபாரம். சிறுகதைகள் நன்று. அதில்....கிண்ணியா அமிர் அலியின் 'மனிதர்கள் கெட்டவர்கள்' சுவைபட இருந்தது. என்றும் முரசுக்கு முத்தங்கள் பல! பல!

–முஸம்மில், துவைத்.

### தினமுரசே! நீ..... வா ழ் க!

தினந்தோறும்
மலர்வாயா
தினமுரசே!

சிறுவரின் அறிவுக்கு
பாப்பா முரசு!
கவிஞனின் வளர்ச்சிக்கு
தேன்கிண்ணம்!
சிரித்து மகிழ்ந்திட
நகைச்சுவை!

இதற்கும் மேலாய்
சிறுகதை
அரசியல் ஆராய்வு!
தகவல் பெட்டி!
இதெல்லாம் சுமந்துவரும்
தினமுரசே! நீ....
வாழ்க!
பல்லாண்டு வாழ்க!

–மஹீஸா, புத்தளம்.

### நீ - விட்டவையிலிருந்து நான் - தொட்டவை!

முரசே நீ
தெவிட்டாத கனி
தெள்ளிய நீர்
ஆழ்கடல் முத்து
ஆர்ப்பரிக்கும் கடல்
ஒளி தரும் சூரியன்
தேன்சுவை அமுதம்
தென்றல் காற்று
வாடாத மலர்
வற்றாத ஊற்று
வானத்து நிலவு
வசீகரிக்கும் சிட்டு
மங்கிடாத மகுடம்
மக்களின் சேவகன்.

–செயின் தம்பி ஸியாம், கல்முனை – 06.

### எதிர்பார்க்கிறேன்

உன்னை ஒவ்வொரு
வியாழன்
தோறும்
எதிர்பார்த்திருக்கிறேன்.
உன்னுடைய ஆக்கங்கள்
ஒவ்வொன்றுமே சூப்பர்.

அன்பின் முரசே!
உனக்கு
என்றும் எங்களுடைய
ஆதரவு
நிச்சயம் உண்டு.

நீ இன்று போல் என்றும்
ஒவ்வொரு படி முன்னேற
எனது மனமார்ந்த
நல்லாசிகள் பல.

–என்.சபீகா, சிலாபம்.

# ஆயுதமேந்தியவர் சமாதானத்துக்காகப் போராடுகிறார்; அமைதியாக இருந்தவர் ஆயுதப்போராட்டத்தைத் தூண்டுகிறார்!

வடக்கு, கிழக்கை உள்ளடக்கிய இறைமையுள்ள சுதந்திர இராச்சிஜ்யத்தை அமைப்பதற்காகப் பல வருட காலமாக ஆயுதமேந்திப் போராடிய இன்றைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, போதும் போதுமென்ற அளவுக்குத் துன்ப துயரங்களைச் சந்தித்த மக்கள் நிம்மதியாக வாழ்வதற்காக சமாதானப் பேச்சுக்குத் திரும்புமாறு புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு உருக்கமான வேண்டுகோளினை விடுத்துள்ளார். ஆனால், அகிம்சை ரீதியில் காலம் காலமாக அமைதியாக அரசியல் நடத்தி வந்த தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி, புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வரவிடாமல் தடுப்பதன் மூலம் மீண்டுமொரு யுத்தத்துக்குள் தள்ளிவிட முனைகின்றாரென்று அரசியல் ஆய்வாளரான பெரியதம்பி மணி வண்ணன் தெரிவித்தார். 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஆயுதங்களைக் கைவிட்டு, நாட்டின் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்ட டக்ளஸ் தேவானந்தா ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியென்ற அமைப்பை உருவாக்கிக் கட்டியெழுப்பி, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைப்பு என்று இனப் பிரச்சினைத் தீர்வுக்கான கோட்பாட்டை முன்வைத்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தப் போராடி வருகிறார். ஆனால், புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் பெருந்தலைவர் அமிர்தலிங்கத்தோடு இணைந்து அகிம்சைத் தீர்வுக்காக நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்தவர் சம்பந்தன. அதுமட்டுமல்ல, 1995இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்வைத்த இனப் பிரச்சினைத் தீர்வுக்கான நகல் யோசனைகளைத் தயாரிப்பதில் புலிகளால் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தோடு சேர்ந்து பணியாற்றியவர் சம்பந்தர் என்றும் மணிவண்ணன் கூறினார். சமாதானப் பேச்சைக் குழப்பித் தாமதப்படுத்தி முட்டுக்கட்டை போடுவதற்கே இந்தத் தேசிய ஆலோசனைச் சபை கூட்டப்பட்டுள்ளதென்று கூறும் சம்பந்தன், இச் சபையின் செயற்பாடுகள் எப்படியிருக்குமென்றும், அது சமாதானம் தொடர்பான விடயங்களை எவ்வாறு கையாளப் போகிறதென்பது தனக்குத் தெரியவில்லையென்றும் கூறியிருப்பது அவரது முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களையே காட்டுகிறது. புலிகளுக்கும் அரசாங்கத்துக்கு மிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பும் நோக்கில் இந்த ஆலோசனைச் சபை அமைக்கப் படவில்லையென்றும், பலதரப்பட்டவர் களின் கருத்துக்களை அறிந்துகொள்வதற்காகவும், சமாதான முயற்சிகள் தொடர்பான விடயங்களையும் முன்னேற்றத்தையும் பற்றி நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்காகவுமே இந்தச் சபை அமைக்கப்படுகிறதென்று ஜனாதிபதி கூறியிருப்பதைப் புரிந்தும் புரியாதவர் போல கருத்துக்களைக் கூறுகிறார். புலிகளின் முகவராகச் செயற்படும் சம்பந்தன் எம்.பி. ஆனால் புலிகளின் அராஜக நடவடிக்கைகளை வன்மையாக எதிர்க்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ சமாதான மேசைக்குத் திரும்புவதில் காட்டப்படும் தாமதம் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமென்றும், ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமாறு புலி இயக்கத் தலைவர் பிரபாகரனிடம் கோரிக்கை விடுத்துள்ளரென்றும் மணிவண்ணன் சொன்னார்.

## தமிழக மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

பாக்கு நீரிணையிலுள்ள சர்வதேச எல்லைக் கோட்டைக் கடந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் செல்ல வேண்டாமென்று தமிழக மீனவர்களுக்கு தமிழக மீன்பிடித்துறை அறிவித்துள்ளது. மன்னாரில் முஸ்லிமொருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதால் வடக்கில் நிலைமை கொந்தளிப்பாக இருப்பதாக இலங்கைக் கடற்படை அதிகாரிகள், இந்தியக் கடலோரக் காவற் படையினருக்குத் தெரிவித்ததையடுத்தே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக 'பிரஸ் ட்ரஸ்ற் ஒப் இந்தியா' என்ற செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இலங்கையின் வட பகுதியில் நிலைமை கொந்தளிப்பாக இருப்பதாகவும் எந்த நேரமும் மோதல்கள் வெடிக்கலாமென்று இலங்கைக் கடற்படையினர் அறிவுறுத்தியுள்ளனரென்றும் பி.ரி.ஐ. தெரிவித்துள்ளது.

## ரெஜி போராடி மடிந்தார் 'என்கிறார் கருணா

புலிகள் இயக்கத்தோடு முரண்பட்டுப் பிரிந்து சென்ற கருணா அம்மானின் மூத்த சகோதரரான ரெஜி என்பவர் பிரபா அணிப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டாரென்று லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ரி.பி.சி. வானொலிக்கு அளித்த பேட்டியில் கருணா தெரிவித்துள்ளார். பிரபாகரனின் அடிவருடியொருவரால் தனது அண்ணன் கொல்லப்பட்டாரென்றும் பிரபாகரனின் தன்னிச்சையான சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து நின்று ரெஜி போராடி மடிந்திருப்பதைப் பாராட்ட வேண்டுமென்றும் அவர் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார். "நாம் மக்களை விட்டு ஓடிவிட்டோமென்று பொய்ப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் மக்களை விட்டு என்றுமே ஓடமாட்டோம். நாம் மக்களோடுதான் இருக்கிறோம். எமது பணிகள் தொடரும்'' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரான்ஸ் தூதுவரிடம் வலியுறுத்தல்

புலிகள் மனித உரிமைகளை மதித்து நடக்க வேண்டுமென்றும் சர்வதேச சமூகம் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தூதுக் குழுவொன்று கொழும்பிலுள்ள பிரான்ஸ் நாட்டு தூதுவர் ஜுன் போனாடே டீ வெய்ங்பேயை கடந்த 17ஆம் திகதி சந்தித்தபோது இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கனடா 'பொங்கு தமிழ்' நிகழ்வில் பத்தாயிரம் பேரே பங்குபற்றினர்! என்கிறது 'ரொறன்ரோ சன்' பத்திரிகை

கனடா, ரொறன்ரோ குயீன்ஸ் பார்க்கில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் சுமார் பத்தாயிரம் பேர் பங்குபற்றினரென்று 'ரொறன்ரோ சன்' என்ற ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்துள்ளது. "கனடாவின் உதவியைத் தமிழர்கள் கோருகின்றனர்; சமாதானப் பேச்சுக்களில் பெரும் பங்கு வகிக்குமாறு ஒட்டாவாவைப் பேரணி கோருகிறது'' என்ற தலைப்பில் கடந்த 26ஆம் திகதி வெளியான செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. "எமது சமூகம் யுத்தம் குறித்து விரக்தியடையும் நிலைக்கு வந்துள்ளது. எமது முக்கிய தேவை சமாதானமே. இரு தரப்புகளுமே தவறுகளை இழைத்திருக்கின்றன. இரு தரப்புகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதன் மூலமே பிரச்சினையைத் தீர்க்கலாம்'' என்று பார்த்தி கந்தவேள் என்பவர் தெரிவித்தாரென்று பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் கனடா பங்களிக்க வேண்டுமென்று கனடியத் தமிழ் மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பேரணியில் கலந்துகொண்ட பலர் கோரிக்கை விடுத்தனர். பேரணி அமைதியான முறையில் இடம் பெற்றது.

## வாழ்வுரிமையைப் பறிப்பவர்களின் மனித உரிமை பற்றிப் பேசும் அதிகாரிகள்

கொலைகாரர்களைப் பாதுகாக்க முயற்சிக்கும் யாழ். மனித உரிமை அமைப்பும் ஏனைய சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கொலை செய்யப்படுபவர்களின் வாழ்வுரிமையும் மனித உரிமையும் பறிக்கபடுவது பற்றி மௌனம் சாதிப்பதேன்? என்று யாழ். பிரஜைகள் குழுவின் முக்கிய பிரமுகரான எஸ். அருந்தவநாதன் கேள்வி எழுப்பினார். கடந்த 27ஆம் திகதி யாழ். மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணியின் முக்கிய உறுப்பினரான வல்லி சுந்தரம் என்ற 66 வயது வயோதிபரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பியோடிய இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்ற 23 இளைஞனை இராணுவத்தினர் கலைத்துச் சென்று துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைதுசெய்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவரது மனைவி செயத முறைப்பாட்டையடுத்து சந்திரகுமாரின் நிலைமைகளைக் கண்டறிய யாழ். பொலிஸ் நிலையம் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் றுவான் சந்திரசேகர மற்றும் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி எம்.பி. சம்பிரோஸிக்கும் பொலிஸாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## மன்னாரில் இன மோதல்களைத் தவிர்த்த பொலிஸாருக்குப் பாராட்டு

மன்னார் பிரதான வீதியிலுள்ள புலிகளின் இரு அலுவலகங்களையும், மூர் வீதியிலுள்ள புலிகளின் மற்றொரு அலுவலகத்தையும் கும்பலொன்று தாக்கிச் சேதப்படுத்திவிட்டதாகப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், கண்காணிப்புக் குழுவுக்குக் கையளித்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். கடந்த முப்பதாம் திகதி மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் அமர்ந்து பயணம் செய்துகொண்டிருந்த இஸ்மாயில் சலீம் என்ற இளைஞர் கரிசல் என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து வெகுண்டெழுந்த மக்கள் கூட்டம் புலிகளின் அரசியல்துறைப் பணிமனை உட்பட மூன்று அலுவலகங்களைத் தாக்கிச் சேதப் படுத்தியதோடு, அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர். புலிகளின் மூன்று மோட்டார் சைக்கிள்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. மன்னாரிலுள்ள நிர்வாக சேவை அலுவலகம் தாக்கப்பட்ட இரவு வேளையில் ஆறு பேர் தங்கியிருந்ததாகவும், இவர்களில் நால்வரைக் காணவில்லையென்றும் தெரிவிக்கப்படும் சில தகவல்கள் உண்மையா? பொய்யா? என்பதைச் சரிவரத் தெரிவிக்க முடியவில்லையென்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர் போதைவஸ்துக் கடத்தல்காரரென்று புலிகளின் 'தமிழ் நெற்' இணையத்தளம் வெளியிட்டிருந்த செய்தியை மன்னார் மாவட்ட எம்.பி.ரிசாத் பதியுதீன் வன்மையாக மறுத்துள்ளார். போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். புலிகள் சட்டத்தையும், ஒழுங்கையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டு செயற்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். இச் சம்பவத்தைப் பயன்படுத்தி தமிழ் - முஸ்லிம் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்த முனைந்த தீய சக்திகளை அவர் கண்டித்ததோடு, மோதல்கள் ஏற்படாமல் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பொலிஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

புலிகளின் அலுவலகங்களை முந்நூறுக்கு மேற்பட்ட கும்பலொன்று தாக்கியதாகவும் பொலிஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டியேற்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக வவுனியாவிலிருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டதோடு மேலதிக துருப்புகளும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது. மறுநாள் வெள்ளிக்கிழமை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூட்டிய சமாதானக் கூட்டத்துக்குப் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப் படவில்லை.

## இப்படியும் அரசியல் தஞ்சக் கோரிக்கை

இலங்கைக்குத் தனது குடும்பத்தினர் நாடு கடத்தப்பட்டால் பதினாறு வயதான ஷரோன் என்ற பெயர் கொண்ட தனது மகனைப் புலிகள் பலாத்காரமாகக் கடத்திச் சென்று தமது இயக்கத்தில் இணைந்து போராடுவதற்காகச் சேர்த்துக் கொள்வார்களென்று திருமதி சோமாவதி மெடௌஸ் என்ற தாயார் அச்சம் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் வாழும் சோமாவதி தமிழ்ப் பின்னணியைக் கொண்டவரென்று 'ஏஜ்' என்ற அவுஸ்திரேலியப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இப் பெண்ணின் கணவரான ஜோன் என்பவர் விசா விதிகளை மீறினாரென்ற குற்றச்சாட்டின் பேரில் அவுஸ்திரேலிய குடியேற்ற அதிகாரிகளால் தடுத்துவைக்கப்பட்ட பின்னர், கடந்த ஜுலை மாதம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். ஏழு வயதிலிருந்து தனது மகன் அவுஸ்திரேலியாவில் வசித்து வருவதால் அவரால் இப்போது சிங்களம் பேச முடியாதென்றும் இதனால் அவர் 'தமிழ்ப் பயங்கரவாதி' எனச் சந்தேகிக்கப்படலாமென்றும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் டக்ளஸ்ஸின் உரைக்கு அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் பாராட்டு

கொழும்பில் கடந்த நான்காம் திகதி ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆற்றிய உரைக்கு பல அரசியல் சமூக, சமயத் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் உரையை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது ஆலோசனைகளைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

தமிழ் மக்கள் நடத்திய ஆயுதப் போராட்டம், அவர்களின் சட்டபூர்வ உரிமைகளை இலங்கை அரசுகளால் தொடர்ந்தும் மறுத்துவர முடியாதென்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தனது உரையில் கூறியிருந்தார். அத்துடன் ஆயுதமேந்திப் போராடியவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்டமை பற்றியும், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தமது கட்சியின் முக்கிய யோசனைகளையும் முன்வைத்து இரத்தினச் சுருக்கமாக உரையாற்றிய அவர், புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு உரையின் இறுதியில் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார். அக் கோரிக்கை வருமாறு,

உண்மையிலேயே நீங்கள் விரும்பினால் தயவுசெய்து பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பி வாருங்கள். பேச்சுவார்த்தை மேசைக்கு மீளத் திரும்புவதற்கு மேலும் தாமதித்தால், அது தமிழ் மக்களுக்குச் செய்யப்படும் துரோகமாகும். மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செயற்பட்டு கௌரவமான அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு உதவி செய்வீர்களேயானால், தமிழ் மக்களின் பெயரால் நீங்கள் மேற்கொண்ட பெருந் தொகையான கொலைகளைத் தமிழ் மக்கள் மன்னிப்பார்கள். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்ற மகத்தான தமிழ்த் தலைவர்களின் குடும்பங்களும் உங்களை மன்னிக்கும்.''

"இறுதியாக, எனது உரையை முடிப்பதற்கு முன்பதாக, சமாதானம் மற்றும் நல்லிணக்கத் துக்கான இந்தத் தேசிய ஆலோசனைச் சபையின் ஆரம்பக் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதில்லையெனத் தீர்மானித்த சகல தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் குறிப்பாக, ஏதோ ஒரு காரணத்துக்காக இவ்வாறு தீர்மானித்தவர்களுக்கும் அவர் வலுவான கோரிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளார்.

## அமிரைக் கொன்றவர் மாவையா?

"தமிழ் மக்களின் தலைவர் அமிர்தலிங்கத்தைச் சுட்டுக் கொன்றவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே யென்றும், பத்மநாபாவைக் கொன்றவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தினரேயென்றும் ஸ்ரீசபாரத்தினத்தைக் கொன்றவர்கள் ரெலோ இயக்கத்தினரேயென்றும் புலிகளின் மூன்றாம் தரத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தால், அதனையும் பிரசுரிக்கத் தமிழ் ஊடகங்கள் தயாராக இருக்கின்றன'' என்று ஜனநாயகத் தமிழ் ஊடகவியலாளர் அமைப்பின் செயற்குழு உறுப்பினரான எஸ்.ஆனந்தருபன் தெரிவித்தார். போகிற போக்கில் ராஜீவ் காந்தியை இந்திரா காங்கிரஸ்காரர்களும், பிரேமதாசாவை ஐக்கிய தேசியக் கட்சியினருமே கொன்றார்களென்று அவர்கள் கூறக்கூடுமென்றும் அவர் சொன்னார். ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை ஈ.பி.டி.பி.யினரே சுட்டுக் கொல்கின்றனரென்று புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை உபபொறுப்பாளர் செம்மணன் விடுத்த அறிக்கை பற்றிக் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

## சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு இலங்கையிலிருந்து ஓர் கோரிக்கை

"இலங்கையிலுள்ள சகல குடிமக்களின் பாதுகாப்பும் பந்தோபஸ்தும் ஆபத்தான நிலையிலுள்ளது. இன்றைய நிலையில் புலிகளுக்கெதிரான தமிழர்கள் பெரும் ஆபத்தைச் சந்திக்கின்றனர். அச்சுறுத்தலுக்கு இலக்கானவர்களின் பாதுகாப்பிலும் அவர்களின் வாழ்வுரிமையிலும் சர்வதேச சமூகம் முன்னுரிமை கொடுத்து அக்கறை செலுத்த வேண்டும். நீதியான, நீடித்த தீர்வினை முன்னெடுப்பதற்கு இத்தகைய பாதுகாப்பே முதற்படியாகும்'' என்று சர்வதேச சமூகத்துக்கும் மனித உரிமை ஸ்தாபனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 'இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கான அமைப்பு' என்ற ஸ்தாபனம் இக் கோரிக்கையை விடுத்துள்ளது. "இலங்கையில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், அரசியல் எதிரிகளையும் அழித்தொழிக்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தம்மைக் காட்டிக்கொள் வதற்காக இலங்கை அரசுடன் மேற்கொள்ளப்படும் யுத்த நிறுத்த ஒப்பந்தக் காலகட்டங்களைப் புலிகள், தமது மேலாதிக்கத்தை எதிர்க்கும் தமிழர்களை ஒழித்துக்கட்டுவதற்கான அனுமதிப் பத்திரமாகவும், சந்தர்ப்பமாகவும் என்றுமே பயன்படுத்தி வந்துள்ளனர். 1989இல் அமிர்தலிங்கமும், 2003ஆம் ஆண்டில் ஈ.பி.ஆர்.எல்.எப்.பைச் சேர்ந்த ரி.சுபத்திரனும். 2004ஆம் ஆண்டு ஆகஸ்டில் ஈ.பி.டி.பி.யின் முக்கியஸ்தரான பாலநடராஜ ஐயரும் கொலை செய்யப்பட்டமை, மூன்று முக்கிய உதாரணங்களாகும். தற்போதைய யுத்த நிறுத்தத்தின்போது பலியான நூற்றுக்கணக்கான தனி நபர்களின் பெயர்கள் வரலாற்றிலிருந்து அழிக்கப்பட்டுவிட்டன. "இவ் வருடம் மார்ச் மாதத்திலிருந்து தமது அழித்தொழிப்பு நடவடிக்கைகளை புலிகள் அதிகரித்துள்ளனர். தம்மை எதிர்த்த பல தமிழர்களை நாடெங்கும் கொலை செய்துள்ளனர். ஆஸ்பத்திரிக் கட்டிலில், வீட்டில், வீதியோரத்தில், சிறைச்சாலைகளுக்குள், நீதிமன்றங்களிலும் கூட எதிர்ப்பாளர்கள் எங்கிருந்தாலும் இலக்கு வைத்துக் கொல்லப்படுகின்றனர். இதனால் இலங்கையில் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் பாதுகாப்பாக இல்லை'' என்றும் அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகாரங்கொண்ட சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள் உடனடியாக இலங்கையின் சகல பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# முரசம்

## ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைச் சபை

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

அரசாங்கம் - புலிகள் ஆகிய இரு தரப்புகளையும் விட இனப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மற்றைய தரப்புகளும் உள்ளன. அவற்றையும் முற்று முழுதாகப் புறக்கணித்துக்கொண்டு தீர்வொன்றைக் காண விழைவது நிறைவற்றதும் நிரந்தரமற்றதாகவுமே அமையும். இனப் பிரச்சினையில் முஸ்லிம் தரப்பு, மலையகத் தமிழர்களின் தரப்பு, வடக்கு கிழக்குத் தமிழர்களிலும் மாற்று அரசியற் கட்சிகளின் கருத்துக்கள் ஆகியவற்றையும் உள்ளடக்க வேண்டியுள்ளது. ஆனால், இவற்றுக்கான இடங்கள் தொடர்ச்சியாக மறுக்கப்பட்டே வருகின்றன. குறிப்பாக முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித் தரப்புக் கோரி அண்மைக் காலமாகப் பாரிய நிர்ப்பந்தங்களைச் செலுத்தி வருகிறார்கள். இது மறுக்கப்படுகின்ற நிலையில் அவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்பைக் கூட எதிர்க்கின்ற எல்லைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை முழுமையான ஒரு தீர்வின்பால் அரவணைக்க வேண்டிய தேசியக் கடமையொன்று இங்கு உள்ளது. மலையகத் தமிழர்களுக்கும் இத் தருணத்தில் தமது தனித்துவமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சந்தர்ப்பமளிப்பது எமது கடப்பாடாகும். இதேவேளை, மாற்றுத் தமிழ்த் தரப்புகளின் கருத்துக்களும் ஆராயப்படாது நிராகரிக்கப் படலாகாது. இந் நிலையில்தான் தற்போது ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைச் சபை என்ற புதிய அரசியல் அரங்கம் திறக்கப்பட்டுள்ளது. இது, பேச்சுவார்த்தை மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாக சகல அரசியல் கட்சிகளதும் ஆலோசனைகளைப் பெறும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது, தற்போது புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் முடங்கிப் போயுள்ள நிலையிலும், அரசியல் தீர்வு தொடர்பாக ஆராயும் ஒரு மாற்று அரங்கமாக இது அமைகிறது. நோர்வேயைப் பொறுத்தவரையில் இதனை நிராகரிக்க முடியாது. இச் சபை அர்த்தபுஷ்டியான ஆலோசனைகளை முன்வைக்குமானால் அவற்றைக் கருத்திலெடுத்துச் செயலாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். ஒருவேளை அத்தகைய ஆலோசனைகள் சர்வதேச அங்கீகாரத்தையும் ஈட்டிக்கொள்ளலாம். ஆனால், இது புலிகளின் தனித்த கருத்தொன்றையே முன்னிறுத்திப் பேச்சுவார்த்தையை நடத்துகின்ற முறையை மாற்றியமைக்கும் ஒரு ஏற்பாடாக அமைகிறது. அரசியல் பன்மைத்துவத்தை அங்கீகரிக்கும் வகையிலும், அனைத்துக் கருத்துக்களையும் பரிசீலிக்க வாய்ப்பளிக்கும் வகையிலும் அமைந்திருக்கும் இவ்வேற்பாடு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றே. தற்போது இதில் பங்குபற்றத் தயங்கும் எதிர்க் கட்சியான ஐ.தே.க. கூட கொள்கையளவில் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. அது, இந்த ஆலோசனைச் சபை புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த பின்னர் அமைக்கப்பட வேண்டுமென்ற தனது கருத்தையே தனது தயக்கத்துக்கான காரணமாக முன்வைக்கிறது. எவ்வாறாயினும் சென்ற 4ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இச் சபை தொடர்ந்து எப்படி வளரப் போகிறது? எத்தகைய வலுவைப் பெறப் போகிறது? காலக்கிரமத்தில் இதில் ஏனைய கட்சிகள் எவ்வளவு தூரம் பங்களிப்பை வழங்கப் போகின்றன என்பதைப் பொறுத்தே வெற்றிகரமானதாக அமையும்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நோர்வே மத்தியஸ்த அணுகுமுறை மாறுமா?

நரன்

நோர்வேயின் மத்தியஸ்தர்களுக்கு இலங்கை விவகாரத்தில் இந்த முறை எழுந்துள்ளதைப் போன்ற நிலைமை எப்போதும் எழுந்ததில்லையெனலாம். ஏனெனில் இம் முறை பேச்சுவார்த்தையின் இரு தரப்பினரதும் சரி பிழைகள் பற்றிய பிரச்சினைகள் மட்டுமன்றி, நோர்வேயினது மத்தியஸ்தம் பற்றிய கேள்விகளுக்கு நோர்வேத் தரப்பினர் முகங்கொடுக்க வேண்டியதாகியுள்ளது.

இதற்கு வித்திட்ட பிரதான காரணி வேறொன்றுமல்ல. தொடர்ந்து அதிகரித்த அளவில் நிகழ்ந்து வந்த அரசியற் படுகொலைகள்தான். மத்தியஸ்தம் வகிக்கும் மத்தியஸ்தர்களென்ற வகையில் இவற்றுக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமை நோர்வேக்கு ஏற்பட்டுள்ளது.

நோர்வே, மத்தியஸ்தப் பாத்திரத்தை நேரடியாக வகித்தாலும், இலங்கை விடயத்தில் நோர்வே மட்டுமன்றி ஏனைய பல சர்வதேச நாடுகளும் தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றன. அவர்களது தூதரகங்களும் விசேட பிரதிநிதிகளும் இங்கு நடப்பவற்றை நேரடியாக அவதானித்து தகவல்களைத் திரட்டியபடியுள்ளார்கள். அவர்களின் உளவுத் துறையினர் கூடப் பல்வேறு வகையில் இவை குறித்து தகவல்களைத் திரட்டிவருகிறார்கள். இவற்றினடிப்படையில் சர்வதேச நாடுகள், மோசமான நிலைமையை அடைந்துள்ள இவ்வரசியற் படுகொலைகள் குறித்து பெருத்த அதிருப்தி அடைந்துள்ளன. தமது அதிருப்திகளை வன்னி சென்று புலிகளிடத்தேயும் நேரடியாகத் தெரிவித்திருந்தன. அத்தகைய சர்வதேச நாடுகளின் அக்கறையையும் பொருட்படுத்தாமல் இப் படுகொலைகள் தொடர்ந்தபடியிருக்கின்ற நிலைமையில், நோர்வே நாடு வகிக்கும் மத்தியஸ்தப் பாத்திரம் குறித்த கேள்வி உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் எழத் தொடங்கியுள்ளது.

இப் படுகொலைகள் குறித்து, அவை மாற்றுக் கட்சிகளின் உட் படுகொலைகளேயென்று புலிகள் தரப்பால் கூறப்படும் கருத்தை வெறுமனே ஏற்கக்கூடிய நிலையில் தற்போது சர்வதேச நாடுகள் இல்லை. முன்னரும் பலதரப்பட்ட படுகொலைகளைப் புலிகள் மறுத்தே வந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்ற புலிகள், அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது நிகழ்த்திய அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரது படுகொலைகளைக் கூட புலிகள் இதுவரை தாமாக ஏற்றுக்கொள்ளவில்லை. அப் படுகொலையை மேற்கொண்டவர் தமது இயக்கத்திலிருந்து விலத்தியவரென்றே அப்போதும் அவர்கள் சாதித்தார்கள். ஆனாலும் அதில் கொல்லப்பட்ட தமது உறுப்பினருக்கு மாவீரர் அஞ்சலி செய்து வருகிறார்கள். தற்போது புலிகளின் பிரதிநிதிகளாகச் செயலாற்றும் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட அந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறார்கள். இதுபோலவே, கூட்டணியின் ஏனைய அரசியல் தலைவர்களான முன்னாள் பா.உக்களான தங்கதுரை, நிமலன் சவுந்தரநாயகம், முன்னாள் மேயர்கள் சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் மற்றும் மாநகர சபை உறுப்பினர் மதிமுகராசா ஆகிய பலரது கொலைகளுக்கும் உரிமை கோரவேயில்லை.

கூட்டணியினரது படுகொலைகள் மட்டுமன்றி ஏனைய இயக்கத் தலைவர்கள், உறுப்பினர்களது படுகொலைகள் பலவும் உரிமை கோரப்படவில்லை. ராஜீவ் காந்தியின் படுகொலை குறித்து இந்திய நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையிலும் கூட புலிகள் அதை தமது அறிக்கைகளில் மறுத்தே வருகின்றனர். அது குறித்துப் புலிகள் தெரிவித்த கருத்தானது, அது ஒரு துன்பியல் சம்பவம் என்பதாக மட்டுமே உள்ளது. இந்தக் கருத்தில் அச் சம்பவத்துக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதான நேரடி அர்த்தம் எதுவும் இல்லை. இது போலவே, பிரேமதாஸா, காமினி திஸநாயக்கா போன்றவர்களின் படுகொலைகளுக்கும் உரிமை கோரப்படவில்லை.

உண்மையில் பார்க்கப்போனால் படுகொலைகளைப் பொறுத்தவரை உரிமை கோராதிருக்கும் போக்கையே அவர்கள் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

இந் நிலையில் தற்போதைய படுகொலைகளை மட்டும் புலிகள் உரிமை கோருவார்களென எதிர்பார்க்க முடியாதென்பது சர்வதேச நாடுகளுக்குத் தெளிவாகத் தெரியும். அதனால் புலிகளின் மறுப்பை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்கள் இல்லை. தற்போது ஒரு படி மேலே சென்று, படுகொலைகள் தொடர்பான தமது கரிசனையைப் புலிகளிடம் நேரில் சென்று தெரிவித்துமுள்ளார்கள். இது புலிகள் கூறுகின்ற விளக்கத்துக்கு அப்பால், தாம் இவை குறித்த சுயமான அனுமானங்களை மேற்கொள்கின்றனரென்பதைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. இதேவேளை சர்வதேச மனித நேய அமைப்புக்கள் இப் படுகொலைகள் குறித்து உரத்த குரலில் தொடர்ச்சியாகக் கண்டித்து வருகின்றன.

இவற்றுக்கு மத்தியில் நோர்வே, எதுவும் தெரியாத பாசாங்கைத் தொடர்ந்து காண்பித்து வர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சர்வதேச நாடுகளும், மனித உரிமை அமைப்புகளும் இப் படுகொலைகள் குறித்து சுயமான அனுமானங்களை மேற்கொள்கின்ற நிலையில், நோர்வே இது குறித்து வலுவற்ற வியாக்கியானங்களை அவர்களுக்குத் தெரிவிக்க முடியாத நிலையிலுள்ளது. அத்துடன் அது வகிக்கும் மத்தியஸ்துவப் பாத்திரத்திற்கும் அது பதில் கூற வேண்டியுள்ளது. இப் பாத்திரத்தை வகித்தபடி இவை குறித்து மௌனம் காக்கவும் முடியாது. தன்னால் இப் படுகொலைகளை நிறுத்த முடியாதுள்ளதென்ற கையறு நிலையை முதலில் அது ஒத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அதேவேளை, அவ்வாறான நிலையில் அது தொடர்ந்தும் மத்தியஸ்தராகக் கடமையாற்றுவதில் அர்த்தமுள்ளதா என்ற கேள்விக்கும் பதிலளிக்க வேண்டியதாகியுள்ளது.

இப் படுகொலைகள் பாரதூரமான யுத்த நிறுத்த மீறல்கள் என்பது இங்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரமே வெளிப்படையாகிறது. அப்படியான யுத்த நிறுத்த மீறல்களை நிறுத்துவதற்காக அமைக்கப்பட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவால் இவற்றை நிறுத்தவும் முடியவில்லை, இதன் சூத்திரதாரிகள் குறித்து அனுமானங் கூடத் தெரிவிக்க முடியவில்லை. இந் நிலையில் தாமே வகுத்துக்கொண்ட உடன்படிக்கையைக் கூட தாமே அமுலாக்க முடியவில்லை என்ற நிலை நோர்வேத் தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மத்தியில் நோர்வேத் தரப்பால் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள் மிகவும் பொறுப்பற்றவையாக விமர்சிக்கப்பட்டன. நோர்வேயின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம், இச் சமாதான முன்னெடுப்புகளால் பெருமளவு உயிச் சேதத்தைத் தவிர்த்துள்ளதாகத் தெரிவித்திருந்தார். யுத்தமொன்றில் ஏற்படும் எழுந்தமானமான உயிர்ச் சேதங்களுக்கும், யுத்தமற்ற நிலையில் அரசியல் தலைவர்களும், செயற்பாட்டாளர்களும், மக்களின் பிரதிநிதிகளும் திட்டமிட்ட முறையில் கொல்லப்படுவதற்கும் உள்ள குணாம்ச ரீதியான வேறுபாட்டை அவர் உதாசீனம் செய்திருந்தார். இக் கூற்று மூலம் தற்போது நிகழும் படுகொலைகளைச் சொற்பமானவையாகக் காண்பிக்கவே அவர் முயல்வதாக விமர்சிக்கப்பட்டார்.

இவ்வாறான சங்கடங்களுக்கு மத்தியில் நோர்வேயைப் பரம சங்கடத்தில் மாட்டிய விடயம் யாதென்றால், இவ்வாறு அரசியற் படுகொலைகளுக்கு உள்ளான மாற்றுக் கட்சி செயற்பாட்டாளர்களது பிரேதங்களை நோர்வேத் தூதுவராலயத்துக்கு முன்னால் வைத்து ஆர்ப்பாட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டதுதான். மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வேயே இக் கொலைகளுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று இவ் வார்ப்பாட்டங்கள் சர்வதேச ரீதியில் சுட்டிக்காட்டுவனவாக அமைந்தன.

ஒவ்வொரு படுகொலையின் மரணச் சடங்குகளின்போதும் நோர்வே தனது பிரதான வாசலை மூட வேண்டியதாயும், பாதுகாப்புப் படைகளை உதவிக்கு அழைக்க வேண்டியதாயும் ஆயிற்று. படுகொலைகள் தொடர்ந்தால், தாம் நோர்வேத் தூதரகத்தைப் பிரேதங்களால் நிரம்பிய மயானமாக்கிக் காட்டுவோமென ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் நெல்சன் எதிரிசிங்க தெரிவித்திருந்தார்.

அண்மையில் நிகழ்ந்த ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் வர்ணகுலசிங்கத்தின் படுகொலையையடுத்து அவரது பிரேதத்தை நோர்வேத் தூதரகத்தின் முன்னால் வைத்துவிட்டு வெளியேறிய சம்பவம் நோர்வே அதிகாரிகளைப் பாரிய சங்கடத்தில் ஆழ்த்தியது. இதுதான் கடைசிப் படுகொலையாக இருக்குமெனவும் இதற்கு மேல் நிகழாதவாறு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் சமாதானம் கூறியே பிரேதத்தை எடுத்துச் செல்ல ஈ.பி.டி.பி.யினர் இணங்க வைக்கப்பட்டனர். எனினும் அதன் பின்னரும் யாழ்ப்பாணத்தில் 69 வயது முதியவரான ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினரொருவர் கொல்லப்பட்டார்.

இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கையால் நோர்வே சர்வதேச ரீதியில் பெருத்த அளவில் அவமானப் படுத்தப்பட்டது. உலகின் மத்தியில் தான் ஒரு நியாயமான, மனிதாபிமானங்கொண்ட, சமாதானப் பிரியரான, உதவிகரமான நாடென்ற தோற்றப்பாட்டை வெளிக்காட்டி வந்த நோர்வேக்கு, தமது தூதரகத்துக்கு முன், பிரேதங்களை வைத்து நீதி கோருவதை சர்வதேச ஊடகங்கள் படம்பிடித்துக் காட்டியதானது மிகுந்த தலைகுனிவை ஏற்படுத்தியது.

**ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடான டென்மார்க், புலிகளைத் தடைசெய்யப் போவதாக அறிவித்துள்ளது. தான் தடைசெய்வது மட்டுமன்றி ஐரோப்பிய யூனியனும் தடைசெய்ய வேண்டுமென அது வலியுறுத்துகிறது. திடீரென ஏற்பட்டிருக்கும் இந்தப் பாரிய திருப்பம் நோர்வேயின் அல்லது நோர்வேயையும் நெறிப்படுத்துகின்ற சர்வதேச சக்திகளின் மாற்று மார்க்கமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

இதேவேளை, அண்மையில் நோர்வேயில் நிகழ்ந்த இலங்கைப் பிரச்சினை தொடர்பான கருத்தரங்கொன்றில் நோர்வேயின் மத்தியஸ்தச் செயற்பாட்டின் குறைபாடுகள் குறித்து காரசாரமான விமர்சனங்கள் வெளிவந்திருந்தன. அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டிய இக்கட்டான நிலை நோர்வேக்கு ஏற்பட்டது.

இவ் வேளையில் நோர்வே, புலிகளுக்கு இராணுவப் பயிற்சி வழங்கியதாக குற்றச்சாட்டுக்கள் வேறு எழுந்தன. முன்னரும் புலிகளுக்கு தனது இராஜதந்திரச் சலுகைகளைப் பயன்படுத்தி சக்தி வாய்ந்த தொலை தொடர்புச் சாதனமொன்றை வரி விலக்குடன் தருவித்துக் கொடுத்தது பற்றியும் நோர்வே தனது மத்தியஸ்தவ வகிபாகத்தைத் தாண்டி அப்பாற் சென்று அவசியமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் பலத்த குற்றச்சாட்டு எழுந்திருந்தது. அந்த ரீதியில் இத்தகைய மற்றொரு குற்றச்சாட்டு அதன் நடுநிலைமையைப் பெருத்த சந்தேகத்துக்கிடமாக்குவதாக அமைந்திருந்தது. இந் நிலையில் புலிகளைத் தனது இராணுவ நிலைகளுக்கு அழைத்துச் சென்றதை ஏற்றுக்கொண்ட நோர்வே, பயிற்சி வழங்கியதென்ற கூற்றை மறுத்தது.

இத்தகைய பின்னணியில்தான் நோர்வே, உலக அரங்கில் தன் செயற்பாடுகள் சரியானவை எனக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை தோன்றியுள்ளது. ஆனால் அது தற்போது வகிக்கும் வலுவற்ற பாத்திரத்தால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஒருபுறம் படுகொலைகளை நிறுத்துவது கட்டாயமான தேவையாக அமைந்துள்ளது. அவை தொடருமானால் நோர்வே ஒரு கட்டத்தில் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். மறுபுறம், பேச்சுவார்த்தைக்கு முன்வர வைக்கக்கூடிய அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. தற்போதைய நிலையிலோ, நோர்வே இரு தரப்புக்குமிடையில் ஒரு தபாற்காரன் போல, ஒருவர் சொல்வதை மற்றவரிடம் தெரிவிப்பதும், இரு தரப்புகளின் அபிப்பிராயங்களையும் வெறுமனே கேட்டுக்கொண்டு இருப்பதுமாகவே செயலாற்றி வருகிறது. ஆனால் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையின் கனதியானது மிகப் பெரியது. இதற்கு மூன்றாந் தரப்பு இரு தரப்பையும் சற்று நெட்டித் தள்ளக்கூடிய விசையொன்றைப் பாவிக்க வேண்டியதாக உள்ளது. வெறும் தபாற்காரத்தனமான மத்தியஸ்தச் செயற்பாட்டால் இதனைச் செய்ய முடியாது.

இந் நிலையில், தற்போது சர்வதேச அரங்கில் ஏற்பட்டிருக்கும் பாரதூரமான சில மாற்றங்கள் குறித்தும் உற்று நோக்க வேண்டியுள்ளது. அதாவது ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடான டென்மார்க், புலிகளைத் தடைசெய்யப் போவதாக அறிவித்துள்ளது. தான் தடைசெய்வது மட்டுமன்றி ஐரோப்பிய யூனியனும் தடைசெய்ய வேண்டுமென அது வலியுறுத்துகிறது. திடீரென ஏற்பட்டிருக்கும் இந்தப் பாரிய திருப்பம் நோர்வேயின் அல்லது நோர்வேயையும் நெறிப்படுத்துகின்ற சர்வதேச சக்திகளின் மாற்று மார்க்கமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

டென்மார்க் பெரிய அளவில் இலங்கை விவகாரத்தில் பெயர் அடிபடாத ஒரு நாடாக இருந்து வந்தது. நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், கனடா, பிரித்தானியா, இந்தியா ஆகிய நாடுகள் காட்டிவரும் ஈடுபாட்டைப் போல் டென்மார்க்கினது ஈடுபாடு இலங்கையில் அதிகம் புலப்படவில்லை. இருந்தும் அது தடைவிதிக்கப் போவதாகத் தெரிவித்திருப்பதுதான் ஆச்சரியமூட்டுவதாக உள்ளது.

அண்மைக்காலத்தில் அதிகரித்த அளவில் நிகழ்ந்துவரும் அரசியற் படுகொலைகள், சர்வதேச நாடுகள் தூதுக்கு மேல் தூது சென்றபோதிலும் நிறுத்தப்படாமல், பதிலாக முகத்திலடித்தாற்போல் தூதுரைக்கும்போதுகூட நிகழ்ந்தேறியதானது சர்வதேச வட்டாரங்களைப் பெரும் விசனத்துக்குள்ளாக்கியிருந்தது தமது கருத்துக்களைப் பொருட்படுத்தாமல், தம்மைச் சிறுபிள்ளைகளாக எடைபோட்டு, தம்மால் நம்ப முடியாத காரணங்களைத் தெரிவித்துவிட்டு, ஏற்றுக்கொண்டாலென்ன, ஏற்றுக்கொள்ளா விட்டாலென்ன என்று நடந்துகொள்வது அந் நாடுகளை மேலும் கவலைக்குள்ளாக்கியது. அதனால்தான் வெறும் கருத்துக்கள் வாயிலான அழுத்தங்களைத் தாண்டி ஏதும் உயர்ந்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியுமென அவர்களால் உணரப்பட்டது. நோர்வே, நேரடியாக இதனைச் செய்ய முடியாத நிலையில் வேறு ஏதாவது இடத்திலிருந்து இந்த இராஜதந்திர அழுத்தத்தை ஆரம்பிப்பது பற்றிச் சிந்திக்கப்பட்டது. இதன் விளைவே டென்மார்க் புலிகளைத் தடை செய்யப் போவதாக அறிவித்திருப்பதாகும்.

யுத்த காலத்தில் சர்வதேச நாடுகள் சில பயங்கரவாதமென்ற அடிப்படையில் தடைகளை விதித்திருந்தது தெரிந்ததே. ஆனால் சமாதான காலத்திலும் தடை விதிக்கப்படுவதென்பது அசாதாரணமானதும் பாரதூரமானதுமான ஒரு விடயமாகும். இலங்கையிலேயே தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச நாடுகள் தடையை மீள ஆரம்பிப்பதெனத் தெரிவிக்கப்பட்டிருக்கும் செய்தியை இங்கே நாம் புரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய தடையொன்றை இக் காலத்தில் விதிப்பதற்கு எத்தனை தூரம் சிந்தித்திருக்க வேண்டுமென்பதையும் எடுத்து நோக்க வேண்டும். நோர்வே மத்தியஸ்தத்தின் அணுகுமுறை மாற்றம் காண்கிறதா அல்லது சர்வதேச இராஜதந்திரத்தில் நோர்வேயைத் தாண்டி மாற்றங்கள் நிகழ்கிறதா? பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# படுகொலைகள் ஒரு பார்வை

அலசுவது
**மதியூகி**

இலங்கையில் இனப் பிரச்சினையானது இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதும், தமிழ் பேசும் மக்கள், பெரும்பான்மையான சிங்கள மக்களிடமிருந்து கௌரவமான தீர்வொன்றைக் கோரி நிற்கிறார்கள் என்பதும் உண்மை. இதற்காக ஆயுதவழிப் போர் உட்பட அகிம்சாவழிப் போர் வரை நடத்தப்பட்டுவிட்டது. இவற்றின் தொடர்ச்சியாக சமாதானப் பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்த ஒப்பந்தங்கள் எனப் பல கட்டங்கள் கடந்து இப்போது மற்றுமொரு யுத்தத்துக்கான உள் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதற்கான எவ்வித சாத்தியமுமில்லை. மாறாக காலத்தை இழுத்தடிப்பதற்கான முயற்சிகளே அதிகரித்துள்ளன. இடைக்கால நிர்வாக சபை என்ற முட்டுக்கட்டை சமாதானப் பேச்சுக்கான பாதையைத் தடுத்து நிற்கிறது. நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதையே விரும்புவதாக அரசும், இடைக்கால நிர்வாக சபையை தம்மிடம் தருவதாக அரசு உத்தரவாதமளித்தாலே பேச்சுக்களுக்கு வர முடியும் எனப் புலிகளும் தமது பிடியை இறுக்கிக் கொண்டுள்ளனர். இந்த இழுபறி நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுக்க முடியாமல் வெளிநாட்டு உதவிகளை நம்பி அரசு காய் நகர்த்துகிறது. மறுபக்கம் தமது அரசியல் எதிரிகளையும் நிராயுதபாணிகளையும் அடக்கும் அல்லது கொலை செய்யும் தமது செயற்பாடுகளை புலிகள் செவ்வனே செய்து வருகின்றனர்.

இவ்வகையான இரண்டு நிலைமைகளையும் ஒருங்கே அவதானித்துக் கொண்டிருக்கிறது சர்வதேச சமூகம். அரச தரப்போ, புலிகளோ போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் சட்ட ஒழுங்குகளை மீறிச் செயற்படுவதை எவரும் ஏற்றுக்கொள்வதாக இல்லை.

இதன் விளைவு மிக மோசமானதாக அமைந்து வருகிறது. தரவுகளின் அடிப்படையில் புலிகளே அதிகளவான போர் நிறுத்த மீறலைப் புரிந்துள்ளனர் எனத் தெரிகிறது. இதன் தொடர்ச்சியாக கடந்த இரண்டு மாதங்களில் நடைபெற்ற அரசியற் படுகொலைகளையும் பார்க்கலாம்.

கடந்த ஜூலை ஏழாம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து அனுப்பப்பட்ட குண்டுதாரியின் இலக்குத் தவறியதால் டக்ளஸ் தேவானந்தாவை கொலை செய்யும் முயற்சிகளை வேறு ஒரு வடிவத்தில் தயாரிக்கும் இதே நேரம், அவருக்கு மிக நெருக்கமானவர்களைக் குறிவைக்கும் திட்டம் தீட்டப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவே படுகிறது. ஏனெனில் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி.யின் முக்கியஸ்தர்களின் படுகொலைகள் அதையே சுட்டி நிற்கின்றன.

## படுகொலை 01

2004 ஜுலை 21ஆம் திகதி



வேலாயுதம் ரவீந்திரன்

அம்பாறையில் கமலன் என்று அழைக்கப்படும் வேலாயுதம் ரவீந்திரன், பொலிஸ் பாதுகாப்புடன் இருக்கும்போதே சுட்டுக் கொல்லப்பட்டார். ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தலைவராகவும், ஈ.பி.டி.பி.யின் அம்பாறை மாவட்ட பிரதி அமைப்பாளராகவும் இருந்த அவர், அன்றைய தினம் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியான அக்கரைப் பற்று பஸ் தரிப்பிடத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தார். அவருடன் பொதுமக்கள் உட்பட சக தோழர்களும் கலந்துகொண்டனர். கூடவே அவரது அம்மா, மனைவி, மூன்று வயதுக் குழந்தையும் இருந்துள்ளனர். ஆயுதப் பயிற்சி பெற்றிருந்தவர் என்றாலும் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு நிராயுதபாணியாகவே மக்களுக்கான சேவையிலீடுபட்டு வந்தார். சிரமதானப் பணிகள் முடிந்து பஸ்ஸில் ஏறுவதற்காகக் காத்திருந்தபோது அம்மா, மனைவி, குழந்தை, இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முன்பாகவே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இரு புலிகளே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என அருகில் நின்ற ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தெரிவித்தனர். புலிகளின் இச் செயற்பாடு நிறுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாக ரவீந்திரனின் சடலம் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டு நோர்வே தூதரகத்துக்கு முன்பாக பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஈ.பி.டி.பி.யினர் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் சர்வதேச சமூகம், இப் படுகொலைகள் நிறுத்தப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற மகஜர் கையளிக்கப்பட்டது. இதன் பிரதிகள் அனைத்துத் தூதரகங்களுக்கும் கையளிக்கப்பட்டன.

## படுகொலை 02

2004 ஆகஸ்ட் 10ஆம் திகதி திருமலையில் மற்றுமொரு ஈ.பி.டி.பி. முக்கியஸ்தரான பாண்டியன் என்று அழைக்கப்படும் ஆத்மலிங்கம் - ரமணி கொல்லப்பட்டார். அன்றைய தினம் இரவு தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் இரவு உணவு உட்கொண்டிருந்தபோது, வீட்டுக்குள் திடீரென்று புகுந்த புலி துப்பாக்கிதாரிகள் இவர் மீது சரமாரியாகச் சுட்டுள்ளனர். உணவுக்கு மேலே இரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தார் ரமணி. அவரது மனைவி, மூன்று மகன்கள் கண் முன்னாலேயே இக் கொடூரம் நிகழ்ந்து முடிந்தது. இவர் சென்றமுறை ஈ.பி.டி.பி. சார்பில் திருமலையில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டவர். தவிரவும் இடம்பெயர்ந்த மக்களுக்காக பல மீள் குடியிருப்புத் திட்டங்களை முன்னின்று செய்தவர், ஈ.பி.டி.பி.யின் திருமலை மாவட்ட பிரதி அமைப்பாளர். இதற்கும் மேலாக ஆரம்ப காலப் போராளிகளில் ஒருவராகத் திருமலை மக்களால் பெரிதும் மதிக்கபடப்பட்டவர். மூன்றாம் மனிதருக்குக் கேட்கும் அளவுக்கு உறக்கக் கூடக் கதைக்காதவர்.



ரமணி

மாகாண சபை உறுப்பினராக இருந்து திருமலை வாழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை தன் சக்திக்கு ஏற்ற வகையில் செய்து முடித்தவர். ஆயுதப்பயிற்சி தெரிந்தும் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஏற்ப ஈ.பி.டி.பி. ஆயுதங்களை மீள ஒப்படைத்த போது இவரும் நிராயுதபாணியானார்.

இவரது சடலத்துக்கு மக்கள் பெருந்திரளாக வருகை தந்து தங்கள் அஞ்சலியை செலுத்துவதைப் பொறுக்க முடியாமல் அன்று இரவு 9.30 மணியளவில் இவரது வீட்டுக்கு அருகில் கைக் குண்டொன்றும் வீசப்பட்டது. எனினும், மக்கள் அதைப் பொருட்படுத்தாமல் திரண்டு வந்து தங்கள் அஞ்சலிகளைச் செலுத்தினர். பின்னர் இவரது சடலத்தை திருமலை கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாகக் கொண்டு சென்ற ஈ.பி.டி.பி.யினர், "கொலைகள் நிறுத்தப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

## படுகொலை 03



பாலநடராஜ ஐயர்

ஆகஸ்ட் 16ஆம் திகதி மற்றுமொரு ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் பாலா என அழைக்கப்படும் கந்தசாமி ஐயர் பாலநடராஜ ஐயர் கொழும்பு, வெள்ளவத்தையில் டபிள்யூ.ஏ.டி.சில்வா வீதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் சுமார் 32 வருடங்களாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட அநுபவமிக்கவர். அதாவது, சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவர். மாணவர் பேரவையில் ஆரம்பமான இவரது போராட்ட வாழ்க்கை பின்னர் ஈரோஸ் அமைப்பில் தொடர்ந்தது. ஈரோஸ் இயக்கம் பிளவுபட்ட பிறகு, ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பில் சில காலம் இருந்துவிட்டு அவ்வியக்கத்திற்குள்ளும் பிளவுகள் உண்டானதை அடுத்து, ஈ.பி.டி.பி.யில் தன்னை இணைத்துக்கொண்டவர். சிறந்த எழுத்தாளராக நியாயமான ஊடகவியலாளராக இருந்ததுடன் ஈ.பி.டி.பி.யின் பிரசாரச் செயலாளராகவும் இருந்தவர். நேரடியாகவும், மறைமுகமாகவும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டாலும் ஜனநாயகப் பாதையில் துணிந்து இறங்கியவர்.

மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான இவர், அன்றைய தினம் காலை தனது இளைய மகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, அலுவலகம் செல்வதற்கு வீதியில் காத்திருக்கும்போது மோட்டார் சைக்கிளில் வந்த புலிகள் நிராயுதபாணியாக நின்றிருந்த ஒரு பிராமணரைத் தயவு தாட்சணியமின்றிச் சுட்டுச் சரித்தனர்.

இவரது மரணம் ஜனநாயக செயற்பாடுகளில் நம்பிக்கை கொண்டிருந்தவர்களையும் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பவர்களையும் உலுக்கியது. அதுவும் தலைநகரில் பட்டப்பகலில் இப்படியொரு படுகொலையைப் புலிகள் செய்வார்கள் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இதன் மூலம் புலிகள் தங்கள் மீது சேற்றை வாரிப் பூசிக்கொண்டனர் என்று மனித உரிமை ஆர்வலர்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

இவரது சடலம் கொழும்பிலுள்ள தூதரகங்கள் முன்பாகக் கொண்டு செல்லப்பட்டதோடு இதற்கு மேலும் சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டிருக்காமல் இப் படுகொலைகள் நிறுத்தப்படுவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஈ.பி.டி.பி.யினர் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இது பலரினதும் கவனத்தை ஈர்த்தது.

ஆகஸ்ட் 15ஆம் திகதி ஆடி அமாவாசை என்பதால் இறந்தவர்களுக்குப் படையல், பூஜை செல்வதற்காக சின்ன பாலா நிச்சயம் வீட்டுக்கு வருவார் என்று தெரிந்து கொண்ட புலிகள், அடுத்த நாள் அவருக்கு குறிவைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## படுகொலை 04

2004 செப்டெம்பர் 11ஆம் திகதி மற்றுமொரு ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் அருள்தாஸ் என அழைக்கப்படும் மாயவன் சந்திரமோகன் அவரது வீட்டில் வைத்துச் சுடப்பட்டார். 1992ஆம் ஆண்டில் தீவகப் பகுதியில் மக்களை மீள் குடியமர்த்தும்



சந்திரமோகன்

வேலைத்திட்டத்தில் ஈ.பி.டி.பி. ஈடுபட்டிருந்த சமயம், ஈ.பி.டி.பி.யில் இணைந்து கொண்டவர். மானிப்பாய் பிரதேசசபைத் தலைவராக, வடகடல் பணிப்பாளர் சபை உறுப்பினராக, வடமராட்சி அமைப்பாளராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளராக இருந்தவர். அன்றைய தினம் சகதோழர் ஒருவரின் திருமண வீட்டுக்குச் சென்று, தேநீர் பருகிக்கொண்டிருக்கும்போது வீட்டுக்குள் புகுந்த இரண்டு புலி உறுப்பினர்களால் சுடப்பட்டார். காயத்துடன் வீட்டை விட்டு வெளியே ஓடியவரை புலிகள் துரத்தித் துரத்திச் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் இவரது சடலம் யாழ்ப்பாணத்திலுள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்கு முன்பாகக் கொண்டு செல்லப்பட்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது.

---

# அதிரடி அய்யாத்துரை



**ரெண்டெழுத்தாற்ர** வெளி நாட்டுப் பயணத்தில ஏதோ முக்கியமான விசயமிருக்க வேணுமெண்டு பட்சி சொல்லுது. போன ஆக்களெல்லாம் அவையின்ர முக்கிய தூண்களாய் இருக்குது. தமிழ்ச்செல்வன் தலைமையில, முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமார், முன்னாள் ஈரோஸ் முக்கியஸ்தரும் இந்நாள் நீதித்துறைப் பொறுப்பாளருமான பரா ஆகியோரோட அரசாங்க அதிகாரியான செல்வினும் போயிருக்கினமாம். அங்க, அரசியல் ஆலோசகர் பாலாண்ணையோட மந்திர ஆலோசனை நடத்திப்போட்டு, வெளிநாட்டு ராஜதந்திர நகர்வுகளில இறங்கப் போகினமாம். இவையோட இடையில போய்ச் சேர இங்க, கூட்டமைப்பு எம்பிக்கள் கஜேந்திரகுமாரும் ஜோசெப்பாரும் பயணங் கட்டுகினமாம். நடக்கிற அடுக்குகளைப் பாத்தால், பெரிய பொலிடிகல் மூவ்தான் போல கிடக்கு. என்னவாயிருக்குமெண்டு நண்பரொருவரிட்டக் கேட்டன். இங்க நடக்கிற அரசியல் படுகொலைகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையெண்டு வந்து போற வெளிநாட்டு ராஜதந்திரிகளெல்லாருக்கும் சொல்லச் சொல்ல நம்பினமில்லை, உலக நாட்டுப் பேப்பர்களும், மனித உரிமை அமைப்புகளும் கண்டனக் குரல் கிளப்பத் தொடங்கிவிட்டுது. அதுதான் இங்கயிருந்து சொல்லிப் பிரயோசனமில்லையெண்டு வெளிநாடுளுக்கே நேராய்ப் போய் சொல்ல முடிவுசெய்திட்டினமாக்குமெண்டார். சீச்சீ, அதுவாயிராது. இது அதையும் தாண்டின பெரிய விசயம். இடிக்கு முந்தின மின்னலோ தெரியேல்லை. இருந்துதான் பாக்க வேணும்...

**அங்க** இந்தப் பெரிய பொலிட்டிகல் மூவ் நடக்குது. எங்கட சம்பந்தரை ஏன் கழிச்சு விட்டிட்டினமெண்டதுதான் வியப்பாய்க் கிடக்குது. வெளிநாட்டுப் பயணம், வெள்ளைக்காறரோட கைகுலுக்கிற தருணமெண்டால், தேனைக் கண்ட கரடி போலயெல்லே நாக்கு ஊறும் அவருக்கு. வெள்ளக்காறங்களுக்கு நடுவில விட்டால் வெளுத்து வாங்கியிருப்பாரே தன்ர சிம்மக் குரலில. இது நிச்சயம் உள்வீட்டுச் சதிதானெண்டு சொல்லினம் சமாச்சாரம் தெரிஞ்சவை. அமெரிக்காவுக்குப் போன நேரம் கொழும்பில அமெரிக்கன் எம்பஸிக்கு முன்னால குண்டு வெடிச்சதுக்குப் பயந்து, அமெரிக்க ராஜதந்திரி கிறிஸ்டினா றொக்காவைச் சந்திக்காமல் நழுவிவிட்டாரெல்லே. கடைசியில கஜேந்திரகுமார் மட்டும்தான் தனித் தவில் வாசிக்கப்போய்த் தத்தளிச்சுப் போனார், றொக்கா உருட்டி உருட்டிக் கேட்ட கேள்விகளில. பிறகு கனடா போயும் குடும்பத்தோட மட்டும் கொண்டாடிவிட்டு வந்திட்டாராம், வெளி விசயங்களில அதிகம் தலைகாட்டினால் தன்ர விசாவுக்குப் பிரச்சினையாகிப்போயிடுமெண்டு. இதப் பாத்துக்கொண்டிருப்பாங்களோ, எங்கட எம்டனுகள். அங்க போய் அள்ளி வைச்சிட்டாங்கள். அள்ளி வைச்ச நெருப்பு உள்ளால கொள்ளி பத்தி எரிஞ்சு, இப்ப ஆளத் தள்ளி வைக்கிற அளவுக்கு வந்திட்டுது. என்னயிருந்தாலும் ஒரு மூத்த தலைவரெல்லே. அவரிருக்கேக்க, அவரை விட்டிட்டு அவருக்கு இரண்டாவதாயிருக்கிறவரையும், இப்பதான் அரசியலுக்கு வந்த இளவட்டத்தையும் வேணுமெண்டே தூக்கிறது அவருக்கு விழுந்த பெரிய அரசியல் அவமானமெல்லோ? ஐ ஆம் ஸோ ஸாட்!

**என்ன** நடந்தது மன்னார்ச் சனத்துக்கு? இப்பிடி அள்ளுண்டுபோய் எரிச்சுத் தள்ளியிருக்குதுகளே அலுவலகத்தை! இப்ப கொஞ்ச நாளுக்கு முந்தித்தான் மன்னார் ஆயர், தமிழ் மக்கள் இனியும் பொறுத்திருக்க மாட்டார்களெண்டு சொன்னதாத் தலைப்புச் செய்தி வந்திருந்தது. அதுக்காக இப்பிடிப் பொங்கிறதா? இந்த அளவு மோசமாய் ஒரு நிகழ்சசி நடக்கிறதுக்கு எந்தளவு புகை உள்ளுக்குப் புகைஞ்சிருக்க வேணும். புகை மணக்க முன்னமே தண்ணி ஊத்தித் தணிக்கிற ஆக்களெல்லாம் என்ன செய்துகொண்டிருந்திச்சினமாம் ஏமாந்தபடி? எல்லாம் போகட்டும். இப்ப கொஞ்ச நாளுக்கு முந்தித்தான் குருநகரில சனம் கெம்பியெழுந்து பெரிய அமளிபண்ணிப் போட்டு நிக்குது. அதையெண்டாலும் ஏதோ ஒருமாதிரி அசடு வழிஞ்சாவது, உதுஉளவுத் துறையின்ரயும் ஊடுருவல்காறரையும் வேலையெண்டு எங்கட பேப்பர்க்காறரெல்லாம் காரணத்தைக் 'கண்டுபிடிச்சுப்' போட்டிருந்திச்சினம். இந்த மன்னார் குழப்பத்துக்கும் ஏதேனும் ஒரு துரோகக் கும்பல உடன தேடிப் பிடிக்க வேண்டாமோ? பேசாமல் நிக்கினமே? பெரியவை எல்லாம் வெளிநாடு போயிட்டினமெண்டிட்டு கண்ணயர்ந்து தூங்கிவிட்டினமோ? வெரி பேட்!

**கிரான்** நிகழ்ச்சிக்குப் போக இருந்த கிழக்கு கூட்டமைப்பு எம்பி ஜெயானந்தத்தாரை அங்கத்தைச் சனம் வர வேண்டாமெண்டு கூறி வரவேற்றிருக்கிற விசயந்தான் வித்தியாசமாக் கிடக்கு. இப்பிடியொரு வரவேற்புக் கிடைக்கிறதில வசதியும் இருக்குத்தான். இந்த நேரத்தில கூட்டம் கீட்டமெண்டு போய், ஏதும் வில்லங்கத்துக்க மாட்டுப்படாமலிருக்கிறது உசிதமெல்லே. அது போக, ஏன் உங்களுக்கு அப்பிடியொரு வரவேற்புக் கிடைச்சதெண்டு கேட்டதுக்கு அவர் சொன்ன காரணம் இன்னும் குழப்பமாக் கிடக்குது. கிரான் கருணா பிறந்த ஊரெண்டதால அங்க வர வேண்டாமெண்டிட்டாங்களாம். அப்பிடியெண்டால் அங்க அவருக்குச் செல்வாக்கு இல்லையெண்டு அவரே சொல்லுற மாதிரிக் கிடக்கே. அதெண்டாலும் பரவாயில்லை, ரெண்டெழுத்தாருக்கு வேண்டாதவைக்கெல்லோ அங்க செல்வாக்கிருக்கிறதா ஆகுது? வலு வில்லங்கத்துக்கயெல்லே மாட்டுப்படப் போறார். மெட்டரைக் கெதியாக் கரெக்ட் பண்ணிக் கொள்ளுங்கோ. இல்லாட்டால் அள்ளி வைக்கிறதுக்கு இருக்கினம் ஆக்கள்.

**இந்தியாவில** சேது சமுத்திரத் திட்டம் வந்தால் இலங்கைக்குப் பெரிய இடியாத்தான் இருக்கப் போகுது. கொழும்புத் துறைமுகத்துக்கிருக்கிற சர்வதேச மார்க்கெட் சரியப் போகுது. சர்வதேசக் கடற் போக்குவரத்துக்குச் சுத்தி வளைச்சுத் திரியாமல், இடைக்குள்ளாலயே ஒரு குறுக்கு வழி கிடைச்சிடும். ஒருவேளை யாழ்ப் பாணத் துறைமுகத்துக்கு மவுசு வந்தாலும் வரக்கூடும். அதுபோக, இப்பதான் எங்கட ஆக்கள் எதிர்ப்புக் காட்ட வெளிக்கிட்டிருக்கினம். அது, அவங்கட நாடு, அவங்கட கடலெல்லை. எங்களால என்ன செய்ய ஏலும்?

**புதிய** ஒரு ராஜதந்திர நகர்வா, அரசியல் ஆலோசனைச் சபையொண்டக் கூட்டுறா ஜனாதிபதி. ரெண்டெழுத்தாரோட மட்டும் பேசிறதெண்டிருந்தா ரெண்டெழுத்தார் நினைச்ச திக்கிலதான் பேச்சுக்கள் நகர வேணுமெண்டு நிப்பினமெண்டதால, எல்லாற்ர கருத்துக்கும் இடங்குடுக்கிறதுக்கான புதிய அரங்கமொண்டை அமைக்க வெளிக்கிட்டிருக்கிறா. இது, அரசாங்கம் தீர்வை அடையிறதில தீவிரமாத்தான் இருக்குதெண்டும், தடைகளைக் கடந்தும் நடைபோட முயற்சிக்குதெண்டும் எடுத்துக்காட்டிறதாயும் ஆயிடும். இதைத் தவிடுபொடியாக்க ரெண்டு வட்டாரங்களுக்கு ஆர்வமாயிருக்குதாம். ஒரு பக்கம் ரெண்டெழுத்தார். அவையவிட மற்றாக்களைச் சேக்கிறது அவைக்குப் பிரச்சினை. மற்றப் பக்கம் எதிர்க் கட்சி, ஐ.தே.க. அரசாங்கத்தின்ர சிக்கல் தீர்ந்து, வெளிநாட்டுக் கடனுதவி கிடைக்க இடங்குடுக்கக் கூடாதெண்டது அவையின்ர பிரச்சினை. எவைக்கு என்ன பிரச்சினையாயிருந்தாலும் சனத்தின்ர பிரச்சினையைத் தீர்க்க வழி விட்டால் சரி!

## அல்ஹாஜ் அப்துல் ஆலிம் வலிய்யுல்லாஹ் நிதியம் நடாத்தும்

ஹம்ஙத் ஹாஜா முயீனுத்தீன் சிஷ்தீ றழி
ஹம்றத் ஹாஜா பக்றுத்தீன் சிஷ்தீ றழி
ஆகியோரின்

### 18ஆவது வருட ஹாஜாஜீ மகாகந்தூரி

இடம்- மஸ்ஜிதுர் றப்பானிய்யஹ் (பத்ரிய்யஹ் ஜு ம்அஹஜ பள்ளிவாயல், காத்தான்குடி-05



புனித திருக்கொடியேற்றம்
01-10-2004 வெள்ளி மாலை 5.55 மணி

புனித மகாகந்தூரி
10-10-2004 ஞாயிறு காலை 9.30 மணி

GNF அலுவலகம் திறந்து வைத்தல்
03-09-2004 வெள்ளி பி.ப சனி இரவு 8.30 மணி.

காணிக்கை நேர்ச்சைகளை அனுப்புவதற்கு: காசுக்கட்டளை மூலம் பணம் அனுப்புவதாயின் பணம் பெறுபவர் - SECRET ARY, G.N.F
பணம்கொடுக்கும் தபாற்கந்தோர்: KATTANKUDY

காசோலை மூலம் பணம் அனுப்புவதாயின்
GAREEB NA WAZ FOUNDATION
A/C No:-7955900
Seylan Bank
Kattankudy



**GAREEB NA WAZ FOUNDATION**
**BJM Road,**
**Kattankudy .**

Fax&T el - 065-2245625, Tele- 065-2245542

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.
ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பி.கு.
துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.


கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப் பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

## 1ஆம் ஆண்டு நினைவலை

மலர்வு 25 02 1933



உதிர்வு 07 10 2003

### அமரர் துரையப்பா ஞானசேகரம்

**ஞானம்ஸ் லைற் உரிமையாளர், சுன்னாகம்.**

Canada திதி: 06. 10. 2004


**எங்களின் குடும்ப குல விளக்காக இருந்துவந்த அருமைத் தந்தையே! எம்மை வளர்த்தெடுத்து நல்வழிகாட்டிய அருமைப் பிதாவே!**
**எங்கள் தெய்வமே! அப்பா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டு மறையாது.**
**உங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்கிறோம்**

தகவல்: மகள கீதாஞ்சலி குடும்பம் (Swiss)
தொலைபேசி:- 01797226514 (0041)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.


Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

## மலையாள மாந்திரீக சக்தி
## கை கண்ட பலன் பெற




பேராசிரியர் கருணாகரபூஷணம் உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி

**எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்**

பிரிந்தவர்கள் ஒன்றுசேர, திருமணம் கைகூட, காதலில் வெற்றிபெற, பிரயாண தடை நீங்க, வியாபாரம் விருத்தியடைய, கல்வி ஞானம் பெற, கூந்தல் வளர, இளநரைக்கு திட்டவட்ட ஔஷதம் பெற, கூந்தல் கறுக்க, இன்னும் பல தேவைகளுக்கு தெட்டத்தெளிவான ஜாதகம் எழுதிக்கொள்ள, இப்படியான பல பிரச்சினைகளுக்கு தெய்வீக அருள் ஆசியுடன் வெற்றி பெற்றோர் எத்தனை எத்தனையோ, மாந்திரீகர்கள் இருந்தாலும் வாடிக்கையாளர்கள் என்னை தேர்ந்தெடுப்பதன் காரணம் எனது வேலையின் புனிதத்தன்மையே. முடியாத வேலைகள் இங்கு பாரம் எடுப்பது கிடையாது.



**யோகேந்திரன், டோகாகட்டார்!!**
அன்றும் இன்றும் என்றும் உலகம் போற்றும் மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு! ஐயா நீங்கள் அனுப்பிய மோதிரம் மற்றும் சாந்திப் பொருட்கள் பாவிக்க ஆரம்பித்தவுடன் மின்னல் வேகத்தில் எனது எண்ணம் போல், கொம்பனி மாற்றம் நடைபெற்றது. யோகேந்திரன் என்பவரை உங்கள் கொம்பனிக்கு தருகிறோம் ஆனால் எனது Pass Port மட்டும் இன்று தருகிறோம் நாளை தருகிறோம் என்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். இதனால் பெரும் மனக் குழப்பத்திலும் வேதனையுடனும் இருக்கின்றேன்.
ஐயா அவர்கள்தான் எனது Pass Port.



**சீனத், கொழும்பு 15.**
அன்புள்ள ஐயா!
எங்கள் குடும்பத்தைப் பிரிக்க குடும்பத்தாரே செய்த சூனியக் கோளாறினால் அல்லற்பட்டுத் தவித்து உங்களிடம் வந்து கேட்டோம் தாங்கள் செய்த பரிகாரத்தில் நாங்கள் ஒரு கிழமைக்குள் ஒற்றுமையாகிவிட்டோம். மிகவும் சந்தோஷம்.

**பிரபாவதி பொரளை!**
மதிப்பிற்குரிய சாமி ஐயா! அவர்களுக்கு!வணக்கம்
ஐயா! நான் உங்களின் கோயிலில் வந்து என் தம்பியின் குழந்தையின் வருத்தம் மாற வேண்டும் என்றுநேர்த்திக்கடன் போட்டு பரிகாரம் செய்தேன். இப்பொழுது குழந்தையின் வருத்தம் மாறிவிட்டது. எனவே P. K.சாமி ஐயா உங்களின் கோயிலில் வந்து வேண்டியதால் இப்போது நாங்கள் நல்ல சந்தோஷமா இருக்கிறோம். மிக்க நன்றி.

**பாமா, பம்பலபிடிய.**
கருணை உருவம் கொண்ட ஐயா அவர்களுக்கு எனது மகள் மீராவுக்கு சனிக் கோளாறுக்கும் திருமண நிவர்த்திக்காகவும் மகளின் படிப்பிற்காகவும் தங்களை நாடி விடிவு தேடி வந்தேன். ஐயா அவர்களின் கருணையாலும் பரிகார சக்தியாலும் எனது மகளின் சனியன் கோளாறு நீங்கிவிட்டது. மேலும் எனது மகளின் படிப்பில் முதல் பரீட்சை முடிந்தது. சித்தியெய்தி விட்டார். மேலும் மீண்டும் எனது மகள் (லண்டன்) பரீட்சை எடுக்க இருப்பதால் அதற்கும் ஐயாவே பரிகாரம் செய்து என் மகள் சித்தி செய்து தருமாறு அருள் புரிய வேண்டும் என ஐயா அவர்களின் கருனையையும் உதவியையும் பணிவுடன் நாடி நிற்கிறேன்.

**திவாகராஜா, கொழும்பு.**
மான்புமிகு P.K. சாமி ஐயா அவர்களுக்கு நாங்கள் வெள்ளவத்தைக்குச் சென்ற சமயம் வருகை தந்திருந்த வேளையில் தங்களை தங்கள் இடத்திலேயே நாங்கள் போது எங்கள் மகள் அவிநந்தனை தங்களிடம் காட்டி எங்கள் பிள்ளையின் எதிர்காலக் கல்வி சம்பந்தமாகக் ஆசி பெற்றுச் சென்றோம். அதன் பிரகாரம் எங்கள் பிள்ளை கல்வியிலேயே சிறந்து விளங்குகிறார். அதேபோல் மேலும் எங்கள் பிள்ளைகளை கல்வியிலே சிறந்தவர்களாகவும் எதிர்காலத்தில் நல்ல திறமைசாலிகளாகவும் மிளிர தங்களது நல்லாசியினை வழங்குமாறு மிகவும் பணிவன்போடு வேண்டுகிறோம்.
நன்றி.

**கமலகுமாரி, செங்கலடி.**
பேரருட் கடல் ஐயா அவர்களுக்கு!
என் தலையில் சுமை ஏற்பட்டிருந்த நேரம். அவசிய பண தேவை. விண்ணப்பித்த கடனும் கிடைக்காத நிலை. என் கௌரவத்திற்கு சவாலாகப் பணப் பிரச்சினை மனதைப் பாதித்தது. தங்களின் அன்பும் அருளாசியும் ஆதிபராசக்தியின் கருணையும் என் மேல் பட்டதும் என் சுமை பஞ்சாகிப் பறந்தது. நான் சுதந்திரப் பறவையானேன். எல்லாவற்றுக்கும் மூலகாரணம் அன்னையும் தாங்களுமே இவற்றுக்கு எல்லாம் என்ன கைமாறு செய்வது என்று தவிக்கும் நிலையில் உள்ளேன். எனது குழப்ப நிலைக்கு இன்றும் மேலேற எனது நட்ட ஈட்டு பணமும் வர வேண்டும் என்பதற்கு மென்மேலும் அன்னையினதும் தங்களினதும் ஆசீர்வாதத்தை வாழ் நாள் வரை வேண்டி நிற்கின்றேன். அன்னையின் ஆசியும் தங்களின் ஆசியும் வேண்டி நிற்கும்
கமலகுமாரி.

**சுகிர்தா, கொட்டாஞ்சேனை.**
கனம் ஐயா அவர்களுக்கு! எனது காலில் புழு வெட்டு இருந்தது. மிகவும் வேதனையுடன் உங்களிடம் வந்து மருந்து செய்தேன் இதன் போது எனக்கு இருந்து வந்த புழு வெட்டு மட்டும் (வட்டமான இடம்)மறைந்துவிட்டது. இப்போது பரவலாக தலைமுடி உதிர்ந்தவண்ணமே இருக்கின்றது. இதையும் நிறுத்தித்தர பரிகாரம் வேண்டுகிறேன்.
நன்றி

**கீர்த்தனா, செங்கலடி.**
எனது சகோதரி அ. குஜயபாரதி நேர்முகப் பரீட்சைக்காக சுவாமியின் அருள் வேண்டி வந்தார். சுவாமியின் ஆசீர்வாதத்தாலும் அன்னையின் அருளினாலும் சகோதரி எவ்வித இடையுறும் இன்றி நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டார். மேலும் அவரது நியமனக் கடிதம் 08.06.2004 கிடைக்க இருப்பதால் அதனையும் சுவாமியின் ஆசீர்வாதத்தால் பெறுவதற்கு தங்களை அன்னை அருளால் வேண்டி நிற்கின்றோம்.
நன்றி.

குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.)J.P .**
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி: 0112470615-2342463-2342464
தொலைநகல்: 0112344831

நுவரெலியாவில் :
33, Daily Fair Complex, Nuwara Eliya.
Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508

எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

# இன்னொருவர் பார்வையில்

**அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் "உதயம்" என்ற அரசியல் மாத இதழ், புலிகள் இயக்கம் சமர்ப்பித்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான ஆய்வொன்றினை நடத்தியுள்ளது. எழுவான்கரையான் என்பவரால் எழுதப்பட்ட இந்த ஆய்வுக் கட்டுரை கடந்த மாத 'உதயம்' இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதனை இங்கே தருகிறோம்.**

# புலிகளின் தன்னாட்சி அதிகார யோசனை எதேச்சாதிகார தர்பாருக்கு வழிவகுக்கும்

செப்டெம்பர் மாத முற்பகுதியில் மட்டக்களப்புப் பகுதியில் உள்ள தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில், புலிகள் தங்கள் முகாம் ஒன்றின் மீதான ஆயுதத் தாக்குதல் ஒன்றை எதிர்கொண்டனர். அரசுக்கும் புலிகளுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் புலிகளின் முகாமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட முதல் ஆயுதத் தாக்குதல் இது என்று கொள்ளப்படுகிறது. இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுவிட்டதாக புலிகள் தரப்பில் கூறப்பட்டாலும், இந்தத் தாக்குதலின்போது பல புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன், அவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக புலிகளுக்கு எதிரான ஊடகங்களில் தெரிவிக்கப் பட்டிருந்தது. இந்தத் தாக்குதலை அரச தரப்பே மேற்கொண்டதாகப் புலிகள் குற்றஞ்சாட்டியபோதும் தமக்கு இதில் எவ்வித சம்பந்தமும் இல்லை; இது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெற்றதால் அதுபற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என அரசபடைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தாக்குதலை அடுத்து அரச படையினரைக் குற்றஞ்சாட்டி, எச்சரிக்கை தொனிக்கும் அறிக்கை ஒன்றை புலிகளின் பேச்சாளர் தமிழ்ச்செல்வன் வெளியிட்டிருந்தார். அரச பகுதிகளில் புலிகள் கொலைகளையும், தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தியபோதெல்லாம், அதுபற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது, இவை அரச பகுதிகளில் நடைபெற்றன என்பதால் அது பற்றி அரசையே கேளுங்கள் என குதர்க்கமாகப் பதில் தந்தவர் தமிழ்ச்செல்வன். ஆனால் இப்போது தங்கள் பகுதியில் நடைபெற்ற தாக்குதல் பற்றிக் கூறும்போது மட்டும் அதற்கு அரசு பொறுப்பு என்று அவர் குற்றஞ்சாட்டுகிறார். அப்போது தமிழ்ச்செல்வன் கூறிய அதே பதிலை திருப்பிக் கூறியிருக்கின்றனர் படைத் தரப்பினர்.

இதேவேளை அமைதிப் பேச்சுகள் நடைபெற வேண்டுமாயின் அவை தமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் மாத்திரமே நடைபெற வேண்டும் என்றும் இடைக்கால அதிகாரசபையை நிறுவிய பின்னரே தொடர்ந்து பேசுவதென்றும் புலிகள் விடாப்பிடியாக இருக்கின்றனர். புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பது மந்திரம் போல உச்சரிக்கப் படுகிறதே அன்றி அதன் உள்ளடக்கம் பற்றி யாரும் அலட்டிக்கொள்வதாக இல்லை. புலிகளின் யோசனைகள் இலங்கையின் வடக்கு - கிழக்கில் ஒரு 'பொல்பொட்' ஆட்சியை நிறுவும் முதலும் இறுதியுமான படியாகவே அமையும்.

## இடைக்கால அதிகாரசபையின் அமைப்பு

வரைபின் சரத்து 2 அதிகாரசபையில் புலிகளால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள், அரசினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கு முஸ்லிம் சமூகத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஆகியோர் அங்கத்துவம் வகிப்பார்கள் என்று கூறுகின்றது. எனினும், புலிகளால் நியமிக்கப்படும் உறுப்பினர்களே அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டிருப்பார்களென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே சபையில் உள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஒருபோதும் பெரும்பான்மையைக் கொண்டிருக்கமாட்டார்கள். இதனை சரத்து 2 உறுதி செய்கிறது. சபையின் தலைவராக பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்கைப் பெறுபவரே நியமிக்கப்படுவார். அவரே இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் இருப்பார். இந்த ஏற்பாடு புலிகளின் உறுப்பினரே சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும். அதுமட்டுமல்ல இடைக்கால அதிகார சபையின் தலைவரே சபைக்கான பிரதான நிர்வாக அதிகாரியை மட்டுமல்ல, சகல அதிகாரிகளையும் நியமிக்கும் தகுதி கொண்டிருப்பார். அந்த நியமனங்களை இடைநிறுத்தும், முடிவுக்குக் கொண்டுவரும் அதிகாரமும் அவரிடமே இருக்கும் என்பதால், சபையின் தலைவரே ஏகபோக அதிகாரம் கொண்ட சர்வாதிகாரியாக இருப்பார். அவரின் நியமனங்களையோ அல்லது பதவி நீக்கங்களையோ தட்டிக் கேட்கும் அதிகாரம், சபையின் மற்ற எந்த உறுப்பினர்களுக்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ அல்லது நாட்டின் ஜனாதிபதிக்கோ அல்லது வேறு எவருக்குமோ இருக்காது. ஒரு ஜனநாயக அமைப்பில் இருக்க வேண்டிய அதிகாரங்களை மட்டுப்படுத்தும் எந்த சமநிலைப்படுத்தும் ஏற்பாடுகளோ விதிகளோ புலிகளின் வரைபில் இல்லை. தேர்தல்கள் நடைபெற்று முடியும் வரையில் அதாவது 5 வருடங்களுக்கு இடைக்கால அதிகாரசபையே ஆட்சியில் இருக்கும். அதுவரையில் சபைத் தலைவரே தனிக்காட்டு ராஜாவாக ஆட்சிசெலுத்துவார்.

## தேர்தல்கள்

தேர்தல்கள் இணக்கம் ஏற்பட்டு ஐந்து வருடங்களின் முடிவில் நடைபெற வேண்டும். ஆனால் இந்தத் தேர்தல்களை இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையினால் நியமிக்கப்படும் தேர்தல் ஆணையகமே நடத்தும். ஆணையகம் சுதந்திரமான ஆணையகமாக இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும் இந்த சுதந்திரம் எப்படி உறுதிப்படுத் தப்படுமென்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை. சர்வதேச மேற்பார்வையில், சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள், தராதரங்கள் என்பவற்றிற்கு அமைவாக சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் தேர்தல் ஆணையகம் தேர்தலை நடாத்தும் எனவும் கூறப்பட்டிருக்கிறது. புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை பெரும்பான்மையாக கொண்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையினால் நியமிக்கப்படும் இந்த தேர்தல் ஆணையகம் எத்தனை அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்கும் என்ற ஏற்பாடுகள் எதுவும் இல்லை. இலங்கையைப் போல பிரச்சினை நிலவிய நாடுகளில் சமாதான ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நடைபெற்ற பெரும்பாலான தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் சபையினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. கம்போடியாவில் நடைபெற்ற தேர்தல், கிழக்குதிமோரில் நடைபெற்ற தேர்தல் என்பன ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் வெற்றிகரமாகவும், சுதந்திரமாகவும் நடத்தப்பட்டன. அங்கெல்லாம் தேர்தல் ஆணையங்களை நியமிக்கும் அதிகாரத்தைப் போரில் ஈடுபட்டிருந்த எந்தத் தரப்பும் பெற்றிருக்கவில்லை. ஆனால் புலிகளின் வரைபில், தேர்தல் ஆணையகத்தை நியமிக்கும் அதிகாரம் போரில் ஈடுபட்டிருந்த தரப்பான புலிகளினால் நியமிக்கப்படும் அதிகாரசபைக்கே வழங்கப்படுகிறது. அதுவும், புலிகளினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட சபைத் தலைவரின் ஏகபோக அதிகாரம் நடைபெறும் ஒரு சூழ்நிலையில், நடைபெறப் போகும் தேர்தலின் சுதந்திரத் தன்மையையும் நியாயத்தன்மையையும் எப்படி உறுதிப்படுத்த முடியும்?

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலிலேயே இத்தனை தில்லுமுல்லுகளையும், மோசடிகளையும் செய்த புலிகள், தங்கள் அதிகாரம் நடைபெறும் இடைக்கால நிர்வாகத்தில், அதுவும் தங்கள் எதிர்காலத்தையே நிர்ணயிக்கப்போகும் ஒரு தேர்தலில் மகாத்மாவாகவா நடப்பார்கள்?.

## மனித உரிமைகள்

வடக்கு - கிழக்கு மக்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சகல மனித உரிமைகளும் வழங்கப்படும் எனக் கூறப்பட்டிருக்கிறது. இடைக்கால அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், சட்ட ஏற்பாடுகள் என்பன சர்வதேச மனித உரிமைகள் தரத்திற்கு அமைவாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை உறுதிப்படுத்தப்போவது இடைக்கால அதிகார சபையினால் நியமிக்கப்படப்போகும் மனித உரிமைகள் ஆணையகமேயாகும். இந்த ஆணையகம் சுதந்திரமான ஆணையகமாக இருக்கும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. எனினும், அதன் சுதந்திரத் தன்மை எப்படிப் பாதுகாக்கப்படப்போகிறது என்றோ, அதன் அதிகாரங்கள் எத்தகையதாக இருக்கப்போகிறது என்றோ ஏற்பாடுகள் எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. மீண்டும் மீண்டும் இளவயதுச் சிறுவர்களைப் படையில் சேர்க்கும் புலிகள், தமது எதிராளிகளைக் குரூரமாகக் கொல்லும் புலிகள், பேச்சுச் சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து மனித உரிமைகளையும் காலில் போட்டு மிதிக்கும் புலிகள் தமது இடைக்கால நிர்வாகத்தில் எப்படி மனித உரிமைகளை மதிக்கப்போகிறார்கள? இவர்களின் ஆட்சியில் எப்படி ஒரு மனித உரிமைகள் ஆணையகம் சுதந்திரமாகச் செயற்பட முடியும்?.

## இடைக்கால நிர்வாக சபையின் நியாயாதிக்கம்

இந்த விடயமே இடைக்கால அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்துவதில் இருக்கப்போகும் மிகப் பெரும் தடையாக உருவாகுமென எதிர்பார்க்கலாம். வடக்கு - கிழக்கின் நிர்வாகம் தொடர்பான முழு அதிகாரமும் இடைகாலத் தன்னாட்சி அதிகார சபையிடம் இருக்குமென புலிகளின் வரைபு கூறுகிறது. குறிப்பாக நிலம், சட்டம், வரி, திறை,மற்றும் வசூல்கள் போன்றவற்றின் மூலம் வருமானம் திரட்டல், மீள்குடியமர்வு,புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் மற்றும் தற்போதைய சேவைகள்,வசதிகள் என்பவற்றை தரமுயர்த்தல், முன்னேற்றல் உள்ளிட்ட அபிவிருத்தி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையிடம் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக வடக்கு - கிழக்கில் இலங்கை அரசு நடைமுறைப்படுத்திவரும் எல்லா அதிகாரங்களும் செயற்பாடுகளும் இடைக்கால அதிகாரசபையின் அதிகாரங்களில் உள்ளடக்கப்படும் எனவும் மேலும் கூறப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கின் சகல நிர்வாக அதிகாரங்களும் இடைக்கால அதிகாரசபைக்கு வழங்கப்பட்டால், மத்தியில் இருக்கக்கூடிய இலங்கை அரசுக்கு வடக்கு - கிழக்குத் தொடர்பாக எந்தவித நிர்வாக அதிகாரமும் இருக்கமாட்டாது.

## அதிகாரப் பகுப்பாக்கம்

வடக்கு - கிழக்கின் ஆட்சி அதிகாரம் மட்டுமல்ல நீதி நிர்வாகம் முழுவதுமே இடைக்கால அதிகார சபையிடமே கையளிக்கப்பட வேண்டுமெனப் புலிகளின் வரைபு கூறுகிறது. வடக்கு - கிழக்கிற்கு பிரத்தியேகமான நீதி நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும், அத்தகைய நீர்வாக அமைப்புகளிடமே வடக்கு - கிழக்கின் நீதி நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாக புலிகட்கும் அரசுக்கும் .இடையேயான இணக்கத்தை வியாக்கியானம் செய்வது, நடைமுறைப்படுத்துவது என்பன தொடர்பான தனியானதும் பிரத்தியேக

> **அமைதிப் பேச்சுகள் நடைபெற வேண்டுமாயின் அவை தமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் மாத்திரமே நடைபெற வேண்டும் என்றும் இடைக்கால அதிகாரசபையை நிறுவிய பின்னரே தொடர்ந்து பேசுவதென்றும் புலிகள் விடாப்பிடியாக இருக்கின்றனர். புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பது மந்திரம் போல உச்சரிக்கப் படுகிறதே அன்றி, அதன் உள்ளடக்கம் பற்றி யாரும் அலட்டிக்கொள்வதாக இல்லை. புலிகளின் யோசனைகள் இலங்கையின் வடக்கு - கிழக்கில் ஒரு 'பொல்பொட்' ஆட்சியை நிறுவும் முதலும் இறுதியுமான படியாகவே அமையும்.**

மானதுமான நியாயாதிக்கம் வடக்கு - கிழக்கு நீதி அமைப்புகளிடமே இருக்கும். ஆனால் இந்த பிரத்தியேகமான நீதி அமைப்புகளை அமைக்கும் அதிகாரமும் அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் யாருக்கு இருக்குமெனக் குறிப்பிடப்படவில்லை. புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தனியான நீதி நிர்வாக அமைப்பை ஏற்படுத்திச் செயற்படுத்திவரும் இந்த வேளையில், இடைக்கால நிர்வாகத்தின்போது அந்தப் புலி அமைப்புகளின் செயற்பாடு என்னவாக இருக்கும் என்பது தெளிவாக்கப்படவில்லை. ஒப்பந்தம் பற்றிய பிரச்சனைகள் ஏற்படும்போது அவற்றைத் தீர்ப்பதற்கான நடுவர் மன்றம் பற்றிய பிறிதொரு ஏற்பாடும் கூறப்பட்டுள்ளது. 22ஆவது சரத்தின்கீழ் கூறப்பட்டுள்ள இந்த ஏற்பாட்டின்படி, நடுவர் மன்றத்திற்கு செல்வதற்கு முன்பதாக பிரச்சினை, நோர்வே அரசாங்கம் உள்ளிட்ட ஏற்புடைய மார்க்கங்கள் மூலமாகத் தீர்வு தேடப்பட வேண்டும் என்றும் இறுதியாகவே தீர்ப்பாய நடுவர் மன்றத்திற்கு பிரச்சனை எடுத்துச்செல்லப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடுவர் மன்றத்தில் இரு தரப்பினாலும் நியமிக்கப்படும் தலா ஒரு நபருடன் இரு தரப்பினரும் கூட்டாகச் சம்மதித்து நியமிக்கும் ஒருவரும் இருப்பார் என்பதுடன், இந்த மூன்றாவது நபரே தீர்பாய நடுவத்திற்குத் தலைவராகவும் இருப்பார். மூன்றாவது உறுப்பினராக யாரை நியமிப்பது என்று இரு தரப்பாரும் இணக்கப்பாட்டிற்கு வர முடியாத சந்தர்ப்பத்தில் அந்த நியமனத்தைச் செய்யுமாறு சர்வதேச நீதிமன்றத் தலைவரை இரு தரப்பாரும் கேட்க வேண்டும் எனவும் வரைபில் கூறப்பட்டுள்ளது.

## நிதி

வடக்கு - கிழக்கில் நிதி தொடர்பான சகல கட்டுப்பாடுகளும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கே இருக்கும். சபையினால் நியமிக்கப்படும் நிதி ஆணைக்குழுவே நிதி தொடர்பான் விடயங்களுக்குப் பொறுப்பாக இருக்கும். மூன்று நிதியங்கள் உருவாக்கப்படும். வடக்கு - கிழக்குக்கு பொது நிதியம்., வட - கிழக்குப் புனர்நிர்மாண நிதியம், விசேட நிதியம் என உருவாக்கப்படும் இந்த நிதியங்களே வெளிநாட்டு நிதிகள் உட்பட அனைத்து நிதிகளையும் கட்டுப்படுத்தும். வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாணத்திற்கென வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவிகள் அனைத்தும் வடக்கு - கிழக்கு புனர் நிர்மாண நிதியத்தின் மூலம் மட்டுமே பெறப்பட்டு, இடைக்கால சபையின் நேரடியான மேற்பார்வையின் கீழ்ப் பயன்படுத்தப்படும். வடக்கு - கிழக்குப் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அனைத்து ஏற்பாடுகளிலும், இலங்கை அரசின் தலையீட்டையும் ஆளுகையையும் தவிர்க்கும் நோக்கில் வரையப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. மேலும் இங்கே நிதிக்குப் பொறுப்பான ஏற்பாடுகள் அனைத்தும், புலிகளின் கட்டுப்பாட்டில் வருவதை அவதானிக்க வேண்டும். புனர்நிர்மாணம், அபிவிருத்தி என்ற பெயரில் புலிகள் தங்கள் அமைப்புக்கோ, அல்லது தாங்கள் விரும்பியவற்றுக்கோ நிதிகளைப் பயன்படுத்தும் துஷ்பிரயோக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ, கேள்விக்கு உட்படுத்தவோ எவராலும் இயலாததாக இருக்கும்.

## கடன், நிதி உதவிகளைப்பெறுதல்

இடைக்கால நிர்வாகசபை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடன் பெறவும், நேரடியாக நிதியுதவிகளைப் பெறவும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடவும்,அவற்றைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொண்டதாக இருக்கும். இந்த ஏற்பாடும் நிதியுதவி பெறுதல், வெளிநாட்டு வர்த்தகம் என்பன தொடர்பாக இலங்கை மத்திய அரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை வெறிதாக்கிவிடுகிறது.

## கணக்காய்வு

இடைக்கால சபையே ஒரு கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். கணக்காய்வாளர் எல்லா நிதியங்களினதும் கணக்குகளை ஆய்வு செய்வார். ஏனினும் இடைக்காலத் தன்னாட்சி சபையால் நியமிக்கப்படும் சர்வதேச நிறுவனம் ஒன்றே வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் எல்லாப் பண உதவிகளையும் ஆய்வு செய்து அங்கீகரிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தக் கணக்காய்வு ஏற்பாடுகளும் நிதி தொடர்பான புலிகளின் கட்டுப்பாட்டை இறுக்கமாக்கும் என்றே கூற வேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சபையினால் நியமிக்கப்படும் நிறுவனமொன்று - அது எத்தகைய சர்வதேசப் புகழ் பெற்றதாக இருந்தாலும் - தான் தொடர்ந்து நியமனம் பெறுவதற்காக புலிகளின் நிதிச் செயற்பாடுகளை அங்கீகரிக்கவே செய்யும்.

## மாவட்டக் குழுக்கள்

மாவட்டங்களில் நிர்வாகத்தை நடத்த சபையினால் நியமிக்கப்படும் மாவட்டக் குழுக்கள் நிறுவப்படலாம். இந்தக் குழுக்களின் தலைவர் உள்ளிட்ட ஏனைய அங்கத்தவர்கள் சபையினாலேயே நியமிக்கப்படுவர். இந்தக் குழுக்கள் சபையின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே செயற்பட முடியும். இது புலிகளின் அதிகார எல்லையை மாவட்டங்களுக்கு நேரடியாக விஸ்தரிக்கும் நடவடிக்கையே தவிர வேறில்லை.

## காணி நிர்வாகம்

காணி நிர்வாகம் தொடர்பாகக் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் எதிர்காலத்தில் பெரும் சிக்கல்களையும் இன மோதல்களையும் உருவாக்கக்கூடியதாக அமைந்துள்ளன. வடக்கு - கிழக்கில் உள்ள தனியாருக்குச் சொந்தமில்லாத அனைத்துக் காணிகள் தொடர்பான அதிகாரங்களும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கே இருக்கும். அரச காணிகளை வழங்கல், அவற்றின் பயன்பாடுகளைத் தீர்மானித்தல் ஆகிய அதிகாரங்கள் அனைத்தும். இந்த சபைக்கே உண்டு. அதனைவிட சிக்கல்களையும் மோதல்களையும் உருவாக்கக்கூடியது சபையினால் நியமிக்கப்பட வேண்டிய காணி நிர்வாகம் தொடர்பான விசேட ஆணைக்குழுவாகும்.. இந்த ஆணைக்குழுவுக்கு காணி பறிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் தொடர்பாகவும், அத்துமீறிக் குடியேறிய காணிகள் தொடர்பாகவும் விசாரித்து அறிக்கை செய்யும் அதிகாரம் உண்டு. அத்துமீறிக் குடியேறிய காணிகள் அவை எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் பெறப்பட்டு ஆட்சி உரிமை பெற்றிருந்தாலும், அவை தொடர்பாக இந்த விசேட காணிநிர்வாக ஆணைக்குழு விசாரணை மேற்கொள்ள முடியும். வடக்கு - கிழக்கில் ஆயிரக்கணக்கான அரச காணிகளில் பல சமூகத்தினரும் அத்துமீறி குடியேறி ஆட்சியுரிமை பெற்றிருக்கின்றனர். இந்த ஆணைக்குழு இவர்களை அக் காணிகளில் இருந்து வெளியேறச் செய்யப் பரிந்துரை செய்யும் பட்சத்தில் இந்த நடவடிக்கை இனக் கலவரங்களையும், இன மோதல்களையும் ஏற்படுத்தவே செய்யும் என்பதில் ஐயமில்லை. இந்த ஆணைக்குழுவின் தீர்மானங்கள் நீதிமன்றங்களினால் கூட கேள்விக்கு உட்படுத்த முடியாதனவாகவே இருக்கும்.

## கடல் வளங்கள்

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கடல்வாழ் வளங்கள், கடற்பிராந்திய வளங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தவும் அவற்றின் பயன்பாட்டை நிர்வாகம் செய்தல் போன்றவற்றிலும் அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

## இயற்கை வளங்கள்.

வடக்கு - கிழக்கின் இயற்கை வளங்கள் தொடர்பான அனைத்துக் கட்டுப்பாடும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையிடமே இருக்கும். இந்த வளங்கள் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள் தொடர்ந்து இருக்குமாயினும், அந்த ஒப்பந்தங்களின் கீழான அனைத்துப் பண வரவுகளும் இலங்கை அரசினால் இடைக்கால சுயாட்சி சபையிடம் செலுத்தப்பட வேண்டும். தற்போது நடைமுறையில்யுள்ள ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின், அவை இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் சம்மதத்துடனேயே செய்யப்பட முடியும். அத்துடன் இயற்கை வளங்கள் தொடர்பான எந்த எதிர்கால ஒப்பந்தங்களும், தன்னாட்சி அதிகாரசபை சபையுடனேயே செய்யப்பட வேண்டும். இயற்கை வளங்கள் என்று கூறும்போது இப் பதம் இயற்கைத் துறைமுகமான திருமலைத் துறைமுகத்தையும் உள்ளடக்கும். அத்துடன் திருமலைத் துறைமுகத்திற்கு அண்டிய பகுதியில் நிலத்திற்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள எண்ணெய்த் தாங்கிகளும் இதில் உள்ளடங்கலாம். ஏனவே தற்போது இந்த எண்ணெய்த் தாங்கிகளின் பயன்பாட்டைப் பெற்றுள்ள இந்திய கம்பனியுடனான எந்த எதிர்கால ஒப்பந்தமும் புலிகளின் ஒப்புதலுடனேயே செய்யப்பட முடியும்.

## புலிகளின் படையணிகள்

புலிகள் இன்று வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களின் மீது ஆட்சிஅதிகாரம் செலுத்த துணையாக இருப்பவை அவர்களின் படையணிகளும், பொலிஸாரும், எல்லைக் காவற்படையினரும், பிஸ்டல் குழுவினரும், தற்கொலைப் போராளிகளும் ஆகும். இவை இல்லாவிட்டால் தமிழ் மக்கள் எல்லோரும் குருநகர் மீனவர் போல புலிகளுக்கு எதிராக எப்போதோ கிளர்ந்தெழுந்திருப்பர். புலிகளின் இடைக்கால அதிகாரசபை ஏற்படுத்தப்பட்டால் இந்தப் புலிப் படையினரது நிலை என்ன என்பது பற்றி புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபில் எதுவும் கூறப்படவில்லை. ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நாடுகளில், இடைக்காலத்தில் போராளிக் குழுக்கள் ஆயுதங்களுடன் வெளியில் செல்லாத வகையில் தங்கள் முகாம்களுக்குள் தங்கவைக்கப்படலும், பின்னர் ஆயுதங்கள் களையப்பட்டு, சிவில் சமூகத்தில் ஒன்றிணைக்கப்படலும் வழமையாக நடைபெறும் ஒன்றாகும். தமிழரின் பாதுகாப்புக்குப் புலிகளின் படையணியே உத்தரவாதம் என்ற புலிகளின் வாதத்தை ஏற்றுக்கொண்டாலும் கூட, இடைக்காலத்தில் இந்தப் படையணிகள் சாதாரண பொதுமக்களின் வாழ்க்கையில் தலையிடாதவாறு எவ்வாறு தடுக்க முடியும்?. தற்போது அமைதி ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும் காலத்தில் நடைபெறுவதைப் போன்று இடைக்கால நிர்வாகத்தின்போது, புலிகட்கு எதிரானவர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர் இவர்களால் கொல்லப்படுவதை யாரால் தடுக்க முடியும்?

## ஒப்பந்தத்தின் நடைமுறைக் காலம்

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான ஒப்பந்தம் இறுதி, நிரந்தரத் தீர்மானம்ஒன்றின் பின்னர் உருவாகும் புதிய வடக்கு - கிழக்கு அரசு ஒன்று உருவாக்கப்படும் வரை நடைமுறையில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. நான்கு வருடங்களின் பின் இறுதித் தீர்மானம் தொடர்பாக இணக்கம் ஏற்படாதவிடத்து தற்போதைய ஒப்பந்தத்தில் ஏதாவது சேர்த்துக்கொள்வது, தெளிவாக்குவது மற்றும் உறுதியாக்குவது தொடர்பாக நல்லெண்ண அடிப்படையில் இரு தரப்பாரும் பேச்சுக்களில் ஈடுபட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்கள் எத்தனை வருடங்களும் நடைபெறலாம். இதன் காரணமாக இடைக்கால சுயாட்சி சபையின் நிர்வாகம் ஐந்து வருடங்களுக்கு அல்ல. புலிகள் ஏதாவது சாக்குப்போக்கு சொல்லி நிரந்தர தீர்மானத்தை இழுத்தடித்தால் 10 வருடங்களோ 15 வருடங்களோ நீடிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. புலிகள் தற்போது இடைக்கால நிர்வாகத்தைக் கேட்டாலும் இந்த நிர்வாகம் புலிகள் விரும்பினால் எல்லையற்ற காலத்திற்கு நீடிக்கப்பட முடியும். தமிழர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தை அகற்ற முடியாதிருக்கும். புலிகளின் இந்த இடைக்கால சுய ஆட்சிக்கான சட்ட வரைபு, போரிடாமலே தமிழ் ஈழத்தை அடைவதை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இந்த வரைபு தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டன்றி புலி இயக்கத்தின் நலனைக் கருத்தில் கொண்டே வரையப்பட்டுள்ளதையும் காண முடிகிறது. புலிகள் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டிருந்தால், யாழ்ப்பாணம் செல்லும் ஏ9 பாதையில் ஏன் வரி அறவிட வேண்டும். யாழ்ப்பாண மக்கள் வரி செலுத்தாது ஏனைய பாதைகளில் போல இலவசமாகச் சென்று வர அனுமதிக்கலாம்தானே. புலிகளின் இலட்சியம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது அல்ல அவர்களின் பாசிச ஆட்சியை நிறுவுதலே.


**நன்றி :- உதயம்.**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

மருந்து மாத்திரைகளால் மரணத்தைத் தள்ளியும் போடலாம். தடுத்தும் நிறுத்தலாம் என்று அறிவியலின் இன்றைய முன்னேற்றம் அவர்களை அப்படிப் பேசவைக்கிறது.

'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்று நம் முன்னோர்கள் சொன்னார்கள். அதாவது உன் உடம்பில்



மூச்சுக்காற்றுள்ளபோதே. உன் குற்றங் குறைகளை தூற்றிக் கொள் என்பதுதான் அதன் பொருள். இதையெல்லாம் எழுபது ஆண்டுகளாகக் கிருபானந்த வாரியார் சொல்லி எவர் காதிலும் ஏறவில்லை. நான் சொல்லியா ஏறப்போகிறது?

மேற்கண்ட சிந்தனைகள் எனக்கு இப்போது எதற்காக வந்ததென்றால் - எந்தத் தீய பழக்கமும் ஆரோக்கியக் கேடும் இல்லாமல் இருந்த என் தந்தை, படுத்துக்கொண்டு வானொலியில் செய்தி கேட்டுக்கொண்டிருக்கும் போதே 'பொக்'கென்று உயிர் நீத்தார்.

அவரது மரணத்திற்கு ஒரு தலைவலியைக் கூடக் காரணமாகக் காட்ட முடியாமல், தலைவிதியைத்தான் காரணமாகக் காட்ட வேண்டிருந்தது.

தந்தையின் இழப்பில் நான் குலைந்து போனேன். அவர் வாழ்ந்த நாள் வரை, என்னால் அவருக்கு ஒரு தம்பிடி பிரயோஜனமும் இல்லாது போனது குறித்து ஓர் உறுத்தல் இன்றளவும் உள்ளத்தில் இருக்கத்தான் செய்கிறது.

என் அன்னையை அழைத்துக் கொண்டு நான் அண்ணனின் நிழலில் வாழ பம்பாய் சென்றேன். தந்தைக்குப் பயன்படாத நான், தாய்க்காவது பயன்படலாம் என்ற வைராக்கியத்தோடு ஒரு வேலையைத் தேடிப் பிடித்து அமர உத்தேசிததேன். அது சாத்தியமில்லாது போயிற்று. என் தாயை பம்பாயிலேயே விட்டுவிட்டு, ஒரே மாதத்தில் நான் சென்னைக்குத் திரும்பி வந்தேன். மீண்டும் சினிமாவில் முயற்சிக்கத்தான் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்தவனுக்கு எவன் பம்பாயில் வேலை கொடுப்பான்.

மீண்டும் சென்னைக்கு வந்து நான் நாய் படாத பாடு பட்ட கதையை சற்றுத் தள்ளிச் சொல்லுகிறேன். அதற்கு முன் என் தந்தையைப் பற்றிய சிந்தனை வந்து என்னை இடைமறிக்கிறது.

என் தந்தையைப் பற்றி, அவர் அமரரான சில ஆண்டுகளுக்குப் பின்னால், திரையுலகில் நான் நிரந்தரமான ஓர் இடத்தை இறையருளால் ஏற்படுத்திக் கொண்ட பிறகு, ஓர் கவிதை எழுதி என் கவிதைத் தொகுப்பில் அச்சிட்டு சேர்த்திருந்தேன்.

அந்தக் கவிதைத் தொகுப்புக்கு அன்று முன்னுரை வழங்கியிருந்த நிவாகீச கலாநிதி திரு. கி. வா. ஜ. அவர்கள், என் தந்தையார் பற்றி நான் எழுதிய கவிதையை, வெகுவாகத் தன் முன்னுரையில் சிலாகித்து எழுதியிருந்தார்கள். இந்த வகையிலாவது தந்தைக்கு நான் மகிழ்வூட்டும் ஒரு காரியத்தைச் செய்ததாக என் மனம் சாந்தியுற்றது. அந்த கவிதை இதுதான்:

*பொய்யா நெஞ்சம்; புரளா நாக்கு;*
*புரிநூல் தவழுந் திருமார் பழகு;*
*வைதிக வடிவம்; பஞ்சக் கச்சம்;*
*வடகலைத் திருமண்; வேதாத்தியயனம்;*
*உய்யும் வகைக்குத் தெய்வப் பற்று;*
*ஒன்றா யிருத்தனை உயர்வும் பெற்று*
*அமய்யா யொழுகி வேதியர் குலத்தை*
*மேம்பட வைத்த மன்னனென் தந்தை!*

*தேன்கனித் தமிழில் திவ்வியப் பிரபந்தம்;*
*வேநா கரியில் தத்துவப் பாடம்;*
*ஆங்கில மொழியில் உலகியல் ஞானம்;*
*அனைத்தும் பயின்று, அறிவைக் கொண்டு*
*வாங்கிய புலமை வாரிசுக் கீந்து*
*வந்தது கடமை வளமுற முடித்து*
*தூங்கிடப் போனான் வைகுந்தத்தில்;*
*தூயவன் திருவடி துதித்திடு மனமே!*


இப்போது இக்கவிதையைத் திரும்ப எழுதும் போது என் கண்கள் பனிக்கின்றன. இன்றைய வெற்றியெல்லாம் என் தகப்பன் இட்ட பிச்சையல்லவா!

(தொடரும்.......)



---

**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....**




## சில அநுபவங்கள்

இதன் விளைவாக இந்திய இராணுவம் தோல்வியைத் தழுவிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நம்முடைய வெளியுறவுக் கொள்கையினை வகுக்கின்ற பொறுப்பில் அப்போது இருந்தவர்கள் சீனாவின் நல்லெண்ணத்தில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தார்கள். தவிர, சில ஆண்டுகளுக்கு முன்தான் சீனப் பிரதமர் சூஎன்லாய் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது இந்த நம்பிக்கையினை உறுதி செய்யும் வகையில் நடந்துகொண்டார். இந்தியர்களும் சீனர்களும் சகோதரர்கள் என்கிற கோஷம் அப்போது வலிமையாகவே ஒலித்தது. தவிர, சீனாவில் இந்தியத் தூதராக இருந்த கே.எம்.பணிக்கர் அனுப்பிய தகவல்கள் இந்த நம்பிக்கைக்கு மேலும் ஆதரவு தருவதாக இருந்தன.

ஆனால், நம்முடைய உளவாளிகள் சீனாவிடம் நாம் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்கான தகவல்களைக் கொடுக்கத்தான் செய்தார்கள். இந்தியாவோடு உள்ள பிரச்சினையை போரின் மூலமாகத் தீர்ப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று சீன இராஜதந்திரிகள் வெளியிட்ட கருத்தினை நம்முடைய உளவு இலாகாவினர் இந்திய அரசுக்கு முன்கூட்டியே தெரிவித்தார்கள்.

1962இல் சீனாவோடு நமக்கு ஏற்பட்ட எல்லைப் போரில் நம்முடைய படைகள் தோல்வி அடைந்ததற்கு, நம்முடைய இராணுவ அணிக்குள்ளே நடைபெற்ற காட்டிக்கொடுக்கும் செயலே முக்கிய காரணம் என்று அப்போது நம்முடைய இராணுவத்தில் பணியாற்றிய லெப்டினன்ட் கர்னல் ஜே.ஆர்.சைகால், அபிப்பிராயம் கூறியுள்ளதும் கவனத்திற்கு உரியது.

சீன ஆக்கிரமிப்பின்போது ஏற்பட்ட தோல்வி அமெரிக்க உதவியினை ஏற்க வேண்டிய கட்டாயத்தினை நமக்கு ஏற்படுத்தியது. அமெரிக்கா அப்போது இந்தியாவின் உதவிக்கு தாராள மனப்பான்மையுடன் வந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. சீனா செய்கின்ற அணு ஆயுதப் பரிசோதனைகளைப் பற்றி அறிந்துகொள்ளுகின்ற ஆவல் அமெரிக்காவுக்கு இருந்தது. சீனாவில் நடைபெறும் அணு ஆயுதப் பரிசோதனைகளைக் கண்டறியும் கருவிகளை இந்திய எல்லையில் நிர்மாணிக்கும் உரிமையினை இந்தியாவிடமிருந்து அமெரிக்கா பெற்றுக் கொண்டது. நந்தாதேவி மலைச் சிகரத்தின் மீது இந்தக் கருவிகள் நிர்மாணிக்கப்பட்டன.

சீனர்கள் லாப்னார் என்கிற பகுதியில் அணு ஆயுதப் பரிசோதனைகளை அப்போது செய்துகொண்டு இருந்தார்கள். அது இந்திய எல்லையிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு கிலோ மீற்றர் தூரத்திற்கப்பால் இருந்தது. அமெரிக்கர்கள் தங்கள் கருவியினை நந்தாதேவியில் நிறுவுவதற்கு முன்னதாகவே நேரு காலமானார். 1965இல் லால் பஹதூர் சாஸ்திரி பிரதமராக இருந்த காலத்தில் அமெரிக்கர்கள் அந்தக் கருவியை நிறுவினார்கள்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

இன்றைய நாட்களில் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு வருகின்ற 'செக்ஸ் என்ட் த சிட்டி' என்ற தொடர் நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு அல்லது பத்திரிகை, சஞ்சிகைகளில் பாலியல் மற்றும் இல்லற வாழ்க்கை தொடர்பான ஆலோசனை வழங்கும் பகுதிகளைப் படித்து வருபவர்களுக்கு புரியக் கூடிய ஒரு விடயம், இன்றைய உலகையே ஆட்டிப்படைத்து வருவதாகப் புதிய கண்டுபிடிப்புகள் கூறுகின்றன.

# ஆணுக்கும் பெண்ணுக்கும் இணக்கப்பாடு அவசியம்.

முன்னர் எப்போதையும் விட தற்காலத்தில் ஆண் - பெண்களிடையே பாலியல் ரீதியிலான திருப்தி இன்மையே இப் பிரச்சினையாகும். இப் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்படுவர்கள் ஆண்களைவிடப் பெண்களேயாவர். சிக்காக கோவில் சுகாதார மற்றும் சமூக ஆய்வு அமைப்பொன்று அண்மையில் மேற்கொண்டுள்ள ஆய்வொன்றின்படி உலகம் முழுவதிலும் உள்ள திருமணமான பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினரின் மிகவும் சிக்கல் மிகுந்த பிரச்சினையாக இருந்து வருவது பாலியல் ரீதியிலான திருப்தியின்மையாகும் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி பெண்களில் ஏழு பேரில் ஒருவருக்கு பாலியல் உணர்வுகள் ஏற்படுவதில் பிரச்சினைகள் இருந்து வருவதாகவும், அனைத்து ஐந்து பேரில் ஒருவருக்கு, பாலியல்



திருப்தியைப் பெற்றுக்கொள்ளும் விருப்பங்கள் இல்லை என்றும் தெரியவந்துள்ளது. இதற்குக் காரணம் உடம்பின் ஏதேனும் உறுப்புகளின் செயற்பாடுகள் பலவீனமடைந்திருக்கலாம் என இப் பெண்கள் நம்பிவந்தாலும் கூட, அதையும் விட முக்கிய காரணம் கணவன் - மனைவிக்கிடையில் இருக்கக்கூடிய பரஸ்பர புரிந்துணர்வு, பாசம் என்பன இன்மையாகும் என்பதில் தெரியவந்துள்ளது.

இதனால் திருமணமான ஆண் - பெண் இரு பாலாருக்கிடையில் பல்வேறுபட்ட பிணக்குகள் தோன்றி அது சமூகப் பிரச்சினையாகவும் உருவெடுக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் 'வயாக்ரா' போன்ற பாலியல் உணர்வுகளைத் தூண்டக்கூடிய செயற்கை மருந்துத் தயாரிப்பாளர்கள், பல தரப்பட்ட மருந்து வகைகளை சந்தைக்கு விடுகின்றனர்.



பாலியல் ரீதியிலான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற இருபாலாரினதும் ஹோர்மோன் செயற்பாடுகள் ஒரே விதத்தில் நிகழ்கின்றன. இதனால் ஒருவர் மற்றவர் மீது கொள்கின்ற உடல் மற்றும் மன ரீதியிலான பிணைப்பு முக்கிய விடயமாகின்றது. எனினும், இந்தப் பிணைப்பின் மூலம் உருவாகின்ற பாலியல் திருப்தியானது ஆணுக்கும் பெண்ணுக்கும் என வித்தியாசங்களைக் கொண்டிராது.

ஆண்களின் பாலியல் ரீதியிலான உணர்ச்சிகளைத் தூண்டுவதில் அனைத்து உறுப்புகளுக்குமாகப் பார்வையுடன் தொடர்புடைய விடயங்கள் பலத்த உந்து சக்தியை வழங்குவதாகவும் ஆனால், பெண்களது உணர்வு நிலைகளைத் தூண்டச் செய்தல் கடினமான காரியம் என்றும் மேற்படி ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு ஆண் துணையின் உறுதியான செயற்பாடுகள் அத்தியாவசியமாகும் என்றும் இல்லையேல் அவளை எவ்வகையிலும் திருப்திப்படுத்த இயலாது என்றும் தெரியவருகிறது.

சிங்ஸி விஞ்ஞான ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றின் மூலம் பெண்களின் பாலியல் ரீதியிலான திருப்தியின் ஆரம்பகட்டமானது தனது துணைவனுடன் ஏற்படும் மானசீக பிணைப்பின் மூலம் ஆரம்பமாகின்றது எனத் தெரியவந்துள்ளது. ஒரு பெண், ஆணுடன் ஏற்படுத்திக்கொள்கின்ற காதல் தொடர்பின் ஆரம்பத்தின்போதே அவர்களது பாலியல் ரீதியிலான திருப்தி நிலைகள் தோன்றிவிடுவதாகவும் தெரியவந்துள்ள மேற்படி ஆய்வில், பாலியல் செயற்பாடுகளின்போதும் உடல் ரீதியிலான பிணைப்பின்போதும் ஏற்படும் திருப்திகளின்பால் பெண்கள் அதிகமாக ஈடுபாடு கொள்வதில்லை என்றும் தெரியவந்துள்ளது.

விரக்தி, அதிகம் நொந்ததன்மை, நோய்கள் தொடர்புகள், இடைநடுவில் தோல்வியுறுதல், முன்னர் ஏற்படுத்திக்கொண்ட உடல் ரீதியிலான தொடர்புகளின்போது பெறப்பட்ட கசப்பான அநுபவங்கள் போன்றவை அநேகமான சந்தர்ப்பங்களில் பாலியல் ரீதியிலான திருப்தியினை பெற இயலாத நிலையைத் தோற்றுவிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இதே நேரம் இவ்வாறான நிலையைத் தவிர்த்துக் கொள்ளும்முகமாக உபயோகப்படுத்தப்படுகின்ற மருந்து வகைகளின் பாதிப்பாலும் பாலியல் ரீதியிலான ஆசைகள் அநேகமான பெண்களிடத்தில் இருந்து உதிர்ந்துவிடுவதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கான ஒரே வழி கணவனும், மனைவியும் இணைந்து தங்களது பாலியல் ரீதியிலான தேவைகள் குறித்து திறந்த மனதுடன் கலந்துரையாடுவது தான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் இருவரும் இருவருடைய தேவைகளையும் புரிந்துகொள்வதால் போதியளவு மானசீக பிணைப்பு ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சோர்வு போன்ற குறைகள் ஏற்பட்டால் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம் என்றும் களைப்பு போன்றவற்றுக்கு நல்ல ஓய்வினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் மூலம் பாலியல் உணர்வுகளை மீளப் பெற இயலும் என்பது அவர்களது கருத்தாகும்.

அநேகமானவர்கள் தங்களது பாலியல் ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் திறந்த மனதுடன் கலந்துரையாடுவதற்கு வெட்கப்படுகின்றனர் என்பதால் அவசியமற்ற வெட்கங்களை உதறித்தள்ள வேண்டும்.

உடல் ரீதியிலான பலவீனங்களாலும், பாலியல் ரீதியிலான திருப்தியின்மை நிலவுகின்றன. பெண் குறி, கர்ப்பப்பை மற்றும் சிறுநீரக நோய்கள் காரணமாக மேற்படி குறைபாடு ஏற்படக்கூடும் என்பதால் இதற்குத் தகுந்த மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாலியல் திருப்தியை விருத்தி செய்து கொள்ளும் முகமாக மருத்துவர்களால் அனுமதிக்கப்பட்டு விற்பனைச் சந்தையில் இருந்துவரும் ஒரே ஒரு மருந்து 'டெஸ்டொஸ்டரோன்' என்பதாகும். அதன் மூலம் ஆண்களது பாலியல் உணர்வுகள் அதிகரிக்கின்றன. அதேநேரம் பெண்களினதும் பாலியல் ரீதியிலான உணவுர்களை அது உற்பத்தி செய்கின்றது.

'ஈஸ்ட்ராடெஸ்ட்' எனும் மருந்து வகையின் பாவனை இன்று ஆண், பெண் இருபாலாரிடத்திலும் அதிகரித்துக் காணப்பட்டு வருகின்றபோதிலும் அதன் மூலம் உடம்பில் கொலஸ்ட்ரோல் தன்மை அதிகரிக்கின்றது என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இதனால் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து வகைகள் கட்டுப்பாட்டு அதிகார சபை, அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் பிரகாரம் புதிய 'டெஸ்டொஸ்டரோன்' மேல் பூச்சு மருந்துகளை தயாரிக்க அமெரிக்க வைத்தியர்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த மருந்தானது பாலியல் ரீதியிலான ஆசைகள் அற்றிருக்கும் பெண்களின் டெஸ்டொஸ்டரோன் ஹோர்மோன் உற்பத்தியை அதிகரிப்பதுடன் மிகவும் பாதுகாப்பானதும் முறையானதுமான பாலியல் பிணைப்புகளை வழங்கவும் துணைபுரியும் என தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாலியல் செயற்பாடுகளை அதிகளவில் பிரச்சினைக்குரிய விடயமாக்கிக்கொள்பவர்கள் திருமணமான பெண்களேயாவர். முதல் கட்டத்தின்போதே இவர்கள் பாலியல் ரீதியிலான எதிர்பார்ப்புகளை அநேகமாக சிதைத்துக்கொள்கின்றனர்.

எனவே, இவர்கள் எந்தவொரு மருந்து வகைகளையும் உபயோகிக்காமலேயே மனம் விட்டுப் பேசி, பரஸ்பர புரிந்துணர்வுகளையும், நெருக்கத்தையும், பாலியல் ஆசைகளையும் புரிந்துகொண்டு செயற்பட்டால் தேவையற்ற மன நோய்களுக்கும் நோய்களுக்கும் உள்ளாகத் தேவையில்லை என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

-பாரூக்

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான தேசிய ஆலோசனைச் சபையின் ஆரம்பக் கூட்டத்தொடரில் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

***மே**ன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களே!*
*பௌத்த மகாசங்கம் மற்றும் இந்து, இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்களின் வணக்கத்துக்குரிய தலைவர்களே!*
*கௌரவ பிரதமர் அவர்களே!*
*கௌரவ அமைச்சர்களே!*
*கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே!*
*அரசியல் கட்சிகளின் தலைவர்களே! பிரதிநிதிகளே!*
*அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளே!*
*கௌரவ கனவான்களே! அம்மணிகளே!*

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக ஆரம்பத்திலேயே நான் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இதன் மூலம் நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் துப்பாக்கி ஏந்திய போராட்டத் தலைவனாக இருந்துள்ளேன். இலங்கை அரசின் ஆயுதப் படைக்கெதிராக நான் போராடியிருக்கிறேன். இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய இறைமையுள்ள சுதந்திர அரசை ஸ்தாபிப்பதற்காக நான் போராடியிருக்கிறேன். 1987 ஜூலை 29இல் செய்துகொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இறைமையுள்ள சுதந்திர இராச்சியத்தை உருவாக்குவதற்கான ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, இந்த நாட்டின் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொண்ட பல தமிழ்ப் போராளிகளில் நானும் ஒருவன்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், தமிழ் மக்களின் சட்டபூர்வ உரிமைகளை இலங்கை அரசு தொடர்ந்தும் மறுக்க முடியாது என்பதையும், இதனால் அரசியலமைப்பின் மூலம் மாகாணங்களுக்குக் கணிசமான அளவு அதிகாரப் பகிர்வு உறுதிப்படுத்தப்பட்டால், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள், சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் சமத்துவமாக வாழ முடியுமென்பதை எமது ஆயுதப் போராட்டம் நிரூபிக்கின்றதென நம்பும் பல தமிழ்ப் போராளிகளில் நானும் ஒருவன்.

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதை அடிப்படையாகக் கொண்டு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் ஒரு கௌரவமான அரசியல் தீர்வே இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையினரின் பெரு விருப்பாகும். தமிழ் மக்களின் இப் பெருவிருப்பைக் கவனத்தில் கொண்டு, நான் தலைமை தாங்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான தனது யோசனையை நீண்ட காலமாகவே தெளிவாக முன்வைத்துள்ளது. அத்தகையதொரு தீர்வின் முக்கிய அம்சங்களென நாம் கருதுபவற்றை முன்வைக்க இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன்.

1. புதிய அரசியலமைப்பொன்றின் மூலம் மாகாணங்களுக்குக் கணிசமான அதிகாரப் பகிர்வு.

2. இந்த நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனியொரு வடக்கு - கிழக்கு மாகாணமாக நிரந்தரமாக இணைத்தல்.

3. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கணிசமான எண்ணிக்கையினராக வாழும் முஸ்லிம் மக்களினதும் சிங்கள மக்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்கான விசேட அரசியலமைப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தனித்துவத் தன்மையைக் கவனத்திற் கொண்டு அதற்கு சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

5. மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்கள் பூரணமாகப் பகிரப்பட வேண்டும்.

**தமிழ் மக்கள் அரசியல் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகம் என்ற கோட்பாடுகளை வலுவாக நம்புபவர்கள்.**

6. அபிவிருத்திக்கான வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நிதியுதவிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவும் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கும் மாகாண அரசாங்கங்களுக்கு உரிமை இருக்க வேண்டும்.

7. இலங்கை மதச் சார்பற்ற நாடாகத் திகழ வேண்டும்.

8. இலங்கையின் பல்லினத் தன்மையைப் போதியளவு பிரதிபலிக்கும் விதத்தில் இலங்கையின் தேசியக் கொடி அமைய வேண்டும்.

9. இலங்கையின் தேசிய கீதம் சிங்களத்திலும் தமிழிலும் சமமான தன்மையுடையதாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

10. இலங்கையில் செயலாற்று அதிகாரமற்ற ஜனாதிபதியொருவரும் செயலாற்று அதிகாரமற்ற உப ஜனாதிபதியொருவரும் இருக்க வேண்டும். இருவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது.

11. நாட்டின் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஆயுதப் படைகள் அமைய வேண்டும்.

12. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் நாட்டின் உத்தியோகபூர்வ அந்தஸ்து இருக்க வேண்டும்.


13. இலங்கையின் பாராளுமன்றம், மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் மாகாணங்களின் சபையென இரு சபைகளைக் கொண்டிருக்க வேண்டும். இந்த இரு சபைகளும் நாட்டின் இன விகிதாசாரத்துக்கேற்ப அமைய வேண்டும்.

14. ஒவ்வொரு மாகாண சட்டவாக்க சபையும் அந்தந்த மாகாணத்தின் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.

15. வெளிநாடுகளில் வாழும் சகல இலங்கையர்களுக்கும் வாக்குரிமையைப் பயன்படுத்தும் வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

16. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் கலாசார மற்றும் வர்த்தக நலன்புரிப் பிரிவுகளை அமைக்கும் உரிமை வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

17. நாட்டின் இன விகிதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் அமைய வேண்டும்.



18. நீதித்துறையின் கீழ் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும் விடயத்தில் மாகாண அரசுகளும் தமது கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும்.

ஈ.பி.டி.பி.யின் நிலைப்பாட்டிலிருந்து, இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முக்கிய அம்சங்களை முன்வைத்ததோடு, நாம் பெருமைப்பட முடியாத அண்மைக்கால வரலாறு பற்றிச் சிறிது பின்னோக்கிப் பார்க்க விழைகிறேன்.

எமது அண்மைக்கால வரலாறு, குறிப்பாக இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக பல உறுதிமொழிகள் மீறப்பட்டமையையும் துரோகத்தனங்களையுமே கொண்டுள்ளது. 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இனப் பிரச்சினைத் தீர்வுக்காக முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட உறுதியான முயற்சி இதுவாகும். அதி தீவிரவாதச் சிங்களவர்களின் அழுத்தங்களின் காரணமாக இந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. இதனையடுத்து டட்லி - செல்வா ஒப்பந்தம் 1965இல் மேற்கொள்ளப்பட்டது. அதுகூட மதித்து நிறைவேற்றப்படவில்லை.

அண்மைக் காலங்களில் பெருமளவு இரத்தம் சிந்திய பின்னர் 1987 ஜூலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இதன் மூலம் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கென வடக்கு - கிழக்கு மாகாண சபை என அழைக்கப்பட்ட தனியான ஒரு சபையோடு, எட்டு மாகாண சபைகள் நிறுவப்பட்டன. இந்த மாகாண சபைக்கான தேர்தல் 1988ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்டு சபை ஒன்று உருவாக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை முதலமைச்சர் ஒருவருடன் அமைச்சரவை ஒன்று கையேற்றுக்கொண்டது. எவ்வாறெனினும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க விரும்பாத தரப்புகளிலிருந்து அவர்கள் பல இடையூறுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட சில அதிகாரங்களைக் கூட செயற்படுத்த முடியாதவாறு வடக்கு - கிழக்கு மாகாண மக்களின் பிரதிநிதிகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. கால ஓட்டத்தில் தமிழர்களின் ஒரு பிரிவினருக்கும் சிங்களவர்களின் ஒரு பிரிவினருக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட சதி நடவடிக்கையின் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது. இந்த நாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் நடத்திய ஆயுதப் போராட்டத்தால் மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. அத்தகைய சபையின் பலாபலன்களை இன்றும் கூட அந்த மக்கள் அநுபவிக்க முடியாமலிருப்பது உண்மையிலேயே ஒரு வஞ்சகமான செயலாகும்.

**எமது அண்மைக்கால வரலாறு, குறிப்பாக இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக பல உறுதிமொழிகள் மீறப்பட்டமையையும் துரோகத்தனங்களையுமே கொண்டுள்ளது.**

இனப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வொன்றினைக் காணும் நோக்கில் புதிய அரசியலமைப்பொன்றுக்கான யோசனைகள் 1995இல் முன்வைக்கப்பட்டன. சிங்கள தலைமைத்துவத்தின் ஒரு பிரிவினரின் ஆதரவைப் பெறுவதற்காக இந்த யோசனைகளில் சில முக்கியமான அம்சங்கள் நீக்கப்பட்டன. இதன் விளைவே 2000ஆம் ஆண்டு ஆகஸ்டில் முன்வைக்கப்பட்ட நகல் அரசியல் யாப்பாகும். புலிகள் கொன்றுவிடுவார்கள் என்ற பயத்தின் காரணமாகத் தமிழ்த் தலைமைத்துவத்தின் ஒரு பிரிவினர் இதற்கு ஆதரவு வழங்கத் தயங்கினர். இதேவேளை சிங்களத் தலைமைத்துவத்தின் ஒரு பிரிவினர், இந்த நகல் யாப்பு, தமிழர்களுக்கு அதிகளவு அதிகாரங்களை வழங்குகிறது என்று கருதினர். இதனால் இத்தகைய முக்கிய அம்சங்கள் நீக்கப்பட்ட நகல் யாப்பினாற்கூட பாராளுமன்றத்தில் போதியளவு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்த முடியவில்லை. பாராளுமன்றச் சபைக்குள்ளேயே நகல் அரசியல் யாப்பின் பிரதிகள் எரிக்கப்பட்டன.

இன்று நாடு முக்கிய நிலைக்கு வந்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தமொன்று முப்பது மாதங்களுக்கு மேலாக அமுலிலுள்ளது. இந்த யுத்த நிறுத்த காலத்தின்போது எனது கட்சி அங்கத்தவர்கள் பலர் புலிகளின் கொலைக் குழுக்களால் தமது உயிர்களை இழந்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துடன் 2002ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த புலிகள் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அதிலிருந்து வெளியேறினர். அவர்கள் 18 மாதங்களுக்கு மேலாகப் பேச்சுவார்த்தை மேசையிலிருந்து விலகி நிற்கின்றனர்.

ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்தவர்களாகிய நாம், எம்மைப் பொறுத்தவரை நாம் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் மக்களின் நலன்களுக்காக என்றுமே எமது பங்கைச் செலுத்தி வந்துள்ளோம். இனப் பிரச்சினைக்கு உறுதியான தீர்வொன்றினைக் காண்பதற்கு விருப்பம் தெரிவித்து வந்த ஒவ்வொரு இலங்கை அரசுக்கும் நாம் ஆதரவு வழங்கியுள்ளோம். புலிகளிடமிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கென, தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த அரசாங்கங்களால் எமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது நாம் திருப்பிக் கையளித்தோம். இந்த நடவடிக்கை எமது அங்கத்தவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துமென்று நன்கு தெரிந்துகொண்டே சமாதான வழிமுறை வெற்றியளிப்பதற்காக நாம் ஆயுதங்களைக் கையளித்தோம்.

தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளெனத் தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தினரால் தமது இலட்சியங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவதை தமிழ் மக்கள் என்றுமே விரும்பியதில்லை. தமிழ் மக்கள் அரசியல் பன்முகத்தன்மை மற்றும் ஜனநாயகம் என்ற கோட்பாடுகளை வலுவாக நம்புபவர்கள். கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது வடக்கு - கிழக்கில் நீதியான - சுதந்திரமான - தேர்தல் நடைபெறுவதற்குப் புலிகளின் உறுப்பினர்கள் தடையாகச் செயற்பட்டதால் ஜனநாயகத்தில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்குப் பலத்த அடி விழுந்தது. இந்த நெறியற்ற செயற்பாடுகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிடவில்லை. ஏகப் பிரதிநிதித்துவம் என்ற கருத்தோட்டம் சுய அழிவுக் கொள்கையாகும். அது அரசியல் பன்முகத்தன்மையையும் ஜனநாயகத்தையும் அழித்துவிடுகிறது. இறுதியில் இதன் விளைவாக மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளென்று நாம் என்றுமே எம்மை அழைத்துக்கொண்டவர்களல்லர். தமிழ் மக்களின் பிரதிநிதியாக நாம் இருப்பதைப் போன்று புலிகளும் மற்றொரு பிரதிநிதி என்பதே எமது நிலைப்பாடாகும். தமிழ் மக்களின் போராட்டத்துக்கு நாமும் தியாகங்களைச் செய்திருக்கிறோம். பங்களிப்பைச் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் புலி இயக்கத்துக்கும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் நான் வலுவான கோரிக்கை ஒன்றினை விடுக்க விரும்புகிறேன். அது இதுதான்.

"உங்கள் உள்ளத்தில் உண்மையிலேயே தமிழ் மக்களின் நலன்கள் இருந்தால், தமிழ் மக்கள் மேலும் துன்பப்படுவதை நீங்கள் விரும்பவில்லையென்றால், 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒஸ்லோவில் உங்கள் பிரதிநிதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டதைப் போன்று, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறைமையை நிறுவுவதன் மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்று உண்மையிலேயே நீங்கள் விரும்பினால் தயவுசெய்து பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பி வாருங்கள். பேச்சுவார்த்தை மேசைக்கு மீளத் திரும்புவதற்கு மேலும் தாமதித்தால், அது தமிழ் மக்களுக்குச் செய்யப்படும் துரோகமாகும். மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களால் மீண்டும் ஒருமுறை உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செயற்பட்டு கௌரவமான அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கு உதவி செய்வீர்களேயானால், தமிழ் மக்களின் பெயரால் நீங்கள் மேற்கொண்ட பெருந்தொகையான கொலைகளைத் தமிழ் மக்கள் மன்னிப்பார்கள். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் போன்ற மகத்தான தமிழ்த் தலைவர்களின் குடும்பங்களும் உங்களை மன்னிக்கும்."

இறுதியாக, எனது உரையை முடிப்பதற்கு முன்பதாக, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான இந்தத் தேசிய ஆலோசனைச் சபையின் ஆரம்பக் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதில்லையெனத் தீர்மானித்த சகல தென்னிலங்கைத் தலைவர்களுக்கும் குறிப்பாக, ஏதோ ஒரு காரணத்துக்காக இவ்வாறு தீர்மானித்தவர்களுக்கும் நான் வலுவான கோரிக்கை ஒன்றினை விடுக்க விரும்புகிறேன்.

**சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இந்த நாட்டு மக்கள் அனைவருமே இந்த யுத்தத்தின் காரணமாக கால் நூற்றாண்டுக்கு மேலாகத் துன்பங்களை அநுபவித்துள்ளனர். இந்த யுத்தத்தினால் ஆயிரக்கணக்கானோர் உயிர்களை இழந்துள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கானோர் விதவைகளாகவும் அநாதைகளாகவும் ஆகியுள்ளனர். எமது மக்களின் இந்தத் துயரச் சுற்றுவட்டத்துக்கு முடிவு காண்பது அவசியமானதாகும். தலைவர்கள் என்ற வகையில் குறுகிய கட்சி அரசியல் இலாபங்களைக் கைவிட்டுச் செயற்படுவது உங்கள் கடமையாகும். எனவே, தயவு செய்து இராஜதந்திரத்தோடு செயற்படுங்கள். வரலாறு உங்களுக்கு மற்றொரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. அதனைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்.**


இறுதியாக சமாதான வழிமுறைக்குள் இக் கலந்துரையாடலுக்கான முன்முயற்சியை மேற்கொண்ட மேன்மைதங்கிய ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தச் சபையின் யோசனைகளைக் கொண்டு, தார்க்கரீதியான இறுதி முடிவை நோக்கி, மேன்மைதங்கிய ஜனாதிபதி வழி நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொறுமையாக எனது உரையைக் கேட்டமைக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.



சக்தி சக்தி என்றால் துன்பம்
தானே தீரும் கண்டீரே!
சக்தி சக்தி என்றால் இன்பம் –
தானே சேரும் கண்டீரே!

**சுப்பிரமணிய பாரதியார்–**



# இரும்பைத் தின்னும் சுண்டெலிகள்



ஓர் ஊரில் ஜ்வீர்நதனன் என்றொரு வியாபாரி இருந்தான். அவன் தனது பணத்தையெல்லாம் இழந்துவிட்டான். அதனால் மற்றொரு நகரத்திற்குப் போய் வியாபாரம் செய்யலாம் என்று முடிவு செய்தான். அங்கு போவதற்கு முன் தனது நண்பனான மற்றொரு வியாபாரியைக் காணச் சென்றான்.

“நண்பா! இந்த இரும்புத் தராசை நான் திரும்பி வரும் வரை உன்னிடம் வைத்திருப்பாயா?'' என்று ஜ்வீர்நதனன் கேட்டுக்கொண்டான்.

“நிச்சயமாக! நான் அதைப் பத்திரமாக வைத்திருப்பேன்'' என்று வியாபாரி பதிலளித்தான்.

சில வருடங்கள் கழித்துத் திரும்பி வந்த ஜ்வீர்நதனன் தனது வியாபாரியிடம் சென்று, “நண்பா! நான் உன்னிடம் கொடுத்த இரும்புத் தராசைத் திருப்பித் தருகிறாயா?'' என்று கேட்டான்.

“அந்தோ! நண்பா ஜவீர்நதனா! அந்த தராசை சுண்டெலிகள் தின்றுவிட்டன. அதனால் நான் அதை உனக்கு திருப்பித் தர இயலாது!'' என்று அந்த வியாபாரி வருத்தத்துடன் கூறினான்.

“அடடா! என்ன துரதிர்ஷ்டம்! இரும்பை சுண்டெலிகள் தின்றுவிட்டால் நீ என்ன செய்ய முடியும்'' என்று கூறிய ஜவீர்நதனன் “நான் ஆற்றுக்குக் குளிக்கச் செல்கிறேன், எனது பையை எடுத்துவர என்னுடன் உனது பையனை அனுப்ப முடியுமா?'' என்று கேட்டான்.

தராசினைத் திருடிய குற்ற உணர்வின் காரணமாக அவனும் அதற்குச் சம்மதித்தான். ஜ்வீர்நதனன் நண்பனின் பையனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். ஆற்றுக்குச் சென்ற ஜ்வீர்நதனன், குளித்து முடித்துவிட்டு, பையனை கரையிலிருந்து ஒரு மலைக் குகையில் அடைத்து வைத்து, அவன் தப்பி ஓடிவிடாமல் இருக்க அதன் வாயிலை ஒரு பெரிய பாறாங்கல்லினால் மூடினான்.

பிறகு ஜ்வீர்நதனன், அந்த நண்பன் வியாபாரியின் இல்லத்திற்குத் திரும்பி வந்தான்.

அவன் தனியாக வருவதைக் கண்ட வியாபாரி அவனிடம், “என் பையன் எங்கே?'' என்று கேட்டான்.

“ஐயோ! நண்பா! அவனை ஒரு நாரை தூக்கிக் கொண்டு போய்விட்டது. நான் அதை விரட்டிப் பிடிப்பதற்குள் அது பறந்துவிட்டது!'' என்று ஜ்வீர்நதனன் பதிலளித்தான்.

“என்ன? நீ ஒரு பொய்யன்! ஒரு நாரையால் எப்படி ஒரு பெரிய பையனைத் தூக்கிக்கொண்டு போக முடியும்?'' என்று வியாபாரி கத்தினான்.

“எல்லாம் முடியும்! சுண்டெலி

**பாப்பா முரசு சிறுகதை**

களால் இரும்பைத் தின்ன முடியுமென்றால், ஒரு நாரையால் ஏன் ஒரு சிறுவனை தூக்கிச் செல்ல முடியாது? மேலும் உன் பையனை நீ பார்க்க வேண்டுமென்றால், எனது இரும்புத் தராசைத் திருப்பிக் கொடு!'' என்று ஜ்வீர்நதனன் கூறினான்.

பிறகு இருவரும் ஒரு நீதிபதியிடம் சென்றனர். வியாபாரி தனது பையனை ஜ்வீர்ந்தனன் கடத்திவிட்ட தூகக் குற்றம் சுமத்தினான்.

வியாபாரியின் மகனைத் திருப்பிக் கொடுக்குமாறு ஜ்வீர்நதனனுக்கு நீதிபதி கட்டளையிட்டார்.

“அது எப்படி என்னால் முடியும்? ஒரு நாரை அவனை தூக்கிக்கொண்டு பறந்துவிட்டதே!'' என்று ஜ்வீர்நதனன் பதில் கூறினான்.

“இதோ பார்! ஜ்வீர்நதனா! நீ உண்மை பேசவில்லை. ஒரு நாரையால் எப்படி ஒரு பெரிய பையனைத் தூக்கிக்கொண்டு போக முடியும்?'' என்று நீதிபதி வியந்துரைத்தார்.

அதற்கு ஜ்வீர்நதனன் சிரித்துக் கொண்டே “ஐயா! சுண்டெலிகளால் இரும்பைத் தின்ன முடியுமென்றால், ஒரு சிறுவனை ஏன் நாரையால் தூக்கிச் செல்ல முடியாது?'' என்றான்.

பிறகு அவன் நீதிபதியிடம் தான் வியாபாரியிடம் தராசைக் கொடுத்துச் சென்றதையும் அதை திரும்ப வந்து கேட்டபொழுது வியாபாரி கூறிய தையும் விளக்கமாக எடுத்துரைத்தான்.

“வியாபாரி! முதலில் ஜ்வீர்நதனனின் இரும்புத் தராசைத் திருப்பிக் கொடு. அப்போது அவன் உன் மகனைத் திரும்பிக் கொடுப்பான்'' என்று நீதிபதி கண்டிப்புடன் கூறினார்.

***ஆம் பிள்ளைகளே! பொய்மை என்றும் நிலைத்து நிற்காது. என்றோ ஒருநாள் உண்மை வெளிவரும். பொய் சொன்னாலும் பொருந்தக்கூடிய மாதிரி சொல்ல வேணடும் என்பது இக்கதை யிலிருந்து உணர முடிகிறதல்லவா!***

***தந்திர அறிவு சில சமயங்களில் முட்டாளாக்கிவிடும் ஆகவே சிந்தித்துச் செயற்பட வேண்டும். புரியுதா குட்டீஸ்.***

# ஆத்திசூடி

## அறஞ் செய விரும்பு

**நீ வஞ்சகம் பொய், களவு, சூது, சீனம், பொறாமை ஆகிய அறம் இல்லாத செய்கைகளுக்கு இடமளியாது, நல்ல அறமான காரியங்களை விரும்பிச் செய்.**

நன்றி: நிரஞ்சலா, கண்டி. —ஔவையார்

# கோழியின் பதில்



**பையன்:**
பெட்டைக் கோழி, பெட்டைக் கோழி,
தட்டு நெல்லைத் தருகிறேன்.
இட்ட முட்டை எத்த னையோ?
இன்றே எண்ணித் தந்திடு.

**கோழி:**
எட்டு நாளாய்த் தினமுமே
இட்டு வைத்தேன் முட்டைகள்.
இட்ட முட்டை எட்டையும்
எடுத்துக் கொண்டான் ஒருவனே.

அவயங் காக்க நானும்
ஆசை கொண்டேன்; ஆயினும்
அபயம் தந்த மனிதனே
அனைத்தும் தின்று தீர்த்தனன்!

குஞ்சு பொரித்துப் பார்க்கவே
கொண்டேன் ஆசை; ஆயினும்
மிஞ்சவில்லை முட்டைகள்;
முழுதும் அவனே தின்றனன்.

எட்டு முட்டை தின்றவன்
என்னை என்ன செய்வனோ?
விட்டு வைக்க வேண்டுமே.
மிஞ்சு வேனோ நானுமே!

# அதிசய உலகம்



**மீன்களையே உண்ணும் கிரேட் வைட் ஹெரான் என்ற பறவை, புளோரிடா பகுதியில் காணப்படுகிறது. ஒரு சமயத்தில் புளோரிடா கடற்பகுதியில் மீன்கள் அற்றுப்போனபோது, அவை பட்டினி கிடக்க நேரிட்டது. அப்போது சில புத்திசாலியான ஹெரான் பறவைகள் வீடுகளுக்கும் ஓட்டல்களுக்கும் பறந்துவந்து, யாராவது சாப்பிடுவதற்கு ஏதாவது போடமாட்டார்களா என்று ஏங்கி நிற்குமாம். பறவைகள் வந்து பிச்சை கேட்டால் யார் போடமாட்டர்கள்?**

# மனிதனா? குரங்கா?


‘ஆம்’ என்றும் சொல்லலாம்! ‘இல்லை’ என்றும் கூறலாம்! ஏனென்றால். இது மனிதக் குரங்கு! மனிதக் குரங்கு சாதாரணமாகக் கறுப்பாகத்தான் இருக்கும். ஆனால், இது, வெள்ளைக்காரன் போல வெள்ளை மனிதக் குரங்கு! மிக அபூர்வமான இந்த வெள்ளை மனிதக் குரங்கு, ஸ்பெயின் நாட்டில் மிருகக்காட்சிச்சாலையில் இருக்கிறது.



# உங்கள் பொது அறிவு எப்படி?

1. ஒரு நாயின் தலையுடன் வேறு ஒரு நாயின் தலையை ஒட்டி வெற்றி கண்ட ரஷ்ய மருத்துவர் யார்?
**விளாடிமிர் ரெமிதெவ்.**
2. கடலாமைகள் எவ்வினத்தைச் சேர்ந்தவை?
**நகர் உயிர்கள்.**
3. தவளையின் கருக்கட்டல் எங்கு நிகழ்கின்றது?
**நீரில்**
4. எவற்றை ஒரு வித்துத் தாவரம் என்பர்?
**ஆணிவேர் அற்ற நார் வேர் உடைய தாவரத்தை.**
5. உயிர்களை ஆக்கியிருக்கும் அடிப்படைப் பொருள் எது?
**கலம்.**
6. ஐதரா என்றால் என்ன?
**1/4 அங்குல நீளமுள்ள நீர் விலங்கு.**
7. இலைகளின் பச்சை நிறத்திற்குக் காரணமாயுள்ள இரசாயனப் பொருள் எது?
**குளோரொபில் (பச்சையம்)**
8. அணுகுண்டு உற்பத்திக்குப் பயன்படும் கதிர்த் தொழிற்பாடுடைய மூலகம் எது?
**யுரேனியம்**
9. பித்தளையின் மூலகம் எது?
**வெள்ளீயம்.**
10. நீரில் உள்ள மூலகங்கள் எவை?
**ஐதரசனும் ஒட்சிசனும்.**

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.10.2004.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **565**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 563

பரிசுக்குரியவர்:
**பா. விக்னசூலன்,**
**தரம் 8, இந்துக் கல்லூரி, சாவகச்சேரி**


பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| நந்தகுமார் தர்ஷினி, 271, காந்திநகர், திருகோணமலை. | அ. கட்ஷன் சைந்திரன், தரம் 1, புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம். |
| ச. ஜேக்கப் ஜெனஸ், புனித மிக்கேல் கல்லூரி, விநாயகர் வீதி, மட்டக்களப்பு. | ஏ. மகேஸ்வரி, 225/16, பெர்கஷன் வீதி, கொழும்பு -15. |
| பா. சிறீகுகள், யாழ்ப்பாணக் கல்லூரி. வட்டுக்கோட்டை. | எம். ஏ. எப். நுஸ்ஹா, 79, வெஸ்டன் சோல்டன் வீதி, புத்தளம். |
| எம். எச். அமானி, தரம் 2, கஹட்டபிடியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | செல்வம் தெய்வீகன். 64, பிரதான வீதி, புளியங்குளம், திருகோணமலை. |
| பி. றேச்சல் பிரியங்கா, 57, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். | கே.எம். நிஸ்வார், 101/3, கொழும்பு வீதி, குருனாகல். |

# தகவல் பெட்டி


## குளியல்





## புரட்டுவதற்கு கடினமான புத்தகம்

புத்தகம் புரட்டுவோருக்கு சோம்பல் ஏற்படும் கதை ஒன்றே இது. ஜப்பான் மஸ்டா கம்பனியின் புகைப்பட கலரியில் உள்ள இந்தப் படப் புத்தகமே உலகிலேயே மிகப் பெரிய படப் புத்தகமாக கின்னஸ் சாதனையில் பதிவாகியுள்ளது. இதன் நீளம் 3.42 மீற்றர், அகலம் 3.07 மீற்றர்.



## குச்சிகளுக்கு உயிர் வந்து.....

பூச்சி வகையில் நாம் பார்த்து கேட்டறிந்திருப்பது மிகவும் குறிப்பிட்ட சிலவற்றைப் பற்றி மட்டுமே. இந்த யுவதியின் கையில் மரக் கொப்பொன்று போல் காட்சி தரும் இது உண்மையிலேயே ஒரு பூச்சி. இப் பூச்சி மலேசியா குச்சி பூச்சி என்று அழைக்கப்படுகிறது. போடி என்ற பெயரைக் கொண்ட இப் பூச்சி யுவதியின் கையில் சிக்கியது இலண்டன் மிருகக் காட்சிச்சாலை ஒன்றிலேயே.

குழந்தைகள் என்றால் எல்லாக் குழந்தைகளும் ஒன்றே. தாய்மார் என்றாலும் அது போலவே. கால நேரம் கிடைத்த சந்தர்ப்பமொன்றில் மனிதக் குழந்தை யொன்றின் குளியல் தொட்டியில் தனது குழந்தையை இறக்கி மிகவும் பரிவுடன் குளிப்பாட்டும் தாய் யானை ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.



## தலையை தப்ப வைத்தல்

ஜப்பான் பாடசாலை மாணவர்கள் மற்ற ஏனைய நாட்டுப் பாடசாலை மாணவர்களை விட வித்தியாசமான பயிற்சிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பூமியதிர்ச்சி ஏற்படும் சந்தர்ப்பத்தில் மேலிருந்து விழும் உடைந்த துண்டுகளிலிருந்து தலை மற்றும் உடலின் மேல் பாகங்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான பயிற்சியில் ஜப்பான் பாடசாலை மாணவர்கள் சிலர் ஈடுபட்டிருக்கும் காட்சியே இது.

## எடையால் வென்ற நாடு

லொறிகளுக்குப் பாரமேற்றும்போது நிறுக்கப்படும் தாராசுகளிலேயே சிலரின் எடையையும் சில சமயங்களில் கணிக்க வேண்டி நேரிடுகிறது. இத்தாலியில் வருடாந்தம் நடைபெறும் 'மிஸ் சிசியோனா' போட்டியில் கலந்துகொள்ள வந்துள்ள இவர் கியோவானா குய்டோனி. 'மிஸ் சிசியோனா' என்றால் உடல் பெருத்த யுவதி என்பதாகும். இம்முறை முதல் பரிசைத் தட்டிச்சென்ற கியோவானாவின் எடை வெறும் 190 கிலோ கிராம் ( 418 இறாத்தல்) மட்டுமே.



## திருமணத்தில் மிருக பின்னணி

சிங்கப்பூர் வாசிகளுக்கு தங்களது திருமண வைபவத்தை தாங்கள் விரும்பும் உயிரினத்தின் பின்னணியை அடிப்படையாகக் கொண்ட மிருகக்காட்சிச்சாலையில் நடத்திக்கொள்ள முடியும். வாத்து, புறா, குதிரை, யானை போன்றவைகளின் பின்னணியிலும் இவ்வாறான திருமண வைபவங்களை அமைத்துக்கொள்ள முடியும். வண்ணத்துப் பூச்சிகளின் சோலையிலே அவ்வாறான திருமண வைபவம் ஒன்று நடைபெறும் காட்சியையே இப் படம் சித்திரிக்கின்றது.



# சினி விசிட்

பாலசந்தரைப் போல் விரைவில் 'சின்னத்திரையில் முதல்முறையாக 'பாரதிராஜா' என்ற செய்தி வெளிவரலாம். தமிழ்த்திரை சேனலுக்காக சீரியல் ஒன்றை இயக்கவிருக்கிறார் பாரதிராஜா. கூடவே தனது ஆபீசையும் ரெக்கார்டிங் தியேட்டராக மாற்றியிருக்கிறார். தொலைக்காட்சித் தொடர்களை எடுத்துக் கொள்ளவும், அவ்வப்போது ஆப்சாகப் பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளார்.



ஒருமுறை சொல்லிவிடு
ரோஹித் - ஜனப்பிரியா

## வடிவேலுவின் புது ஜோடி!

'அய்யா... எனக்குன்னு ஒரு ஜோடி 'அமைய மாட்டேங்குதேய்யா...' என்று சரளாவைப் பிடித்த வடிவேலு நீண்ட காலமாகப் புலம்பிக்கொண்டிருந்தார். இப்போது அவர் ப்ரீத்தி என்ற குண்டு அம்மணியை தனக்கு ஜோடியாக அமைத்துக் கொண்டார். 'வீரநாச்சியார்', 'கிரி' உட்பட சில பல படங்களில் ப்ரீத்தியுடன் ஜோடி சேர்ந்துள்ள வடிவேலு, தற்போது தன்னை நாடிவரும் இயக்குநர்களிடம் மறக்காமல் ப்ரீத்திக்கும் சான்சு கோருகிறார். அப்படிப் போடு.

## ரகுவரனுக்கு உதவும் பிரகாஷ்ராஜ்!

தமிழில் படம் ஏதும் இல்லாத நிலையில், கன்னடப் படங்களில் நடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் ரகுவரன். இதற்காக, மாதத்தின் பெரும்பகுதி நாட்களை பெங்களூரிலேயே கழிக்கிறார். ரகுவரனுக்குத் தன் கன்னட சினிமா நண்பர்களை அறிமுகம் செய்து உதவியுள்ளார் பிரகாஷ்ராஜ்.

## கருணாநிதியின் கமென்ட்!

'கண்ணம்மா' படத்திற்கு கதை-வசனம் எழுதும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, அதன் துவக்க விழாவுக்காக கோலிவுட்டுக்குள் காலடி எடுத்து வைத்தார். பகிரங்கமாக சில கருத்துக்களை விழாவில் பேசியது போக, அந்தரங்கமாக அவர் அடித்த ஒரு கமென்ட்தான் கோடம்பாக்கத்தின் இன்றைய ஹொட் நியூஸ்...

"ஏம்பா... நடிகர் சங்கப் பொன்விழாவை எப்பத்தான் கொண்டாடப் போறீங்க?" எனக் கேட்டிருக்கிறார். தொடர்ந்து, "எனக்கு பொன்விழா கொண்டாடினீங்க... அதுக்கு கைமாறா நடிகர் சங்கத்துக்கு நான்தான் பொன்விழா கொண்டாடுவேன் போலிருக்கு!" என்று சொல்ல, கூட்டத்தினர் அமுங்கினியாக சிரித்து சமாளித்தனர். அதாவது, வருகிற தேர்தலில் தி.மு.க. ஆட்சியைப் பிடித்து, கருணாநிதி முதல்வராகி பொன்விழா கொண்டாடுவர் என்பதைத்தான் இப்படி சூசகமாகக் கூறியுள்ளார்.



லக்ஷ்மி ராய்

## டூரிங் டாக்கீஸ்"க்கு தடை!

'டூரிங் டாக்கீஸ்' என்று தன் படத்துக்கு டைட்டில் வைத்துள்ளார் சேரன். இதை உடனே மாத்தணும் என்று வற்புறுத்தினர் தமிழர் பாதுகாப்பு இயக்க ஆதரவாளர்கள். "சரி... வேட்டிய மடிச்சுக் கட்டு'ன்னு பாமர தமிழ்ல தலைப்பு வச்சேன்... படம் ஊத்திக்கிச்சே... நட்டத்தை நீங்களா கொடுத்தீங்க?" என்று எதிர் கேள்வி கேட்டுள்ளார். இதனால், கொதிப்படைந்த ஆதரவாளர்கள், "டூரிங் டாக்கீஸ்' என்று டைட்டில் வைச்சு வந்தா, படத்தை ரிலீஸ் பண்ண விடமாட்டோம்..." என்று எச்சரித்துவிட்டுச் சென்றுள்ளனர். என்ன செய்யப்போகிறாரோ சேரன்?

## த்ரிஷா 'ஸ்லிம்' இரகசியம்!

ஒட்டகச்சிவிங்கி மாதிரி த்ரிஷா இருப்பதன் குட்டை உடைத்தார் கோலிவுட்டில் மேலைநாட்டு பொருட்களை வியாபாரம் பண்ணும் நபர் ஒருவர். வாரம் ஒருமுறை தன் சவூதி இரசிகர் ஒருவர் மூலமாகப் பாலைவனக் கப்பலான ஒட்டகப் பாலை வரவழைத்துச் சாப்பிடுகிறார். இதைச் சாப்பிட்டால் சதை போடாமல் எப்போதும் ஒல்லிக்குச்சி உடம்புக் காரியாகத் திகழலாம். உணவாக கேரள கைக்குத்தல் அரிசி சாப்பாடுதான் சாப்பிடுகிறார் த்ரிஷா.

## குடும்ப பொம்பளையா? 'நோ!'

தேஜாஸ்ரீ மாதிரி 'ஓபின் புக்' யாரும் கிடையாது. இழுத்துப் போர்த்திக்கொண்டு குடும்பப் பாங்கு கேரக்டர் என்றால், மறுத்துவிடுகிறார். "என்னைப் பார்த்தா குடும்பப் பொம்பிளை மாதிரியா தெரியுது? ரொம்பத்தான் குசும்பு நீங்க!" என்று குமட்டில் குத்தியிருக்கிறார், சமீபத்தில் தேஜாஸ்ரீயை புக் பண்ணப் போன இயக்குநரை. குத்து வாங்கிய இயக்குனரே சொன்ன தகவல் இது.



காலமுள்ள காலம் வரை
வர்மா - மேகலா

## அஜித் திடீர் மாற்றம்!

அஜித்தின் பேச்சில், நடவடிக்கையில் திடீர் மாற்றம். "அடுத்த சூப்பர் ஸ்டாரான என்னை எவனாலும் அடிச்சுக்கிட முடியாது..." என்று அள்ளி விட்டவர், ஒரு அர்த்த ராத்திரியில் ஆளே மாறிப் போய்விட்டார். இப்போது யாராவது கேட்டாலே, 'நான் ரொம்ப சின்னவங்க... ஏதோ ஒரு ஓரமா என் ரீலை ஓட்டிக்கிட்டு போறேன். அது அறுந்து போகாமல் இருக்கணும். அம்துபுட்டுத்தான்!" என்று பணிவோடு பேசுகிறார். இந்த மாற்றத்தின் பின்னணி மனைவியின் அட்வைஸ்தான் என்கின்றனர்.

## பாவம் சினேகா!

தமிழில் ஓரிரு படங்களிலும் பல விளம்பரங்களிலும் கலைச் சேவை செய்து கொண்டிருக்கும் சினேகா, கன்னடத்தில் ரவிச்சந்திரனுடனும் தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆருடனும் நடிக்க ஆ[illegible] வந்தது. அம்மணியும் ஆர்வத்துடன் அடித்து பிடித்[illegible] பிளைட் ஏறினார். ஆனால், என்[illegible] வில்லங்கமோ, இரண்டு வாய்ப்புக்களுமே பணால் பணா[illegible] ஆகிவிட்டன. எனவே, மீண்டும் கோடம்பாக்கத்துக்கே மூட்டை தூக்கிய சினேகம், "தெலுங்கிலேயு[illegible] கன்னடத்திலேயும் கவர்ச்சி காட்ட[illegible] சொல்லுறானுங்க... ஆனால் நான் திறமை மட்டும்தான் காட்டுவேன் என்று சொல்லி அந்த சான்ஸை உதறிவிட்டேன்" என்று அள்ளி விட்டுக்கொண்டிருக்கிறார்.



## கமலின் தத்துவம்!

விவசாயியாக இருந்தால் சோம்பேறித்தனத்தை உதறிவிட்டு மண்ணை நேசித்துப் பாடுபட்டால் அறுவடை நன்றாகவே இருக்கும். நானும் அந்த விவசாயி மாதிரித்தான். சினிமா என் பூமி. இதை நான் மனதார நேசிக்கிறேன். இதைத் தவிர வேறு எந்தத் தொழிலும் எனக்குத் தெரியாது. அதனால்தான் இத்தனை வருடம் இதில் என்னால் நீடிக்க முடிகிறது.

---

'புன்னகைப் பூவே' நந்தா, இவர் நடிக்கும் 'அகரம்' படத்தை அடுத்து 'இளமை துள்ளும்' என்ற படத்தில் நடிக்கிறார் இரட்டை வேடங்களில். இந்தப் படத்தில் சக்கரவர்த்தி என்பவர் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இவர் பழைய படங்களுக்கு இசையமைத்த தாயன்பனின் மகனாம்.

## ஐரோப்பிய விழா : விருமாண்டிக்கு விருது

வட கொரியாவில் நடைபெறும் ஐரோப்பிய பட விழாவில் கமல்ஹாசனின் 'விருமாண்டி' சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கம்யூனிஸ ஆட்சியில் இருக்கும் வட கொரியாவில் நடைபெறும் ஐரோப்பிய பட விழாவில் கலந்துகொள்வதற்காகக் கடந்த வாரம் கமல் அங்கு சென்றார். பெரும்பாலும் வெளிநாட்டுப் பட விழாக்களில் விருதுகள் எல்லாம் விழா தினத்தன்றுதான் அறிவிக்கப்படும்.

விழாவில் 'விருமாண்டி' படம் திரையிடப்பட்டது. விழா தொடர்ந்து நடந்துகொண்டிருந்தபோது அந்த இனிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. விழாவில் திரையிடப்பட்ட படங்களில் சிறந்த படமாக 'விருமாண்டி' தேர்வு செய்யப்பட்டது.

கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு, நடிப்பு எனப் பல துறைகளில் கமல் ஒருவரே கலக்கியிருப்பதை விழாவுக்கு வந்திருந்த அனைவரும் சிலாகித்துப் பாராட்டியிருக்கிறார்கள்.



இளங்கோ
விக்னேஷ் - சங்கீதா

## ரஜினியின் புதிய படம் 'சந்திரமுகி'

மக்களைவைத் தேர்தலின்போது ஆரவாரமாய் தொடங்கப்பட்ட 'ஜக்குபாய்' அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ள நிலையில், சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கவுள்ள ஒரு படத்தில் நடிக்க ரஜினி முடிவு செய்துள்ளார். அவருக்கு ஜோடி சிம்ரன் அல்லது ரீமாசென்னாம்.

இறைவா, நண்பர்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று. எதிரிகளை நான் பார்த்துக் கொள்கிறேன் என்ற பன்ச் லைனோடு ரஜினி வெளியிட்ட 'ஜக்குபாய்' ஸ்டில்ஸ் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆனால், தேர்தல் நேரத்தில் தனது தரப்பு வாதம் (பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு) மக்களைச் சென்றடையும் வகையில் வெறும் பரபரப்புக்காகவே 'ஜக்குபாய்' தொடங்கப்பட்டதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அந்தப் படம் அத்தோடு கைவிடப்பட்டுவிட்டது.

அதன் பிறகு கத கத கேளு என்று ஹரி, தேஜா என பல மொழி இயக்குநர்களையும் அழைத்துக் கதை கேட்டார் ரஜினி. ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை.

இந் நிலையில் சிவாஜி பிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் ராம்குமார் (பிரபுவின் அண்ணன்) தயாரிக்கவுள்ள ஒரு படத்தில் ரஜினி நடிக்கப் போகிறார். படத்தின் பெயர் 'சந்திரமுகி'.

படத்தை இயக்கப் போவது 'சின்னத்தம்பி' பி.வாசு. நீண்டகாலமாக சொந்தத் தயாரிப்பிலேயே நடித்து வந்த ரஜினி, வெளி நிறுவனத்தின் தயாரிப்பில் நடிக்கப் போவது இதுவே முதல் முறையாகும்.

அக்டோபர் 1ஆம் திகதி பூஜையைப் போட்டுவிட்டு நவம்பரில் சூட்டிங்கைத் தொடங்கப் போகிறார்களாம். ஜோடியாக சிம்ரனைப் போட முடியாவிட்டால் ரீமாசென்னை புக் செய்யவும் திட்டமிட்டுள்ளார்கள்.

செண்டிமெண்ட் கதை மன்னரான பி.வாசு, நீண்ட நாட்களாய் தமிழில் படம் இல்லாமல் கன்னடப் பக்கம் போய்விட்டார். அங்கு இப்போது அவர் படு பிஸி. இப்போது ரஜினியை வைத்து இயக்கப் போகும் 'சந்திரமுகி' படம் வாசுவுக்கு 50ஆவது படமாம்.

## கணவரைப் பிரிந்தாரா ரஞ்சிதா?

வாத்துக்காரிச்சியாக கோலிவுட்டில் புகுந்து இராணுவ அதிகாரியை 'டும் டும்' கொட்டிக்கொண்டு போன ரஞ்சிதா, மீண்டும் கோடம்பாக்கத்துக்கு ரிட்டேன் ஆகியுள்ளார் அல்லவா? கோலிவுட் வாய்ப்புகள் கிடையாததால், சின்னத் திரையில் திறமை காட்டி வரும் ரஞ்சிதா, தன் கணவரை தேச சேவைக்கும், தன்னை கலை சேவைக்கும் அர்ப்பணித்துவிட்டதாக அள்ளி விட்டுக்கொண்டிருந்தார். ஆனால், விவகாரம் வேறு. இராணுவ கணவருக்கும் ரஞ்சிதாவுக்கும் லடாய் ஏற்பட்டுப் பிரிந்துவிட்டனர். தி.நகரில் தனி வீடு பார்த்துப் போயே போய்விட்டார் அம்மணி.



ரம்யா

---

## மூலிகை நாயகிகள்

எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்பது தெரியுதோ இல்லையோ, எதைச் செய்தால் மேனியழகைக் காப்பாற்றலாம் என்பது மட்டும் கோலிவுட் ஆட்களுக்கு அத்துப்பிடி.

உடம்பை இளமையுடனும் அழகுடனும் வைத்திருக்க இவர்கள் படும்பாடு இருக்கிறதே, அடேங்கப்பா! அதில் ஒன்றுதான் மூலிகை வைத்தியம். பளபளப்பாக, மினுமினுப்பான உடல் பெற, சோர்வை நீக்க என சகல சமாச்சாரங்களுக்காகவும் கேரள மூலிகை வைத்தியத்தை நாடுகின்றனர் கோலிவுட்காரர்கள்.

'பாபா' படத்தில் நடிக்குமுன்பு தனது முகச் சுருக்கங்களை நீக்கி, தொலைந்து போன இளமையை மீட்டெடுக்க நடிகர் ரஜினி கேரளாவுக்குச் சென்று மூலிகை மாஸாஜ் செய்துகொண்டார். 'பிதாமகன்' படத்திற்குப் பிறகு விக்ரம், பிரஷ்னஸ்க்காக கேரளா சென்று வைத்தியம் செய்தார்.

மூலிகை மருத்துவம் ஹீரோக்களை மட்டும் கவரவில்லை. ஹீரோயின்களிலும் அதுபோல சிலர் மூலிகைப் பிரியர்களாக இருக்கிறார்கள்.

ஸ்னேகா வாரத்திற்கு ஒருநாள் மூலிகைக் குளியல் நடத்துகிறார். அத்தோடு மூலிகை மஸாஜும் அவ்வப்போது செய்துகொள்கிறாராம். இடுப்பை எடுப்பாக மாற்றவும் ஸ்பெஷல் மூலிகை வைத்தியம் பார்க்கிறாராம்.

இதேபோல, "சின்ன வீடா வரட்டுமா, பெரிய வீடா வரட்டுமா" என்று விவகாரமாக கேட்டு இரசிகர்களைக் கவர்ந்து இழுத்த தேஜாஸ்ரீயும் மூலிகை மருந்து சாப்பிடுகிறாராம். உடம்பு இளைக்க இந்த மூலிகை மருந்தாம்.



ஸ்ரீதேவி
தயாரிப்பாளர் - நிலாப்பிரியன்

த்ரிஷாவும் மூலிகைப் பிரியைதான். கேரள கைக்குத்தல் அரிசியை மட்டுமே சாப்பிடும் அவர், ஒட்டகப் பாலையும் அவ்வப்போது வரவழைத்துக் குடிக்கிறாராம். எல்லாம் உடம்பு சிக்கென இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

த்ரிஷா தனது மேனியழகுக்கு முற்றிலும் மூலிகை வைத்தியத்தை நம்பியிருக்கவில்லை. அண்மையில் அம்மணி ஒரு இரகசிய ஆபரேஷன் செய்து கொண்டாராம். ஆபரேஷன் என்றதும் நினைப்பது போன்று வில்லங்க சமாச்சாரம் எதுவும் கிடையாது.

இது பாடி ஷேப் சம்பந்தப்பட்ட விஷயம். நம்பர் ஒன் இடத்தைப் பிடிக்க தனக்கு என்ன குறை என்று யோசித்து, பின்னழகுதான் தனக்கு குறைவாக இருக்கிறது என்று முடிவுக்கு வந்த த்ரிஷா அதைச் சரிகட்ட முடிவு செய்தார்.




### மரணம்

பிறப்பு
என்ற தொடர்கதைக்கு
வைக்கப்படும்
முற்றுப்புள்ளி.

### திருமணம்

இக்காலத்தில்
மனதுடன் மனதை
இணைப்பதற்குப் பதில்
பணத்துடன் பணத்தை
இணைப்பது.

### காதல்

எதையும் எதிர்பார்க்காமல்
இதயத்தை மட்டும்
வேண்டி நிற்பது.

### புன்னகை

மனிதர்களுக்கு மட்டுமே
கிடைத்துள்ள
வரப்பிரசாதம்.
சிலரிடமிருந்துமட்டும்
போலியாய்.

*–எஸ்.என்.பிரியா, கொட்டகலை.*

## எனது சிறகடிப்பு

என் பேனாவின் முனைமட்டும்
மெல்லிய உணர்வுகளை
இலகுவாய் சிறைப்பிடிக்கும்.

முரட்டுத்தனத்துக்கான என்
மூளையின் பரப்பு
வெள்ளைப்
புல்வெளியாய் விரியும்.

தெரிந்தே செய்யும்
தவறுகளுக்காய்
கடவுளின் பெயரால்
ஒவ்வொரு
காலையும்
தேவதைகள்
முகமன் கூறும்.

சுருக்கங்கள்
மனதிலும் முகத்திலும்
விழுந்து விட்டாலும்,
புளித்துப் போன
வாழ்க்கையை
வாழச் சொல்கிறது
காதல்.

எண்ணி எண்ணிச்
செலவு செய்யும்
கணங்களைக்
கணக்கு வைக்க,
என்னையும் மீறி ஒரு
குரல்
யோசனை சொல்லும்.

பூமியின்
சொர்க்கங்களை
அநுபவிப்பதற்கென்றே,
அனுப்பிவைக்கப்பட்டவன்
நான்.

நந்தவனம் ஒன்று - என்
கைபிடித்து அழைத்துச் செல்ல
சில்மிஷிக்கிறது.
சிறகடிக்கிறேன் நான்...!

*-வை.சாராங்கன்.*



## உன்னைத் தேடி....

உன்னைக் காணா
ஒவ்வொரு நிமிடமும்
ஓராயிரம் நெருஞ்சிமுட்களாகி
ஒத்தடம் தருகின்றன.

நீ நடக்கும்
நிலத்தடி தடங்களுக்குள்
நிம்மதியைத் தேடுகின்றேன்.

நீ
சிரிக்கும் சில நிமிடங்களில்
நான்
செத்துப் பிழைக்கிறேன்.

எழுதிய கவிதைகள்
ஏராளமானாலும்
கிறுக்கிய உன் பெயர் தானே
கிழித்தெறிகிறது என்னுயிரை.



நீ
கசக்கி எறிந்த
காகிதத் துண்டு - என்
கண்ணீர் துடைக்கிறது.

(என்) முகத்தில் பூத்த
முகப்பரு கூட
முன்னுரையாகிறது
உனக்காக.

விட்டு விட்டுத் துடிக்கும்
விழி இரண்டுக்குள்
கட்டுப்பட்டு நான்
கைதியாகிட - நீ
கசையடி தருகிறாய்.

உன்
கொண்டையூசி முனையில்
கொய்து சென்ற
என் உயிரை
கொள்ளியி(லி)டாமல்
கொடுத்துவிடு என்னிடம்.

இறுக்கிப் பின்னிய - உன்
இரட்டை ஜடைக்குள்
இருந்திடத் துடிக்கும் - என்
இதயத் துடிப்பை
எப்போது தடுப்பாய்?

கடித்துத் துப்பிய
கை விரல் நகத்தை
மடித்து வைத்தால்
மழுங்கி விடுமென்று
செடியில் எடுத்த
சின்ன ரோசாக்களுடன்
சேகரித்து வைத்துள்ளேன்;
சோகமாய் நானிருந்தால்
சொந்தம் விசாரிக்குமென்று.

நொடிந்து விழும்
நுண்ணிய இடையில்
மடிந்து கிடக்கும் - என்
மனப்பூக்களை
மறுபடியும் மலர
மாயம் செய்வாயா?

*–இராமன் ஏ.சதீஷ், மஸ்கெலியா.*

## யார் நீ?

நண்பனாய் இரு
என்றேன்
நட்பினை நீ
வெறுத்தாய்
சகோதரனாய் இரு
என்றேன்
உடன் பிறப்பை நீ
வெறுத்தாய்
மகனாய் இரு என்றேன்
தாய்மையை நீ வெறுத்தாய்
காதலனாய் இருந்துனக்கு
காலமெல்லாம் வாழ்வேனென்றாய்
வார்த்தைகளால் கட்டியென்னை
பாசமழை நீ பொழிந்தாய்
பாசப் பனி மழையில்
நனைந்து கிடக்கிறேன்
நீ தூறலா? மழையா?

*–விமலா, வெள்ளவத்தை.*

## ஒரு வார்த்தை

நீ தந்த சத்தியங்களுக்குக் கீழ்
எத்தனை சங்கடங்கள் உள்ளன!
நீ என்ன பச்சோந்திக்குச்,
சகோதரனா?
அடிக்கடி நிறம் மாறுகிறாய்!
நீ கண்காணா 'கட்டார்'
தேசம் சென்ற பின்னும் - உன்
காதலை நம்பி
கன்னி நான் காத்திருக்கின்றேன்!
எங்கே உனது
கனிவு மொழிகள்,
எப்போதடா பொய்யானது? உன்
மெய் போன்ற பொய்கள்!
தினமும் உன் ஓலை வருமென
ஓயாமல் வாசல் வருகிறேன்! - நீ
எனக்குத் தோழனா - இல்லை
துரோகியா?
'என் உயிரே' என்றாய் - இன்று
எனை நடைப்பிணமாக்கி விட்டாய்!
என் குமுறலை இந்த
'முரசு' உனக்கு உணர்த்தினால்
ஒரு பொய்யாவது சொல்லிவிடு
'உன்னை நான்
காதலிக்கின்றேன்' என்று.

*–சுதுமாரன் சுபா, தலவாக்கலை.*

## இதயராகம்!

உறவுகள்
உடைந்தபோதும்
உன் நினைவுகள்
உள்ளத்திற்கு
இன்பத்தையே தருகிறது.

பந்தங்கள்
பகையான போதும்
உரிமையுடன்
சுகம் விசாரித்து
உள்ளன்புடன்
உறவாடியதெல்லாம்
உணர்வோடு
உறைந்துவிட்டது.



தண்டிக்கப்பட்ட
சந்திப்புக்கள்
வேண்டுமானால்
தர்க்கிக்கலாம்
நம்முள் விதைக்கப்பட்ட
சந்தோசங்கள்
கசங்கிடுமா?

சகியே!
சொந்தங்கள் நம்
சினேகங்களுக்கு
சுபம் இட்டபோதும்
சுதி மாறவில்லை - நம்
இதய வீணைகளுக்கு.

*–செல்வி நஸீஹா சம்சபாத்,*
*ஏத்தாலை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*ஜென் தத்துவமானது பெரும்பாலும் எதையும் பேசாமலிருப்பதாகவோ அல்லது பேசினாலும் சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுவதாகவோதான் எளிமையாகப் புரிந்து வைத்திருக்கிறோம். ஜென் எழுத்துக்களைப் பொறுத்தவரையில் குறுங் கதைகள், கவிதைகள், புதிர்க் கூற்றுக்களாகப் பலவற்றை அறிந்திருக்கிறோம். இன்றைய தமிழ்க் கவிதைகளிலும் ஜென் தாக்கத்திற்கு உட்பட்ட நிறைய அம்சங்களை நாம் காண்கின்றோம்.*

*இயற்கை, பருவ மாற்றங்கள், அலங்காரமற்ற புதிர்களைப் பெருமளவில் கொண்டவை ஜென் கவிதைகள்.*

*கவிதையை வாசித்ததும் பௌதிக அளவில் மிகவும் பரிச்சயமானதாகவும், உறுதியற்றதாகவும் தென்படும் உடனடி உலகம், மர்மம் சூழ்ந்ததாக மாறிவிடுவது ஜென் கவிதைகளின் விசேடம். நடப்பியல் வாழ்வின் சாரத்திலிருந்து தெறிக்கும் ஒரு துளி அபத்தம் அல்லது ஒரு துளி ஆனந்தத்தை அடையாளம் கண்டு கொள்கிறது நம் மனம்!*

*யுவன் சந்திரசேகர் மொழிபெயர்த்துத் தொகுத்த 'பெயரற்ற யாத்ரீகன்' நூலிலிருந்து சில ஜென் கவிதைகள்.*



மலையும் நதியும்
புல்லும் மரமும்
தரிசாகின்றன
மேலும் மேலும்.
புதிய போர்க்களத்தின்
குருதி வாடை காற்றில்
நிரம்பியிருக்கிறது,
பத்து மைல்களுக்கு
அப்பாலும்.
வெல்லும் குதிரைகள்
மேற்செல்லவில்லை
மனிதர்களும்
பேசவில்லை.
ஜின்ஷோ கோட்டைக்கு
வெளியே
நிற்கிறேன்,
அஸ்தமனச் சூரியனின்
முன்.

✷✷✷

வனாந்தரத்துக்குள் வெகு
தொலைவில் வசிக்கிறேன். நீர்ப்
புதர்களும் மரங்களும்
அடர்ந்திருக்கும்,
செடிகளில் வாசனையூறும்
பகுதியில். மலைகளில் மழை
பொழிவதையும் மலைகள்
ஒளிர்வதையும் பார்க்க முடியும்
என்னால்.
அங்காடி இரைச்சலை ஒருபோதும்
கேட்பதில்லை. தேநீரைச் சூடாக்க
சில இலைகளைக் கொளுத்திப்
போடுகிறேன் அடுப்பில்.
ஒரு மேகத்தைச் சிறிது வெட்டி
என் கிழிந்த ஆடைக்கு ஒட்டுப்
போடுகிறேன்.
அபூர்வமாகத்தான் நீடிக்கிறது ஆயுள்,
நூறாண்டுகளுக்கு. ஏன் இந்த
அவஸ்தை,
லாபத்துக்காகவும் புகழுக்காகவும்?

✷✷✷

புத்தாண்டு தினத்தில் என்
பெற்றோரைப் பார்க்க
ஏங்குகிறேன்
நான் பிறக்கு முன் அவர்கள்
இருந்த விதமாக.

✷✷✷

திட்டவட்டமான விதிகள் இல்லை,
ஜன்னலை எப்போது
திறந்து வைப்பது
எப்போது மூடுவது என்பது பற்றி.
இதெல்லாம்
நிலவோ பனியோ
தம் நிழல்களை எவ்விதம்
படிய வைக்கின்றன என்பதைப்
பொறுத்தது.

✷✷✷

சற்று முன்பிருந்த அன்பும்
புகையிலை விடுக்கும் புகையும்
சிறுகச் சிறுக
விடுத்துச் செல்வது
சாம்பலை மட்டுமே.

✷✷✷

என் வாழ்வில்,
அந்திப் பொழுதில் போல,
ஒலிக்கிறது ஒரு மணி
அந்தியின்
புத்துணர்வில் ஆனந்திக்கிறேன்.

✷✷✷

இறுதியில்,
இந்தச் சாலையில்தான்
வந்தாக வேண்டும் நான் என
நன்றாகத் தெரியும்.
ஆனால்,
இன்றுதான் அந்த நாள் என்று
எனக்குத் தெரியாது நேற்று.

✷✷✷

இரவு முழுவதும்
தூங்க முடியவில்லை என்னால்
என் படுக்கையில்
நிலா வெளிச்சம் கிடந்ததால்.
எங்கிருந்தோ ஒரு
குரல் அழைப்பதைக்
கேட்டுக்கொண்டிருந்தேன்,
தொடர்ந்து.
ஆமோதிக்கிற மாதிரி
பதிலளிக்கவில்லை எதுவும்.

✷✷✷

காற்று ஓய்ந்த பின்னும்
உதிர்கின்றன
மலர்கள்;
பறவையின் அலறலில்
ஆழமுறுகிறது
மலையின் மௌனம்.


✷✷✷

வருகிறவனுக்குத் தெரிவது
தான் வருவது மட்டும்தான்.
போகிறவனுக்குத்
தன் முடிவை மட்டும் தெரியும்
பூமிப் பிளவிடமிருந்து தப்பிக்க
மலை முகட்டை
இறுக்கித் தழுவுவதேன்?
காற்று எங்கே
தள்ளிச் செல்லுமென
அறிவதில்லை
தாழ மிதக்கும் மேகங்கள்.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : தி.விஜயேந்திரன்
வயது : 18
முகவரி :
அருள்மனை சிறுவர்
இல்லம், மானிப்பாய்.
பொழுதுபோக்கு:
புதியதை தேடுதல்.



பெயர் : K.Kunasegaram.
வயது : --
முகவரி : P.O.Box-
6354, Doha,
Qatar.
பொழுதுபோக்கு : ரீ.வி.,
பத்திரிகை.



பெயர் : K.Kavithasan.
வயது : 24
முகவரி : P.O.Box-
10843, Kaamco
Wakrha Crmp,
Doha, Qatar.
பொழுதுபோக்கு : ரீ.வி.,
பத்திரிகை.



பெயர் : கி. மேனகா
வயது : 18
முகவரி : ஆடியபாத வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு : பேனா நட்பு,
பத்திரிகை, ரீ.வி.



# லேடிஸ் ஸ்பெஷல்

## மெதுவாக வரட்டுமே முதுமை!

நாம் ஒவ்வொருவரும் நமது எதிர்காலம் பற்றிய அறிவுடையவர்களாய் இருக்கிறோம். நோய்வாய்ப் படுதல், வியாதிகள், வயது முதிர்ச்சி, ஏன் மரணமும் கூடத்தான் நமது உள்மனதின் திட்பத்தால் பாதிப்பானவையே. வயது முதிர்வு அடைவது

தவிர மற்ற செல்களை மாற்றி அமைத்துக்கொள்கிறது. ஒவ்வொரு விதையும் இலட்சக்கணக்கான செல்களை மறுபடி தோற்றுவிக்கும் சக்தி படைத்தவை. ஆனாலும் இந்தச் செல்கள் குறிப்பிட்ட நிலைக்கு வந்தவுடன் மேலும் வளரவோ, வேற்றுரு பெறவோ முடிவதில்லை. அப்போது உடல் முதிர்வு நிலை அடைய ஆரம்பிக்கிறது.

இளமையாய் எண்ணுங்கள். எண்ணங்கள் நமது உடலில் பெரும

எண்ணினால் உங்கள் உடம்பு நல்ல, ஆரோக்கியம் தரும் உணவையே ஏற்கும். உங்கள் உடம்பில் உள்ள ஒவ்வொரு செல்லும் இந்தப் புதிய அறிவுரைகளை ஏற்கும். அதனால் நீங்கள் இளமையுடனும், நலத்துடனும், சக்தியுடனும் இருப்பதாய் உணர்வீர்கள். இளமையுடனிருப்பதற்கு ஒருவர் புதிய, இயற்கையான, நலமுள்ள உணவுகளைக் கட்டாயமாக உண்ண வேண்டும்.

"உயிருள்ள உணவு முறை" என்பது பழங்கள், பருப்புகள், நிறைய பச்சைக் காய்கறிகள் சேர்ந்த எளிதான சைவ உண வேயாகும். இவற்றில் உயிர்ச்சத்து உள்ளது. காலையில் பழம் சாப்பிடுவது விஷய முறிப்பதாகும். அது இரத்தத்தை சுத்தம் செய்வதுடன் உங்களையும் இளமையாய் வைத்திருக்கும்.



பற்றி நாம் படித்திருக்கிறோம். 60 அல்லது 65 வயதே ஓய்வு பெறச் சரியான வயது என்று முடிவு செய்கிறோம். ஏதோ குறித்து வைத்தது போல நாம் ஓய்வு பெற்றவுடன் நமது உடலின் இயக்கமும் மெதுவாக குறைய ஆரம்பிக்கிறது.

இது எதை உணர்த்துகிறது? மனதின் வெளிப்பாடுகள் தேகத்தைப் பாதிக்கின்றன. ஆகவே வயது முதிர்வு நிலையின் பின்னேற்றம் மனநிலையிலே ஆரம்பமாக வேண்டும்.

உடம்பானது ஒவ்வொரு ஏழாண்டுக் காலத்திலும், மூளை செல்களைத்

பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குண்டான ஒருவர், ஒல்லியாக மாற வேண்டுமெனில் அவ்வாறே நினைத் தல் வேண்டும். குண்டு பற்றிய நினைவுகளுடனிருந்தால் நல்லதற்கில்லை. எல்லா புலன்களின் மூலமும் நீங்கள் ஒல்லியாய் மாறியிருப்பதாய் எண்ணுங்கள். ஒல்லியான ஆரோக்கிய மான உடம்பாக ஆக்கிக் கொள்வதாக நிச்சயமாய் உங்கள் மனதில் உறுதி கொண்டால் உங்கள் உடம்பும் அவ்வாறே ஆகும்.

நீங்கள், 'நான் ஒல்லியாய், ஆரோக்கியமாய், இளமையாய், அழகாய் இருக்கிறேன்' என்று

விஷ உணர்வுகளை விடுவித்துக் கொள்ளுங்கள். மீராபாய், அமுதமாய் நினைத்துக் குடித்ததால்தான் அவளுக்கு அளிக்கப்பட்ட விஷமும் அமுதமாய் மாறியது. நீங்கள் இளமையாயிருப்பதற்கு இளைஞர்களுடனே இருங்கள்.

நாம் வயது முதிர்வடைந்து விட்டோம் என்று எவ்வாறு அறிவது? எப்போது நாம் பழையனவற்றைப் பற்றி அடிக் கடி பேசுகிறோமோ அப்போதே ஆரம்பிச்சிடுச்சு ஐயா! அப்போது நாம் மன உணர்வால் வயதாகி விடுகிறோம். எதிர்காலத்தைப் பற்றி எண்ணி, பேசும்போது மீண்டும் இளமைத் துளிர் விடுகிறது. அதனால்தான் இளைஞர்கள் எப்போதும் தம் எதிர்காலம் பற்றியே எண்ணுகிறார்கள்.

## இயற்கை மருத்துவம்

**ஒற்றைத் தலைவலி**

பூந்திக்கொட்டைத் தோலை 60 மில்லி தண்ணீரில் தேய்த்தால் நுரையுண் டாகும். இரண்டு சொட்டு நுரை நீரை மூக்கிலிட்டால் ஒற்றைத் தலைவலி நீங்கும்.

வெள்ளைச் சாரணை இலையை இடித்து, அதன் சாற்றை இரண்டு சொட்டுக்கள் மூக்கிலிட்டால், ஒற்றைத் தலைவலி நீங்கும்.


**இடுப்பு வலி**

6 கிறாம் நெருஞ்சி முள்ளை பவுடராக்கி, ஒரு டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி தினசரி இரண்டு வேளை குடித்தால், சிறுநீரகக் கற்களால் உண்டாகும் இடுப்புவலி குணம் பெறும்.

**வெந்தயம்**

சிலருக்கு சொட்டுச் சொட்டாக சிறுநீர் பிரியும். இந்தப் பிரச்சினை நீங்க

5 கிறாம் வெந்தயத்தை தண்ணீரில் சுத்தம் செய்து வெயிலில் உலர்த்தி பவுடராக்கி தேனில் கலந்து தினசரி இரண்டு வேளை சாப்பிடலாம். இதனால் மழைக்கால வேதனைகளும் நீங்கும்.



**தர்ப்பூசணி**

வெட்டை நோயால் மற்றும் உடல் உஷ்ணத்தால் ஏற்படும் சொட்டு மூத்திரம், எரிச்சல் வலி, சிறுநீரக வலி ஆகியவை குணம்பெற 5 கிறாம் முதல் 7 கிறாம் வரை தர்ப்பூசணி விதைகளைப் பவுடராக்கி தினசரி ஒருவேளை சாப்பிடலாம்.

**சவ்வரிசி**

சிறுநீரகத்தின் வீக்கம், வலி ஆகியவைகள் குணம் பெற சவ்வரிசியைத் தண்ணீரில் கொதிக்க வைத்து, தேன் கலந்து குடித்து வந்தால் நல்லது.

**மருதாணி**

மூன்று கிறாம் முதல் 5 கிறாம் வரை உலர்ந்த மருதாணி இலை பவுடரை சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும். சிறுநீரில் கலந்திருக்கும் விஷச் சத்துக்கள் வெளியாகும். நீர் துவாரத்தில் ஏற்படும் கட்டிகளும் கரையும்.

**வசம்பு**

3கிறாம் வசம்பை கஷாயமாக்கி, அதை காலை மாலை இரண்டு வேளை குடித்தால் சிறுநீரகக் கோளாறுகள் நீங்குகின்றன. சிறுநீரகங்களுக்கும் சக்தி கிடைக்கும்.

கடுகு ஒரு கிறாம் எடுத்து 25 மில்லி தண்ணீரில் அரைத்து வடிகட்டி, இரண்டு சொட்டு நீரை மூக்கிலிட்டால் ஒற்றைத் தலைவலி நீங்கும்.

தனியா 3கிறாம் (சீமை மரிக்கொழுந்து), உஸ்த்துகுத்தூஸ் 3கிறாம், மிளகு 5 எண்ணிக்கை மூன்றையும் பவுடராக்கி, காலையில் வெறும் வயிற்றில் தண்ணீருடன் சாப்பிட்டால் ஒற்றைத் தலைவலி நீங்கும்.

***தலைவலி உள்ளவர்கள் கவனிக்க வேண்டியவை.....***

அதிக வெளிச்சமில்லாத இடத்தில் படுத்துக் கொள்வது நல்லது. இரைச்சல் இல்லாத அமைதியான இடத்தில் உறங்குவது நல்லது. தலைவலி அதிகமாக இருக்கும் சமயத்தில் எந்த உணவையும் உட்கொள்ளக் கூடாது. முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். உங்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் மன உளைச்சல்களை ஓரங்கட்டி விட்டு எதைப் பற்றியும் சிந்திக்காமல் , கலைப்படாமல் அமைதியாக இருப்பது நல்லது.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

### ரவை தொதல் (40-60 துண்டுகள்)

தேவையான பொருட்கள் :-

ரவை - 1 கிலோகிறாம்
தேங்காய் - 8
சீனி - 1 1/2 கிலோகிறாம்
சர்க்கரை - 1 1/2 கிலோகிறாம்
பயறு - 100 கிறாம்
கஜு - 100 கிறாம்
உப்புத் தூள் - 1 சிட்டிகை

செய்முறை :-

தேங்காயைத் துருவி 6 தம்ளர் முதல்பாலும் 10 தம்ளர் ஏனைய பாலும் பிழிந்தெடுத்துக்கொள்க.

10 தம்ளர் பாலில் சர்க்கரையைக் கரைத்து வடித்தெடுத்து, வடித்த பாலுடன் அரித்துத் துப்பரவு செய்த ரவையையும் சீனியையும் கலந்து தாச்சியிலூற்றி அடுப்பில் வைத்து இடைவிடாது துளாவிக் காய்ச்சவும்.


கலவை திரளும் பதத்தை அடையும்போது, 4 தம்ளர் முதல்பால், சவ்வரிசி, பயறு, கஜு, உப்பு என்பன சேர்த்துக் கிளறி தொதல் பதம் அடைந்ததும் தட்டில் கொட்டிப் பரவித் துண்டுகளாக வெட்டிக்கொள்க.

## நலமாக வாழ்வோம்

## சவாசனம்

இந்த ஆசனம் சாந்தி ஆசனம் என்றும் சொல்லப்படும். மிகவும் முக்கியமான ஆசனம். இந்த ஆசனத்தை முறைப்படி செய்து வந்தால் அதிக இரத்த அழுத்தம் உடன் சரியான நிலைக்கு வந்து விடும். உடல் முழுவதும் பூர்ணமாக ஓய்வு பெற்று அதிக உற்சாகம் ஏற்படும்.

எடுக்கும்போது வயிறு பலூன் போன்று உயர வேண்டும். மூச்சை வெளியேற்றும்போது வயிறு சுருங்கி சமநிலை அடைய வேண்டும்.



<u>செய்முறை</u>

1. விரிப்பின் மீது கால்களை நீட்டி அமரவும்.
2. மெதுவாக முதுகை தரையில் வைத்துப் படுக்கவும்.
3. முகம் வானத்தை நோக்கி அல்லது வலது அல்லது இடது புறம் வைத்து கைகளை சிறிது பரப்பவும். கால்களை 2 அடி அகலம் பரப்பவும்.
4. ஆழ்ந்த மூச்சை 5 முறை எடுத்து விடவும். ஆழ்ந்த மூச்சு என்பது வெளி மூச்சை மூக்கின் வழியாக

<u>முக்கிய குறிப்புகள்</u>

1. உள்ளங் கைகள் வானத்தை நோக்கி இருக்க வேண்டும்.
2. உடல் உறுப்புகள் அனைத்தையும் தளர்த்தி வைக்கவும். எந்தப் பிடிப்பும், அழுத்தமும் உடலில் இருக்கக் கூடாது.
3. மூச்சை ஒரே சீராக எடுத்து விடவும்.
4. கண்கள், வாய் மூடி இருக்க வேண்டும்.
5. முதுகுத்தண்டு விரிப்பின் மீது நன்கு படிந்து இருக்க வேண்டும்.

**யோகா தொடரும்......**

## அழகும் ஆரோக்கியமும்!

நோய் தீர்த்து ஆரோக்கியம் தரும் மூலிகை இலைகள் பல உண்டு. அதோடு இவைகள் நம் அழகையும் காக்க வல்லவை.

மருத்துவக் குணங்கள் நிரம்பப் பெற்றது துளசி இலை. இது நம்மில் பலருக்கும் தெரியும். தினமும் ஒரு ஸ்பூன் தேனுடன் இரண்டு துளசி இலைகளைச் சேர்த்து உண்டு வருவதால் குரல் வளம் பெறும். குடல் பிரச்சினைகள் பலவற்றிற்கும் இது நல்லது என்பதுடன் சருமமும் இதனால் நன்கு மேம்படும்.துளசிச் சாறு - ஒரு ஸ்பூன் சந்தனம் - கட்டி அல்லது தூள் (கொஞ்சம்) இரண்டையும் நன்கு சேர்த்துக் கலந்து பசை போல ஆக்கி முகம் முழுவதும் வட்ட வட்டமாகக் குழைத்துத் தடவி பேக் போல போட்டு, அப்படியே பதினைந்து நிமிடங்கள் வரை உலர விட்டுப் பின்பு தண்ணீரில் முகம் கழுவ, சருமம் பளபளப்பாகும். துளசி இலையை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து நன்கு தண்ணீர் விட்டுச் சுத்தம் செய்து அதிகம் தண்ணீர் விடாமல் கெட்டியாக அரைத்து தலையில் பேக் போல போட்டு அரைமணி நேரம் வரை அப்படியே விட்டு, பின்பு வீட்டிலேயே அரைத்த சீயக்காய்த் தூள் அல்லது மூலிகை ஷாம்பூ கொண்டு தலையை அலச வேண்டும். அப்படித் தலைக்குத் துளசி பேக் போட கருந்துளசியே மிகவும் உகந்தது. இப்படித் தொடர்ந்து செய்து வர தலையில் உள்ள பேன், பொடுகு தொல்லைகள் முழுமையாக ஒழியும்.

இலைகளின் அரசன் வேப்பிலை. மருத்துவக் குணங்கள் மிகுந்த இது ஆரோக்கியத்துடன் அழகும் தந்து சருமமும் காக்கக் கூடியது.

வெறும் வேப்பிலையை நன்கு சுத்தம் செய்து அரைத்து, அப்படியே பற்றாக முகப் பருக்களின் மீது தடவி பதினைந்து நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவ பலன் தெரியும்.

வேப்பிலையைப் பசை போல அரைத்து அதனுடன் கொஞ்சம் இரத்த சந்தனம் (இது மருந்துக் கடைகளில் கிடைக்கும்) கலந்து பருக்களின் மீது தடவி பத்து நிமிடங்கள் உலர விட்டு, பின்பு முகம் கழுவ நல்ல ரிசல்ட் தெரியும்.

வேப்பிலைப் பவுடருடன் கொஞ்சமாகக் கடலை கலந்தும் தலையில் தேய்த்துத் தலையை வெதுவெதுப்பான நீர்கொண்டு அலசலாம். தலையில் பொடுகு அதிகமாக இருந்தால் சீயக்காய்ப் பொடியுடன் இரண்டு ஸ்பூன் வேப்பிலைப் பொடி கலந்து தலையில் தேய்த்து வெதுவெதுப்பான நீர் விட்டு அலசலாம்.




சன்னல் பக்கம் போனான். கதவைத் தள்ளினான்.

"விஜயா!"

"பாபி! பாபி! பாபி!"

விஜயா இரைந்தாள். கட்டிலில் கிடந்தாள். "நீ அப்பா இல்லே. போ, போ!"

வீறிட்டு அழுதாள். அவனைப் பார்க்க விரும்பாமல் முகத்தை மூடினாள்.

'ஓ' வென்று சீறிக்கொண்டு அழுதாள். பெரிய கேவல்களுடன் குலுங்கிக் குலுங்கி அழுதது அவன் நெஞ்சைத் தொட்டது.

கமலம் ஓடி வந்தாள்.

சன்னலைச் சாத்தினாள்.

"உங்களை நான் கேட்டுக்கிறேன். முதல்லே போங்க வெளியே!"

"கமலம்" அவன் இரைந்தான்.

"என்ன" என்று சொல்லி ஓர் எக்காளத்துடன் அவள் திரும்பினாள். "என்ன மிரட்டுறீங்க? மிரண்டுடுவேன்னு பார்க்கறீங்களா?

நீங்க என்ன சொன்னாலும் நான் நம்பமாட்டேன்! போங்க, வெளியே போயிடுங்க!

போங்க! போங்க! போங்க!"

அவனை அந்த வார்த்தைகள் பிங்பாங் பந்து போல் அங்கும் இங்கும் அடித்து விளையாடியது.

அந்த வார்த்தை ஒரு கொடுக்காக மாறி அவனைப் பல இடங்களில் கொட்டியது.

இரு பெண்களின் அழுகைகளும் அங்கே நாராசத்தையே உண்டு பண்ணியிருந்தன.

அவன் மனம் சுருண்டது? எங்கேயோ அவனது சுய மதிப்பில் ஒரு கீறல் விழுந்து விட்டது. பதில் கோபமும் ஆத்திரமும் அவனுக்குப் பொங்கி வந்தன. அதோடு ஒரு விரக்தி அவனிடம் சிறுகச் சிறுக வளர்ந்து, இப்போது பெரிதாகி உள்ளம் முழுவதையும் வியாபித்து நின்றது.

'இனி என்ன இருக்கிறது வாழ்வில்!'

கண்ணீர் முட்டிக்கொண்டு வந்தது.

எல்லா விஷயத்திலும் வஞ்சிக்கப்பட்டு விட்டான். உலகமே அவனுக்கு அந்நியமாகத் தோன்றியது. அவனது கடைசி நம்பிக்கைகள் எல்லாம் சிதறிக் கீழே விழுந்தோடிவிட்டன.

விரக்தி ஒரு தீர்மானத்தை ஏற்படுத்தியது. இனி வாழ முயற்சித்துப் பயன் என்ன? நேராகப் போய் சரண் அடைவதுதான் வழி! பொலிஸ் என்ன வேண்டுமானாலும் அவனைச் செய்துகொள்ளட்டும்.


மனத்தில் அப்படி வைராக்கியம்! விரக்தி!

கதவைத் திறந்தான்.

வெளியே வந்தான்.

கண்ணில் வந்த நீரைத் துடைத்தான். பல்லைக் கடித்ததும் அந்த விரக்தி வெறி ஆர்ப்பரித்து வந்தது.

மைதானத்தில் இறங்கினான். 'தட தட'



வென்று அதன் குறுக்கே நடையிட்டு பொலிஸ் நிலையத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

பத்து மணி வெயில் சுள்ளென்றது.

அழுகை மீறியே வந்தது.

ஒரு மைதானம் போயிருப்பான்.

'தட தட' வென்று காலோசை!

"டேய்" என்று குரல்.

நின்றான்.

யாரோ அவனை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தார்கள்.

"யார் அது?"

தலைதெறிக்க வந்தான்.

வர வர உருவம் துல்யமாகிக் கொண்டிருந்தது.

"யார் இது? சூர்யகுமாரா?"

சிரித்துக்கொண்டே வந்தான். சினிமாச் சிரிப்பு! செயற்கைச் சிரிப்பு!

ஒரே ஒரு கணம் மிரண்டான்.

"ஓடாதே!"

அவன் இரைந்தான்.

அவன் உத்தர்வுக்காக நிற்கவில்லை. இஷ்டப்பட்டே நின்றான்.

அருகில் வந்தான். இருபதடி தள்ளி நின்றான். பைக்குள் கையை விட்டான். கைத்துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

அவன் பயப்படவில்லை.

"சுடு! சுடுடா! நானே வெறுத்தாச்சு! சுடு! நான் சாகத் தயார்."

'அந்தக் குரு' துப்பாக்கியை குரு மீது குறி வைத்தான்.

அதன் டிரிகரைப் பிடித்துக்கொண்டு பார்வையை அழுத்தமாகக் காட்டினான்.

"சுடு! சுடு! நான் சாகத் தயார்!"

-குரு கத்தினான்.

"சுடுடா! சுடு!"

வெறி வந்தது போல் இரைந்தான்.

"சுடு!"

அந்தப் பிரதேசம் எதிரொலித்தது.

"சு....டு......."

தொண்டை கிழியக் கத்தினான்.

"என்ன? சூரியகுமார் கண்கள் ஏன் மாறுகின்றன?"

அவன் கண்கள் இப்படி மாறக்கூடிய வையா?

ஏன் அவை பேதலிக்கின்றன?

"குரு!"

'அவன் குரலா இது? அந்தக் கரகரப்பு இல்லையே!"

"நான் உன்னைச் சுடப்போறது இல்லே!"

குரு திடுக்கிட்டான்.

துப்பாக்கியைக் கீழே இறக்கினான்.

"நான் உனக்குத் துன்பம் நிறையக் கொடுத்துட்டேன். உன் வாழ்க்கையைப் பாழடிச்சுட்டேன்! உன் குடும்பத்தையே சின்னாபின்னமாக்கிட்டேன்."

அவன் கண்களைக் கண்டு குரு பிரமித்தான்.

"குரு! வாழ்க்கையிலே கொடூரமா வாழ்ந்துட்டேன். கொடூரத்தாலே உலகத்தை மாத்தலாம்னுகூட நினைச்சேன்! பாதகமான பல காரியம் பண்ணினேன். கத்தியையும் கம்பையும் வச்சு அட்டகாசம் செய்தேன். ஆனா....உலகம் ஒரு துளிக் கூட மாறல்லே! இம்மி! அணு! அணுவிலும் அணு, அந்த அளவுகூட மாறல்லே! நான் செஞ்சதெல்லாம் வீண்! நான் நம்பினது மட்டும் நடக்கணும்னா உலகத்தில் எல்லாரையும் அழிச்சுட்டுப் புதுசா நம்பிக்கையோடு ஒரு பாலகனை வளர்க்கணும்.

அவனும் பின்னாலே நாம்ப நினைச்சபடி இருக்கப்போறானா, தெரியாது. அது அவன் மனசைப் பொறுத்தது.

"உலக எண்ணங்கள் மாறணும்னா, உலக மனசுதான் மாறணும்! இந்த மாற்றம் திடீர்னு நேர்ந்துடாது! சத்தியமா சொல்றேன். படிப்படியா, தானா அது இஷ்டம் போலத்தான் மாறி வருது. பலாத்காரமா ஏதாவது செஞ்சா மாறுகிறதும் இல்லே! மாறினது நிற்கிறதும் இல்லே!

"இப்படி நான் நினைச்சது சரியோ, தப்போ,! என் மனசிலே இப்படித் தோணிப்போச்சு! அவ்வளவுதான்!

"இதனாலே நான் மாறிட்டேன்! செஞ்சதெல்லாம் தப்பு மட்டுமில்லே. வீண்! அநாகரிகம்!

"இனிமேல் நான் செஞ்சதைப்போய் அழிக்கமுடியுமா? குடும்பங்களின் கண்ணீரைப் போய் நிறுத்த முடியுமா?

"நல்லவேளை! நீ பூரணமாக அழியறதுக்கு முன்னாலே உன்னைப் பார்த்துட்டேன்! உன்னண்டை மன்னிப்புக் கேட்க இங்கேயே அடிக்கடி உலாவி வரேன்!

"எல்லாத்தையும்விட உன் விஷயத்திலே எனக்கு மாறுதல் ஏற்பட்டதுக்குக் காரணம், நீ என் வீட்டுக்குப் போயிருக்கே, என் மனைவியைப் பார்த்திருக்கே! அவகூடப் படுத்திருக்கே! இந்த இடத்திலே நீ எனக்கு வஞ்சனை பண்ணினாலும் பண்ணியிருக்கலாம். உன்னாலே முடியும்! அதை நீ செய்யலே! அதிலேயே உனக்கு சுத்தமான புத்தியும் இருக்குன்னு புரிஞ்சுகிட்டேன். உண்மையிலே இப்போ ஓடி வந்த உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேனே! அதுக்குக் காரணமே நீ என் மனைவி கூட நடந்து கிட்ட உயர்ந்த பண்பு தான்! நிச்சயம் அதுதான்!

"ஆனா, நான் பாதகன்! உன் உருவத்தை வச்சே மனச்சாட்சி இல்லாம உன் பெண்டாட்டி, பெண்ணைக் கெடுத்தேன். நான் ஒரு பாபி! என்ன மன்னிச்சிடு!

"உன்னுடைய மன்னிப்பு மட்டும் போதாது! இன்னும் பல பேருடைய மன்னிப்பு எனக்கு கிடைக்கணும். அதுக்கும் ஒரு வழி பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன்."

"இந்தா! இந்தக் கடிதத்தைப் படி! பொலீசுக்கு எழுதியிருக்கேன். நீ நானில்லனு சொல்லியிருக்ககேன். நான் செய்ஞ்ச அநியாயத்தை எல்லாம் விளக்கியிருக்கேன்."

"யாரு இவங்க? (திரும்பிப் பார்க்கிறான். சிரிக்கிறான்) பொலீஸ்! வாசனை புடிச்சு வந்திருக்காங்க! மைதான ஓரத்திலே பதுங்கி பார்க்கிறாங்க பார்! பயங்கரவாதியைப் பிடிக்கணும்! பிடிச்சுக்கட்டும்."

"இந்தா காகிதத்தை வச்சுக்க! என்னை மன்னிச்சுடு! மனித இனம் வாழ்க! மனம் வாழ்க!"

குரு அவன் என்ன செய்யப் போகிறான் என்று யோசிக்கும் முன் துப்பாக்கியை இடது நெஞ்சில் வைத்து இழுத்தான்.

"டமீல்" என்று பயங்கர சத்தம்.

அவன் சிதறிக் கிடந்தான், கீழே....

குருவின் கண்களில் நீர். அவன் கைகளில் குமார் கொடுத்த கடிதம் படபடத்தது.

தூரத்தில் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கமலம் அங்கே ஓடி வந்து அழுது நின்றபோதும் அவன் அப்படியே நின்றான்.

அவனைப் போலவே இருந்த உருவம் கீழே

**எழுதியது**
**புஷ்பா தங்கதுரை**

இறந்து கிடப்பதைப் பார்த்து, நடந்ததை ஊகித்து குருவின் காலடிகளைப் பிடித்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக் கண்ணீர் சிந்திய போதும் அவன் அப்படியே நின்றான்.

வாசனை பிடித்து வந்த ரகசியப் பொலீசார் அவன் முன்னால் சூழ்ந்த போதும் அப்படியே நின்றான்.

"ஸார்! ஸார்! வருத்தப்படுகிறோம்!" என்று எல்லாம் உணர்ந்து சொன்னபோதும் அப்படியே நின்றான்.

அவனுக்கு ஒன்றுமில்லை. சத்தியம் வென்று விட்டதே என்று நினைத்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சி அது!

வெல்லாது என்று அவன் தன் அனுபவத்தால் திட்ட வட்டமாக நினைத்திருந்தான்.

இப்போது வென்றதும் அதிர்ச்சி!

ஆனந்த பூர்வமான அதிர்ச்சி!

அதிசயபூர்வமான அதிர்ச்சி!

அந்தக் கணங்களில் அவன் வாழ்க்கையை இறுக்கியிருந்த சிக்கல்கள் எல்லாம் மறைந்து விடுதலையானது போல் உணர்ச்சி அவனுள்ளே கூடியிருந்தது.


அதனால் அவன் ஒரு பரவச அதிர்ச்சியில் இருக்கிறான்.

அவனை விட்டுவிடுங்கள்.

அதிலிருந்து அவன் மீண்டுவர சில மணி நேரங்களாவது ஆகும்.

ஆகட்டும்.

(துரோகம் முற்றும்...)

**அடுத்த வாரம் ஆரம்பம்!**

**ஒரு தாய் ஒரு மகள்**

பரபரப்பான புதிய தொடர்

முரசு வாசகர்களை உற்சாகப்படுத்த

புதிய தேடல்களில் நீண்ட தொடர்

அடுத்த வாரம் வரை பொறுமை ப்ளீஸ்......


# இப்படியும் விருது



உலகப் புகழ்பெற்ற பாப் பாடகி ஜென்னிபர் லோபஸ் (இப்படத்தின் மத்தியில் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு நிற்பவர்). இவர் குழந்தைகள் மீதும் அதிலும் நோயுற்ற குழந்தைகள் மீது மிகவும் நேசம் கொண்டவர். இதற்காக அவருக்கு குழந்தைகள் நேய விருது வழங்கப்பட்டது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்கு ஜென்னிபர் லோபஸ் தனது தோழிகளுடன் சென்றார். அங்குள்ள குழந்தைகளுடன் மகிழ்ச்சியாகப் பேசி குதூகலப்படுத்தினார்.

**தவிர்க்க முடியாத இவ்வாரத்தை விட்டுவிடுங்கள்**
**அடுத்தவாரம் வழக்கபோல அசத்துவோம்!!**

# சந்திரபாபு ஒரு சரித்திர புருஷன்

சென்ற வாரத் தொடர்ச்சி.....

ஆனால் மீனாட்சியோ, தன் கணவன் மீது ஆத்திரம் கொண்டு அடைக்கலம்தான் அவரைக் கொன்றிருக்க வேண்டும் என்ற சந்தேகத்தில் பொலிஸுக்குப் போன் செய்கிறாள்.

குழந்தை லட்சுமி பயந்து அடைக்கலத்தை நோக்கி ஓடிவரும்போது கீழே விழுந்து பலத்த காயமடைகிறாள். டாக்டரிடம் தூக்கிக் கொண்டு ஓடுகிறான். டாக்டர் கையை விரித்துவிடுகிறார். கடைசிப் புகலிடமாக கர்த்தரிடம் ஓடுகிறான்... கதவைத் தட்டுகிறாள்... 'தட்டுங்கள் திறக்கப்படும்' இயேசுவின் வாசகங்கள் உயிர் பெறுகின்றன.

சந்திரபாபுவுக்கு இந்தப் படம் வெற்றி என்பது மட்டுமல்ல, அவர் ஒரு சிறந்த திரைப்பட இயக்குநர் என்று தின, வாரப் பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டின.

தனது நகைச்சுவை நடிப்பால் தமிழ் இரசிகர்களை கொள்ளை கொண்டவரின் சொந்த வாழ்க்கை கசப்பான அநுபவமாகவே அமைந்துவிட்டது. இருப்பினும் தானும் சிரித்து, தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் சிரிக்கவைப்பது அவரது இரத்தத்தில் ஊறிய விஷயமாகும்.

உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தைப் பார்ப்போம். 1965ஆம் ஆண்டு இந்திய - சீனா எல்லைப் போர் நடந்தது. நமது படையினரை உற்சாகப்படுத்த தென்னகக் கலைஞர் குழு ஒன்று எல்லைக்குச் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தியது.

சிவாஜி, பத்மினி, சாவித்திரி, எம்.எஸ்.விஸ்வநாதன் இவர்களுடன் சந்திரபாபுவும் சென்றிருந்தார்.

கலை நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு, கலைக்குழு புதுடெல்லி சென்று ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவர்களைச் சந்தித்தது.

"யாராவது பாடுங்களேன் என்றார் ஜனாதிபதி. எல்லோரும் பாடத் தயார்தான். ஆனால், சுதி சேர்க்க ஆர்மோனியம் இல்லை.

எம்.எஸ். விஸ்வநாதனின் தயக்கத்தைக் பார்த்த ஜனாதிபதி, என்ன இவ்வளவு பெரிய மாளிகையில் ஓர் ஆர்மோனியம் இல்லையா....? என்றதும் அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஆர்மோனியம் வந்தது.

எம்.எஸ்.விஸ்வநாதன் வாசிக்க சந்திரபாபு....

'பிறக்கும் போதும்
அழுகின்றான்...
இறக்கும் போதும்
அழுகின்றான்...
ஒருநாளேனும்
கவலையில்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே'

என்று பாடியதும் 'அடடா... என்ன அர்த்தம்... என்ன அர்த்தம்... இந்த





வரிககளில்" என்று ஜனாதிபதி பரவசப்பட்டார்.

உணர்ச்சிவசப்பட்ட சந்திரபாபு. ஓடிப்போய் ஜனாதிபதி பக்கத்தில் உட்கார்ந்து அவர் தோள் மீது கைபோட்டபடியே. 'நீ ரசிகன்டா கண்ணு' என்று அவரது தாடையைப் பிடித்து கொஞ்ச ஆரம்பித்துவிட்டார். அனைவருக்கும் முதலில் திகைப்பு. ப்புறம் நகைப்பு. ஜனாதிபதிக்கே நகைப்புதான்.

'ஒண்ணுமே புரியலே
உலகத்திலே...
என்னமோ நடக்குது மர்மமாய்
இருக்குது...
ஒண்ணுமே புரியலே
உலகத்திலே...'

என்று பாடிய சந்திரபாபு, உலக வாழ்க்கையின் பொருளாதார மர்ம முடிச்சுகள் பிடிபடாமல், தான் சம்பாதித்த பொருள் அனைத்தையும் இழந்து, வறுமையின் எல்லைக் கோட்டிற்குக் கீழே 1974இல் சாந்தோம் கல்லறையில் ஓய்வெடுத்து விட்டார்.

# 30 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

Wellesleyல் கல்வி கற்கும் பொழுது பலமுறை சுற்றுலா போய் வந்திருக்கிறேன். எமது சுற்றுலாப்பயணம் சில வேளை மொத்த பல்கலைக்கழக மாணவிகளைக் கொண்டதாகவும் அமையும். அதேவேளை சில சுற்றுலாக்கள் வகுப்பு மாணவிகளைக் கொண்டதாகவும் அமையும். இவ்வாறு பல்கலைக்கழக சுற்றுலாக்கள் போன்று எமது Wellesley யில் எமது தோழிகளுடன் சேர்ந்து ஏனைய கல்விப் பீடங்களை சேர்ந்த மாணவிகளுடன் நடைபெறும் நடன நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டு, எனது திறமையை அதிலும் வளர்க்கத் தவறவில்லை. ஒருநாள் விஷேட விழவொன்று எமது Wellesley பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அந்த விழாவில்



எமது Wellesley பல்கலைக் கழகத்தின் பல்வேறு பீடங்களையும் சேர்ந்த மாணவிகள் தத்தமது திறமையை வெளிக்காட்டினர். நாடகம், நடனம், பேச்சு, விவாத அரங்கு, குழு நடனம், தனிநபர் நடனம், ஓரங்க நாடகம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அங்கு அரங்கேற்றப் பட்டன. அதில் நானும் எனது சில தோழிகளுடன் குழு நடனம் ஒன்றில் கலந்து கொண்டேன். அந்த நடன நிகழ்ச்சியை எல்லோரும், புகழ்ந்துரைத்தனர்.

குறிப்பாக சிறுவயதுமுதலே நடனமாடுவதில் பெரியளவான அனுபவங்கள் இல்லாவிட்டாலும், பிற்காலத்தில் நடனத்துறையில் எனது பள்ளிக்கூட வாழ்விலும் மற்றும், பல்கலைக்கழக வாழ்விலும், நடனமாடுவதில் என்னை நான் தொடர்ந்தும் பயிற்சி எடுத்து வளர்த்துக்கொண்டதினால் சிறப்பாக செய்து காட்ட முடிந்தது.அந்த விழாவின்பொழுது எமது நடனத்தை கண்டுகழிக்க எனது பெற்றோர்களும் மற்றும் குடும்பஸ்தர்களும் அங்குவந்திருந்தனர். அத்துடன், எனது பள்ளிக்கூட காலத்தில் கற்பித்த என்னுடைய சில ஆசான்களும் அதில் கலந்து கொண்டனர். அவர்களும்கூட எம்மை வாழ்த்தினர். அந்த நடனவிழா எமது Wellesley பல்கலைக்கழக அலும்னி சபா மண்டபத்தில் நடைபெற்றது.

அடுத்தபடியாக, எமது Wellesley பல்கலைக்கழகத்தில் எனது கல்வி பீடத்தில் நான் இரண்டாம் வருடத்தில் இருக்கும்பொழுது எமது "பல்கலைக்கழக மாணவர் பேரவையின் தலைவர்" தெரிவுப் போட்டி நடைபெற்றது. அந்தத் தெரிவுப் போட்டியில் நான் போட்டியிட்டு, அமோக ஆதரவுடன் வெற்றியிட்டினேன். உண்மையில் Wellesley பல்கலைக்கழகத்தில், எனக்கு கிடைத்த மகத்தான பொறுப்பு இந்த மாணவப்பேரவை தலைமைத்துவப் பொறுப்பு என்பது எனது கருத்து. இவ்வாறான, தலைமைத்துவப் பொறுப்புகள், Wellesley பல்கலைக்கழகத்தில் பொதுவாக பல படித்தரங்களை அளவிட்டு, பல்வேறு கணிப்பீடுகளை வைத்தே தெரிவு செய்யப்படுவது வழக்கம். இந்தப் பொறுப்பு எனக்கு கிடைத்தது Wellesley பல்கலைக்கழகத்தினது ஒரு வரப்பிரசாதமான மகத்தான பொறுப்பு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமேயில்லை. அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம், எனது கடமைகளில் நான் மிகக் கண்ணுங்கருத்துமாக செயற்பட ஆரம்பித்தேன். ஏனெனில் மாணவபேரவையின் தலைமைத்துவப் பொறுப்பல்லவா அது. Wellesley யின் எல்லா மாணவிகளினதும் அனைத்து விவகாரங்களையம் கவனிப்பதுடன், அவர்களுடைய நலன்களையும், மற்றும் ஏனைய சகலவிதமான பொறுப்புக்களையும் அதாவது கல்வி செயற்பாடு உட்பட, மாணவிகளினது அனைத்து நலன்களும், அந்த மாணவ பேரவையினால் கண்கானிக்க வேண்டுமல்லவா அதனால்தான் இப்பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவ பதவியை மிக நிதானமாக செய்யவேண்டியது என்மீதுள்ள ஒரு "கண்ணியமான கடமை" என நான் உணர்கிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நம்பிக்கை, தியாகத்துடன் கூடிய பொறுமை, இவை எல்லாம் எனது Wellesley பல்கலைக் கழக கல்வி வாழ்வினூடாக எனக்கு கிடைத்த அருமையான ஆளுமை வளர்ச்சியின் பொக்கிஷங்களாக நான் கருதுகிறேன். உண்மையில் அப்போதைய நிலைமைகள் தான், இப்போதைய எனது இந்த வகையிலான ஒரு முன்னேற்றத்துக்கும், வளர்ச்சிக்கும் வித்திட்டது என்பதை நான் இந்த இடத்தில் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இவ்வாறு பல்கலைக்கழக கல்வி வாழ்நாள் என்பது என்னைப்போன்ற பல பெண்களுக்கு வித்தியாசமான அனுபவங்களை முன்னேற்றங்களையும், கொடுத்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

மேலும் நான் எனது பல்கலைக்கழக கல்வியினை தொடர்ந்து கொண்டிருந்த பொழுது அந்த காலப்பகுதியில் நடைபெற்ற வியட்னாம் யுத்தம் பற்றியும் அதனுடைய தாக்கங்கள் அமெரிக்காவிலும், மற்றம் சர்வதேசமட்டத்திலும், ஏற்பட்ட சமய, சமூக, பொருளாதார மற்றும் கலாசார மாற்றங்கள் எந்தளவுக்கு முக்கியமான தாக்கங்களை உண்டுபண்ணியது என்பதுபற்றி இந்த தருணத்தில் நான் நினைவுபடுத்தாமல் இருக்க முடியாது. அமெரிக்காவில் மட்டுமல்ல, வெளியுலகிலும், அதனுடைய தாக்கங்கள் மிகக்காத்திரமான பங்கை வகித்தது என்றால் அதையாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அத்துடன் அதே காலப்பகுதியில்தான் அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்காக உரிமைக்குரல் எழும்பி, உரிமைகளுக்காகப் போராடிய, மாட்டின் லூதர் கிங் அவர்களும் அதே காலப்பகுதியில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த "ஜோன் கென்னடியும் கூட சில காலங்களுக்கு



பிறகு துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்கள்.....

*(இன்னும் வரும்...)*

---

இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.


ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.

---

## பிரித்தானியாவில் கைத்தொழிலாளர்களின் விரக்தி நிலையும் அவர்களின் ஹர்த்தாலும்




பிரித்தானியாவில் கைத்தொழிற்சாலைகளில் ஏற்பட்ட மிகப் பெரிய பிரச்சினைகளின் காரணமாக, ஜூலை மாதம் 1910ம் ஆண்டு தொழிலாளர்கள் அனைவருமே மாபெரும் வேலை நிறுத்தத்தையும், பகிஷ்கரிப்பையும் மேற்கொண்டனர். புகையிரத வண்டி கட்டுமானத் தொழிலாளர்கள், மற்றும் கப்பல் கட்டுமானத் தொழிலாளர்கள், அனைவருமே இந்த பெரியதொரு பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். 1910ம் ஆண்டு ஜூலை மாதம் முதல், நவம்பர் மாதம் வரை இந்த பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை தொடர்ந்தது. அதாவது தொடர்ந்து ஐந்து மாதங்கள் வரை இது நீடித்ததனால் கைத்தொழில் முயற்சிகள் அனைத்துமே முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்தன. அதில் பங்கு கொண்ட சிலரை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி கைது செய்ய முயற்சிப்பதையே இங்குள்ள படத்தில் காண்கிறீர்கள்.

---

## பெண்களுக்கு வாக்குரிமை கேட்டு போராடியவர்களுக்கான தண்டனை (1910)

பெண்களுக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை வேண்டும் என்று தொடர்ந்தும் பிரித்தானியாவில் பெண்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இதை பிரித்தானிய அரசாங்கம் முழுமையாக தடைசெய்ததுடன் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கமுடியாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தது. அவ்வாறு அரசாங்கத்தின் கட்டளையைமீறி ஆர்ப்பார்ட்டத்தில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைதுசெய்யுமாறு படையினருக்கு கட்டளை பிறப்பித்தது பிரித்தானிய அரசு: அவ்வாறு அந்த ஆர்ப்பாட்டத்தில் கைதுசெய்யப்பட்ட பெண்கள் பின்பு சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவ்வாறு சிறையில் அடைக்கப்பட்ட பெண்கள் அங்கு தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். அவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுக்கு, சிறைக்கூட வைத்தியர்களும், பெண்காவலாளிகளும் உணவு ஆகாரங்களை அதாவது மென்பானங்களை அவர்களின் வாயினூடாக செலுத்துவதை இங்கு ஒரு காட்டூன் படத்தில் காண்கிறீர்கள். இந்தக் காட்டூன் படத்தை அக்காலத்தில் 1910ம் ஆண்டு வெளிவந்த ஒரு பிரபல பத்திரிகை வெளியிட்டு இது சம்பந்தமான ஆய்வுக்கட்டுரையொன்றையும் பிரசுரித்திருந்தது.



# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இலங்கையின் முதலாவது கண்ணிவெடித் தாக்குதல்

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி இரவு யாழ்ப்பாணம் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மிகவும் அண்மையிலிருக்கும் திருநெல்வேலி சந்திக்குச் சமீபமாகத் தபால்பெட்டியடி என்ற இடத்தில், புலி இயக்கக் கெரில்லாக்கள் பலர் பதுங்கியிருந்தனர். யாழ். - பலாலி வீதியில் இந்த இடம் உள்ளது. புலி இயக்கத் தலைவர் பிரபாகரன் தலைமையிலான கெரில்லாக்கள் குழுவொன்று தாக்குதலுக்குத் தயார் நிலையில் இருந்தது. அவ்விடத்தில் மின்சாரக் கம்பங்கள் நடுவதற்காகக் குழிகள் வெட்டப்பட்டிருந்தன. இக் குழிகள் இவர்களின் தாக்குதலுக்கு வாய்ப்பாக அமைந்திருந்தன. கிட்டு, செல்லக்கிளி, அப்பையா அண்ணை, விக்ரர் பொன்னம்பலம், பசீர் காக்கா, கணேஷ், ரஞ்சன், சந்தோசம் புலேந்திரன் ஆகியோர் இராணுவ வாகனங்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தனர். குழிக்குள் கண்ணிவெடி புதைக்கப்பட்டிருந்தது.

மாதகல் இராணுவ முகாமிலிருந்து ரோந்து நடவடிக்கைகளுக்காக இராணுவ அணியொன்று




வாகனங்களில் புறப்பட்டது. ஒரு ஜீப்பும், ட்ரக் வண்டியொன்றுமே புறப்பட்டன. இந்த ரோந்து அணிக்குத் தலைமை தாங்கியவர் இரண்டாவது லெப்டினன்ட் குணவர்த்தன என்பவர். 22 வயதான இவர், சென்னை பாதுகாப்புக் கல்லூரியில் விசேட பயிற்சி பெற்றவர். முன்னால் வந்துகொண்டிருந்த ஜீப்பில் லெப்டினன்ட் குணவர்த்தனவும் ஐந்து சிப்பாய்களும் இருந்தனர். ட்ரக்கில் ஒன்பது சிப்பாய்கள் இருந்தனர். இலங்கை மென்ரகப் படையின் முதலாவது இராணுவ அணியைச் சேர்ந்தவர்கள் இவர்கள். மாதகலிலிருந்து குருநகர் இராணுவ முகாமுக்குச் சென்றுவிட்டு இவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். திரும்பும் வழியில் யாழ்ப்பாணம் சந்தை, நாகவிகாரை, நல்லூர், கோப்பாய் , உரும்பிராய் ஆகிய இடங்களுக்கும் சென்றனர். உரும்பிராயிலிருந்து குருநகர் இராணுவ முகாமுடன் தொடர்புகொண்ட லெப்டினன்ட் குணவர்த்தன, சகல இடங்களிலும் நிலைமை அமைதியாக இருப்பதாகக் குறிப்பிட்டார். பின்னர் கோண்டாவில், கொக்குவில் ஆகிய பகுதிகளுக்குச்


**23ஆம் திகதி இரவு சூழ்ந்திருந்த காரிருள் விலகி 24ஆம் திகதி விடியலில் யாழ்ப்பாணம் விழித்துக் கொண்டது. அப்போது யாழ். கோட்டை, குருநகர், பலாலி, மாதகல் ஆகிய இடங்களில் இராணுவ முகாம்கள் இருந்தன. யாழ்ப்பாணம் தான் விடியலைப் பார்த்தது. ஆனால் சிப்பாய்களின் மனதிலோ, இன வெறிக் காரிருள் கவ்வியிருந்தது. இந்த முகாம்களிலிருந்து ட்ரக்குகளில் புறப்பட்ட 'வீரர்'களின் கண்களில் தென்பட்ட தமிழர்களெல்லாம் புலிகளாகவே தெரிந்தனர்.**


சென்று, கல்வியங்காட்டுக்கு வந்தனர். அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமானார்கள். இந்த வாகனங்கள் புலி இயக்க கெரில்லாக்கள் பதுங்கியிருந்த இடத்தை நெருங்கியதுதான் தாமதம், இலங்கையின் முதலாவது கண்ணிவெடி பயங்கர சப்தத்துடன் வெடித்தது. ஜீப், கண்ணி வெடிக்குள் சிக்கிச் சுக்குநூறாகியது. லெப்டினன்ட் குணவர்த்தனவும் ஏனைய ஐந்து சிப்பாய்களும் இனங்காண முடியாதபடி உடல் சிதறி மாண்டார்கள். பதுங்கியிருந்த புலிகள், ட்ரக்கிலிருந்த சிப்பாய்கள் மீது சரமாரியாகச் சுட்டனர். ட்ரக்கில் வந்த ஒன்பது பேரில் ஏழு பேர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

(அரசியல் தொடர்)

ரோந்து அணியில் பயணம் செய்த 15 சிப்பாய்களில் 13 பேர் உயிரிழந்தனர். இலங்கையின் இனப் போராட்டத்தை முடுக்கிவிட்ட முதல் கண்ணிவெடியும் இதுதான். கோப்ரல்கள் சுமதிபாலா, பெரேரா ஆகிய இருவரும் தப்பித்துக்கொண்டனர். இந்தக் கண்ணிவெடித் தாக்குதல்தான் ஜூலை இன சங்காரத்துக்கு 'பிள்ளையார் சுழி' போட்டது. ஏற்கெனவே இன சங்காரத்துக்கான திட்டங்களைத் தீட்டிக்கொண்டு காத்துக் கிடந்த தென்னிலங்கை இன வெறியர்களுக்குத் தேவையான சந்தர்ப்பம் கிட்டிவிட்டது.

உயிர் தப்பிய இராணுவச் சிப்பாய்கள் இருவரும் பதுங்கிப் பதுங்கி ஒரு சில கிலோ மீற்றர்கள் அப்பாலுள்ள கோண்டாவில் இ.போ.ச. சாலையைச் சென்றடைந்தனர். புலிகளின் தாக்குதல் பற்றித் தொலைபேசி மூலம் மாதகல் இராணுவ முகாமுக்கு தகவல் அனுப்பிவைக்கப்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள சகல இராணுவ முகாம்களுக்கும், கொழும்பு இராணுவத் தலைமையகத்துக்கும் ஜெயவர்த்தனவுக்கும் தகவல்கள் பறந்தன. வட பகுதிக் கமாண்டரான பிரிகேடியர் பல்தசார், சம்பவ இடத்துக்குத் தேடுதல் அணியொன்றினை அனுப்பி வைத்தார்.

13 வீரர்கள் இறந்த தகவல் அவருக்குக் கிட்டியது.

23ஆம் திகதி இரவு சூழ்ந்திருந்த காரிருள் விலகி 24ஆம் திகதி விடியலில் யாழ்ப்பாணம் விழித்துக் கொண்டது. அப்போது யாழ். கோட்டை, குருநகர், பலாலி, மாதகல் ஆகிய இடங்களில் இராணுவ முகாம்கள் இருந்தன. யாழ்ப்பாணம் தான் விடியலைப் பார்த்தது, ஆனால் சிப்பாய்களின் மனதிலோ, இன வெறிக் காரிருள் கவ்வியிருந்தது. இந்த முகாம்களிலிருந்து ட்ரக்குகளில் புறப்பட்ட 'வீரர்'களின் கண்களில் தென்பட்ட தமிழர்களெல்லாம் புலிகளாகவே தெரிந்தனர். அப்பாவி மக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தமது வெறியைத் தீர்த்துக் கொண்டனர். ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என்ற எந்த வித்தியாசமுமின்றி அப்பாவி மக்கள் மீது சிப்பாய்களின் துப்பாக்கிகள், ரவைகளைக் கக்கின. 39 பேர் கொல்லப்பட்டதாகவும், நூற்றுக் கணக்கானோர் காயமுற்றார் களென்றும் யாழ்.பொலிஸ் மற்றும் ஆஸ்பத்திரி வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. யாழ்.குடா நாடே வீடுகளுக்குள் பதுங்கிக்கொண்டபோது, தென்னிலங்கையில் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த இனவெறிச் சதிகாரர்கள் விழித்துக்கொண்டனர்.

திருநெல்வேலியில் புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையில் இராணுவ மற்றும் படை அதிகாரிகளின் கூட்டம் கூட்டப்பட்டது. கொல்லப்பட்ட இராணுவ வீரர்களுக்கு அரச மரியாதைகளுடன் யாழ்ப்பாணத்திலேயே இறுதிக் கிரியைகளை நடத்துவதென முடிவெடுக்கப் பட்டது. தேசிய துக்க தினம் பிரகடனப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாணத்தில் இராணுவத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் மேஜர் ஜெனரல்


**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


வீரதுங்கா. ஜெயவர்த்தனவின் மருமகன் இவர். பயங்கரவாதத்தை ஆறு மாதத்துக்குள் ஒழித்துக்கட்ட வேண்டுமென்று காலக்கெடு விதிக்கப்பட்டு ஜெயவர்த்தனவால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டவர். கொல்லப்பட்ட சிப்பாய்களை யாழ்ப்பாணத்தில் புதைக்கும் முடிவுக்கு இவர் இணங்க மறுத்துவிட்டார். "நாய்களைப் போல் வீதியில் வைத்து எனது வீரர்கள் சுடப்பட்டுள்ளனர். நாய்களைப் போல் அவர்கள் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்படுவதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்றார் வீரதுங்க. பல சடலங்கள் இனங்காண முடியாதபடி சிதைந்திருந்ததால் அவற்றை அவரவர் சொந்த இடங்களுக்கு அனுப்ப முடியாமலிருந்தது. பின்னர் இறுதிக் கிரியைகளுக்கெனச் சடலங்களைக் கொழும்புக்கு அனுப்பிவைப்பதென முடிவெடுக்கப்பட்டது.

சடலங்கள் அனைத்தும் ஜூலை மாதம் 24ஆம் திகதி பலாலியிலிருந்து இரத்மலானை விமானத் தளத்துக்குப் பிற்பகல் நான்கு மணியளவில் வந்து சேருவதாக இருந்தது. இதற்கிடையில் பொரளை கனத்தை மயானத்தில் சடலங்கள் தகனம் செய்யப்படுமென்ற தகவல் பரவியதும் மக்கள் கூட்டம் அங்கு கூடத் தொடங்கியது. நேரம் செல்லச் செல்ல குழுமியிருந்த கூட்டம் அமைதியிழக்கத் தொடங்கியது. பூதவுடல்களைத் தாங்கிய விமானம் இரவு ஏழரை மணிக்கே பலாலி விமானத்தளத்தை விட்டுப் புறப்பட்டது. இரவு 9.30 மணிக்கு விமானம் இரத்மலானை விமானத் தளத்தை வந்தடைந்தது. இதேவேளை திட்டமிட்ட கோஷ்டிகள் கொழும்பில் வீணான வதந்திகளைப் பரப்பிவிட்டிருந்தன. கனத்தை மயானத்தில் குழுமிய கூட்டத்தின் மத்தியில் பெரும் பதற்றம் காணப்பட்டது. சடலங்கள் யாவும் பொலித்தீன்களால் சுற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. பிரேதப் பெட்டிகளுக்குள் வைத்து ஏன் கௌரவமாக பூதவுடல்கள் அனுப்பி வைக்கப்படவில்லையென்பதன் மர்மம், இராணுவ அதிகாரிகளுக்கும், ஜூலைக் குழப்பத்துக்குத் திட்டமிட்டவர்களுக்கும் மட்டுமே புரியும். வடக்கிலிருந்து இராணுவ சிப்பாய்களின் பூதவுடல்கள் தென்னிலங்கைக்குப் பொலித்தீன் பைகளில் அனுப்பப்பட்டமை அதுவே முதல் தடவையென்பதும் குறிப்பிடத் தக்கது.


(தொடர்ந்து வடியும்....)





கடந்த இரண்டு மாதமும் படுகொலை மாதங்களாகக் கழிந்தது. இவ்வாரம் அப்படி எதுவும் இல்லையென்பது கொஞ்சம் நிம்மதி. எதிர்காலமும் சுமுகமானதாக இருக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு, ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மதித்து நடப்போரை நாமும் மதிப்போம். வாழ்க மனித நேயம்!

**சின் :-** *தடாலடி அறிக்கைகளை அப்ப அப்ப வெளியிடுகிற எங்கட மகேஸ்வரனார் நாட்டை விட்டுப் போகப் போறன் எண்டு கூவிக்கொண்டு திரிஞ்சார். அடப் பாவமே! எங்கட ஒரு தமிழனுக்கு இப்பிடியுமா எண்டு கவலைப் பட்டனாங்கள். இப்ப ஆள் நாட்டுக்குள்ள, தெம்பாத் திரியிறார், அச்சுறுத்தினவைக்குச் சவாலாய். சபாஷ்! ஜெனீவாவுக்குப் போய் அங்கத்தய பார்லிமெண்டில பேசேக்க ஈராக்கில இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற வேணும் எண்டும், இலங்கையில கூட ஈராக் மாதிரிப் பிரச்சினை இருக்குதெண்டும் துணிவாப் பேசியிருக்கிறாரே.*

**மன் :-** அப்படிச் சொல்லு! அதுவும் தமிழிலயே பேசினதாக் கேள்விப்பட்டன். இனப் பற்று இருக்கோ இல்லையோ, மொழிப் பற்று இருக்கெண்டு காட்டிப் போட்டார். எங்கட நாட்டிலையும் பிரச்சினை இருக்கெண்டிருக் கிறாரே! ஒருவேளை யூ.எஸ். ஆமியை இலங்கைக்கும் வாங்கோ எண்டு சிக்னல் காட்டிறாரோ. எனக்கும் கொஞ்சம் குழப்பமாத்தான் இருக்கு, என்ன பொடி வச்சு இப்பிடிக் கதைச்சார் எண்டு. அது சரிதான் முள்ளை முள்ளாலதானே எடுக்க வேணும்.

**சின் :-** *அவர் என்ன நினைச்சுப் பேசினாரோ! நீங்கள் என்னடாவெண்டால் கண்ணும் மூக்கும் வச்சுப் பேசிறியள்....... டென்மார்க் உட்பட்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தம்பிமாரைத் தடைசெய்யப் போறதாகச் சர்வதேசச் செய்திகள் தெரிவிக்கின்றனவே.*

**மன் :-** ஏன் சுத்தி வளைக்கிறீர்! ஐ.நா.சபையில ஜனாதிபதி பேசினதுக்குப் பிறகு இந்த அறிக்கைகள் வெளியாகியிருக்கெண்டதுதான் உண்மை. யாரும் எதையும் சொல்லுங்கோ; நாங்கள் கணக்கில எடுக்க மாட்டம் எண்ட கணக்கா தம்பிமார் தொடர்ந்தும் செய்துவாற ஆட்கொலை, ஆட்கடத்தல், சிறுவர் ஆட்சேர்ப்பு போன்றவை தொடர்பான தரவுகள் சர்வதேசத்துக்குச் சரியாப் போய்ச் சேர்ந்திருக்கு. தவிரவும் அடுக்கடுக்கா ஈ.பி.டி.பி.க்காறரைச் சுட்டதும், அதை எதிர்த்து அந்தக் கட்சியால மேற்கொள்ளப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டங்களும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதாகச் சொல்லினம்.

**சின் :-** *அப்பிடியெண்டால் சமாதான காலத்தில சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுகிறதுக்கு மாறாக எதிர்ப்பைச் சம்பாதிக் கினம் எண்டிறியளாக்கும்...... படுகொலைகள் தொடர்பில ஜனாதிபதி செயலகம் காட்டமான அறிக்கையை விட்டுள்ளதே.*

**மன் :-** கொழும்பில நடக்கிற படுகொலையை அரசு பொறுப்பெடுக்க வேணுமெண்டால் நாட்டின்ர ஏனைய பகுதிகளில் நடக்கிற படுகொலைகளை இலங்கை கண்காணிப்புக் குழு பொறுப்பெடுக்க வேணும் எண்டு சொல்லுற அதே அறிக்கை படுகொலைகள் தொடராதபடி தாங்களும் சில நடவடிக்கைகளை எடுக்க வேணும் எண்டும் தெரிவிச்சிருக்கு. இது பொறுப்புள்ள அரசாங்கம் எடுக்கக்கூடிய முடிவுதானே!

**சின் :-** *இதுக்கு முந்தின அரசாங்கம் பதவியில இருக்கேக்க நடைபெற்ற படுகொலைகளையும் வன்முறைகளையும் கண்டிக்காதது, அந்த அரசு பொறுப்பில்லாம நடந்துகொண்டதாகத்தானே அர்த்தப்படுகுது...... ஜெயானந்தமூர்த்தி எம்.பி.க்கு கொலை அச்சுறுத்தல் விடப்பட்டதாமே.*

**மன் :-** அதுதான் எனக்கும் பெரிய டவுட்டாக் கிடக்கு. அவையள்தானே படுகொலைக் கலாசாரத்தைச் சரியெண்டு விவாதிக்கிறவையள். அவையளுக்கே அச்சுறுத்தலா? அவரா சொன்னார்! நம்ப முடியவில்லை......ய்ய்.....இந்த அம்புலிமாமா கதைக்குப் பின்னால ஏதோ கோல்மால் இருக்கெண்டுதான் நினைக்கிறன்.

**சின் :-** *ஓ....கோ...உள் வீட்டுக்குள்ள ஏதாச்சும் புகையுதோ.... நம்மக்கேன் ஊர் வம்பு.....எங்கையெண்டாலும் நாலு சுவருக்குள்ள நடக்கிற அநியாயத்தை செய்தியாப் போட்ட உடனயே விழுந்தடிச்சு மறுப்பறிக்கை விடுகினமே! அது ஏன்?*

**மன் :-** வெளியாகிற செய்திக்குப் பின்புலத்தில இருக்கிறவை சாதாரணமானவையள் எண்டால் பரவாயில்லை. தேசியமெல்லோ தேய்ச்சுக்கொண்டு நிக்குது. "என்ன அண்டையான் பிரச்சினையை செய்தியாக்கிவிட்டியள் போல" எண்டு சும்மா கேட்டாலே சனத்துக்கு இடிக் கலக்கம். ஏண்டாப்பா வில்லங்கம் எண்டுதான் விழுந்தடிக்கினம்.

**சின் :-** *எண்டாலும் இது ஓவர் சுதந்திரமண்ணை...மன்னாரில உங்கட தம்பிமாற்ர அலுவலகங்களை சனங்கள் அடிச்சு உடைச்சுப்போட்டுதுகளே...அது ஏன்?*

**மன் :-** இது முதல் சம்பவமில்லை. குருநகரிலயே ஆரம்பிச்சிட்டுது...மக்களைக் காப்பாத்துறமெண்டு தூக்கின துப்பாக்கியை மக்களுக்கு நேராவே நீட்டினால் எப்பிடி இருக்கும்...?அப்பாவி முஸ்லிம் வியாபாரி ஒருத்தரை சுட்டால் எந்த வகையில நியாயம்? எல்லாப் பிரச்சினைக்கும் துப்பாக்கி தீர்வில்லை எண்டதைத்தான் இந்தச் சம்பவமும் காட்டுது.

மக்கள் தாக்க வரேக்க அலுவலகங்களை விட்டுப்போட்டு ஓடுறதும் பிறகு, மக்கள் தனிய வரயில்லை; சில தீய சக்திகளும், படைத் தரப்பும் சேர்ந்துதான் வந்திச்சினம் எண்டு சொல்லிறதும் மற்றொரு புதுக் கலாசாரமாகி வருகுது. தம்பிமாருக்கு எதிராக மக்கள் நடவடிக்கை எண்டா அவமானம் எண்டு மூடிமறைக்க ஊடகங்கள் படுகிற பாடு, ச்சா........ சொல்லி வேலையில்லை. உண்மையை அறிய வேணுமெண்டால் இனி குருநகர் மக்களும் மன்னார் மக்களும் தனித்தனி பத்திரிகை நடத்தினாத்தான் உண்டு.

**சின் :-** *அப்ப...மக்களின்ர பிரச்சினையை வெளியால கொண்டுவர உண்மையாச் சேவையாற்றி தமிழ் ஊடகங்கள் ஒண்டுமில்லை எண்டிறியளோ?.....ஜெனீவாவுக்குப் பயணம் மேற்கொண்டிருக்கிற தமிழ்ச்செல்வன் கோஷ்டியும் அவையளின்ர ஆலோசகரும் பேச்சுக்களில ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறதே.*

**மன் :-** பேச்சு நடத்திறது இருக்கட்டும்... இங்கயிருந்து பேசப் போனவையின்ர பெயர்ப் பட்டியலைக் கவனிச்சீரோ...எல்லாம் பெரிய புத்திஜீவிகள். திரைமறைவில இருந்தவை எல்லாம் இப்ப வெளிச்சத்துக்கு வந்திருக்கினம். இனி அவர் சொல்லிறார்; இவர் சொல்லிறார் எண்டு பிரிக்கத் தேவையில்லை. எல்லாம் ஒரு குட்டை எண்டு புரிஞ்சுகொண்டாச் சரிதான். தவிரவும் அங்க பேசினம், இங்க பேசினம் எண்டது சும்மா பம்மாத்து. அவையளின்ர தலைவரும் பொட்டு அம்மானும் வகுக்கிறதுதான் நடக்கப் போகுது. நடந்துகொண்டிருக்குது. இதெல்லாம் சர்வதேச சமூகத்துக்கு சும்மா பிலிம் காட்டிற விளையாட்டு

**சின் :-** *ஐயையோ....மனிசன் என்னன்னவோ பேசி நம்மளைக் குழப்புது. மகா ஜனங்களே...நீங்களே ஒரு முடிவுக்கு வரும் வரை எந்த முடிவும் கிட்டப்போவதில்லை.... உங்கள் முடிவு எதெண்டாலும் நாங்கள் கட்டுப்படுகிறமுங்கோ.....*

**மன்னவரும் சின்னவரும்**

# உற்றுக் கவனியுங்கள்! உங்கள் சிந்தனையை!

**சோ**ர்வு, பயம் கோபம், அருவருப்பு இதெல்லாம் நமக்குள்ளே எங்கே உண்டாகிறது? நமது கையிலோ, காலிலோ, நுரையீரலிலோ, மூச்சுக் குழாயிலோ உண்டாவதில்லை! நமது எண்ணங்களில் மட்டுமே நிகழ்கிறது. அப்படியென்றால், 'எண்ணம்' என்பது என்ன?

யோசித்துப் பாருங்கள்! உதட்டையும் நாக்கையும் அசைக்காமல் நமக்குள்ளேயே வார்த்தைகளை ஓடவிடும்போதுதான் எண்ணங்கள் உருப்பெறுகின்றன.

வார்த்தைகளும், வாக்கியங்களும் இல்லாமல் நம்மால் சிந்திக்க முடியாது. (ஒலிகளாலும் வண்ணங்களாலும் சிந்திக்கும் இசைக் கலைஞர்கள், ஓவியர்கள், படைப்பாளிகள் போன்றவர்களை நினைத்து இந்த நேரத்தில் குழப்பிக்கொள்ள வேண்டாம்).

ஒருவர் வியாபாரம் செய்ய வேண்டும் என்று ஒரு கடை வைக்கிறார். நஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. உடனே அவர், 'நான் வியாபாரம் செய்வதற்கே லாயக்கு இல்லாதவன். அந்த நெளிவுசுளிவுகள் எனக்குப் போதாது!' என்று வருத்தப்பட ஆரம்பித்தால்....தன்னை நொந்து கொள்வதற்காக மனதுக்குள் இவர் அமைத்த வாக்கியமே...அவரைத் தாழ்வு மனப்பான்மை உடையவராக ஆக்கிவிடும்! அதே நபர், 'வியாபரத்தில் இலாபமும் நஷ்டமும் சகஜம்தான். இதில் வருத்தப்பட்டு ஆகப்போவது ஒன்றுமில்லை' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டால்.....அவர் தேர்ந்தெடுத்த அந்தச் சொற்களே அவரை உற்சாகம் இழக்காமல் பார்த்துக்கொள்ளும்!

இரண்டாம் உலகப் போரின் போது நடந்த உண்மை நிகழ்ச்சி இது.....

தாங்கள் சிறைப்பிடித்த யூதக் கைதிகளை வைத்து ஜெர்மனியர்கள் பல கொடுமையான பரிசோதனைகள் நடத்தியது நமக்குத் தெரியும்... அதில் ஒரு பரிசோதனை...

"உங்களைப் புதுமையான முறையில் சாகடிக்கப் போகிறோம்! உடம்பிலிருந்து எல்லா இரத்தத்தையும் வெளியேற்றினால் நீங்கள் எப்படி துடிதுடித்துச் சாவீர்கள் என்று பார்க்கப் போகிறோம்" என்று சொல்லிவிட்டு, சாம்பிளுக்கு இரண்டு கைதிகளைப் படுக்கையில் படுக்க வைத்து இரத்தத்தை வெளியேற்ற ஆரம்பித்தார்கள், ஜெர்மானிய படைவீரர்கள்! கைதிகளின் உடம்பிலிருந்து வெளியேறிய இரத்தம் பக்கத்திலிருந்த பாட்டிலில் 'டப்' 'டப்' என்ற ஒலியுடன் விழ ஆரம்பித்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த இரண்டு கைதிகளின் கண்களையும் படைவீரர்கள் கறுப்புத் துணியால் கட்டிவிட்டனர். அதில் ஒரு கைதியின் உடம்பிலிருந்து இரத்தம் வெளியேறுவதையும் நிறுத்தி விட்டார்கள். ஆனால், பாட்டிலில் 'டப்' 'டப்' என்று விழும் ஓசை கேட்கும்படி மாற்று ஏற்பாடு செய்தார்கள். இந்த 'டப்', 'டப்' சத்தத்திலேயே பீதி அடைந்த அந்தக் கைதி, "ஐயோ! உடம்பிலிருந்து இரத்தம் போய்க்கொண்டே இருக்கிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் இரத்தம் வற்றிச் சாகப் போகிறோம்" என்று



பயத்தில் நடுங்க ஆரம்பித்தான். பரிசோதனையின் முடிவில், உண்மையிலேயே இரத்தம் வெளியேற்றப்பட்ட கைதியும் இறந்துபோனான். தன் உடம்பிலிருந்து இரத்தம் வெளியேறுகிறது என்ற பிரமையில் இருந்த கைதியும் இறந்துபோனான். இரண்டாம் கைதியின் மரணத்துக்கு அவனது சிந்தனையும் சிந்தனை செய்ய அவன் தேர்ந்தெடுத்த வார்த்தைகளும்தான் காரணம்!

இதன் மூலம் நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய விஷயம் எளிமையானது.

"ஒரே போரடிக்குது....!"

"ரொம்ப டயர்டா இருக்கு!"

"உடம்பே சரியில்லை!"

"சனியன்! புள்ளையா இது......பிசாசு!"

இது மாதிரியான ரெடிமேட் நெகடிவ் வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள். பேசும்போது மட்டும் அல்ல. உங்களுக்குள் சிந்திக்கும் போதுகூட!

நான் பல்வேறு வார்த்தைகளில் சொன்னதையே Languaging என்ற ஒரே வார்த்தைக்குள் அடக்கிவிட முடியும். நல்லதோ கெட்டதோ....உங்கள் சிந்தனைகளை நீங்கள் எடுத்த எடுப்பிலேயே கட்டுப்படுத்தத் தேவையில்லை. நினைப்பை அதன் போக்கில் ஓட விடுங்கள். எப்படிப்பட்ட வார்த்தைகளை மனதில் ஓட்டிச் சிந்திக்கிறீர்கள் என்று கூர்ந்து கவனியுங்கள்.

அதாவது உங்கள் சிந்தனையை நீங்கள் உற்றுக் கவனியுங்கள். வேறொருவராக விலகிநின்று கவனியுங்கள். ஒருவகையில் தியானம் செய்வதற்கான அடிப்படைத் தகுதியும் இதுதான். இதைத் திரும்பத் திரும்பப் பயிற்சி செய்தால், ரெடிமேடான சோர்வு தரும். உங்களை நீங்களே தளர்த்திக் கொள்ளும் எரிச்சலூட்டும் 'நெகடிவ்' வார்த்தைகளிலிருந்து விடுபட்டால், சுதந்திரமான, உற்சாகச் சிந்தனை உங்களுக்குச் சரளமாக உருவாகும்.

நம்மை நாம் கட்டுப்படுத்திக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால், மற்றவர்கள் நம்மைப் பார்த்துக் கோபப்படும் வார்த்தைகளைப் பேசினால் என்ன செய்வது?

சொல்கிறேன்....

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.86க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வி. மலர்விழி ஜேசுதாசன், 91/1, மேபீல்ட் லேன், கொட்டாஞ்சேனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. சி. ராஜ்குமார், இல. 05, ஐம்பது வீட்டுத் திட்டம், சாந்தசோலை, வவுனியா.
2. க. அல். ஆஷாத், 282, ஓடாவியார் வீதி, ஏறாவூர்.
3. ஏ. தயாளன், நீர்ப்பாசன அலுவலகம், கண்டி வீதி, வவுனியா.
4. கே. அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
5. திருமதி. அமுதா ரமேஸ், 91/1, மேபீல்ட் லேன், கொட்டாஞ்சேனை.
6. க. கமால்தீன், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் -03.
7. சி. கருணாகரன், பொலிஸ் அலுவலகம், வவுனியா.
8. திருமதி ஜெயமணி ஜேசுதாசன், 91/1 மேபீல்ட் லேன், கொட்டாஞ்சேனை.
9. ம. ஸ்ரீசங்கர், கொழும்பு வீதி, ஜா-எல.
10. ச. நிவேதா, கண்டி வீதி, வவுனியா.

## குறுக்கெழுத்துப் போட்டி 70

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | ■ | ■ | 8 |
| 9 | ■ | 10 | ■ | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 |
| ■ | 22 | 23 | 24 | 25 |

### இடமிருந்து வலம்

1. இதனாலே இளைஞர்கள் சீரழிகிறார்கள். இதனைத் தடுக்கத் விசேட பொலிஸ் பிரிவும் உண்டு.
2. முன்னணிக் கிரிக்கெட் அணியின் தலைவர் (திரும்பியுள்ளது).
12. நாற்பது நாள் கொணடது (குழம்பியுள்ளது).
17. சுவாமி உலா வரும் வீதி.
22. காரமான பொருள் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. தமிழனின் உரிமைப் பிரச்சினையைத் தீர்க்க அஹிம்சையில் ஆரம்பித்து ஆயுதத்தில் ஓய்ந்துள்ளது.
2. பெட்டகம்.
5. புத்தர் பிறந்த இடம் (தலைகீழாவுள்ளது)
10. 'பல்டி' (குழம்பியுள்ளது).
13. விருட்சம்.
15. கூப்பிடு தொலை (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 88 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| க 1 | றை 2 | யா 3 | ன் 4 | ■ |
| ற் 5 | ■ | ல 6 | ஏ 7 | ம் 8 |
| சி 9 | ற 10 | ஒ 11 | ■ | மா 12 |
| லை 13 | ■ | ம் 14 | ல 15 | ஒ 16 |
| ம 17 | னை 18 | வி 19 | ■ | ள 20 |
| டு 21 | கெ 22 | ■ | ■ | ம் 23 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 12.10.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-70
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

64

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ...............

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-10-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை? களுபோவில வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 62

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**திருமதி.ம.கனகசேகரம்**
22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# இவ்வாரச் சிறு கதைகள்

# தவமிருந்த காதல்

ஜனவரி பதினோராந் திகதி பொங்கலுக்கு இன்னும் மூன்று தினங்கள் மாத்திரமே இருக்கிறது. அதிகாலை 3.30 மணி. கையில் பேக்கோடு நின்றுகொண்டு உரத்த குரலில் "அம்மா! அம்மா!" என்று அழைத்தான் விஜய்.

விஜய் கொழும்பிலே நகைத்தொழில் செய்பவன். ஆறு மாதங்களுக்குப் பின் இன்றுதான் சொந்த ஊருக்கு வருகிறான். மீண்டும் ஒருமுறை அழைக்க எத்தனித்தான். அப்போது லைட்டை போட்டவாறே அவனது அம்மா கதவைத் திறக்க பின்னாலே அப்பாவும் இரண்டு தம்பியும் நின்றார்கள். அவனைக் கண்டதும், "அண்ணா பேக்கைத் தாருங்கள்" என்றவாறே பேக்கை வாங்கிக்கொண்டு.

"என்ன இவ்வளவு பாரமாய் இருக்கிறது" என்று கூறி உள்ளே சென்றான் விஜய்யின் கடைசித் தம்பி தருண். விஜய்யின் அம்மா அவனைக் கட்டியணைத்து முத்தமிட்டு தனது பாசத்தை வெளிப்படுத்தினாள்.

"பயணம் எப்படி?" என்று விசாரித்தவாறே அவனது அப்பாவும் அருகில் வந்தார்., எல்லோரும்



வீட்டினுள்ளே சென்றார்கள். விஜய்யின் அன்னை உடனே தேனீர் ஊற்றினாள். தேனீரைக் குடித்துக்கொண்டே எல்லோரும் பேசியதில் பொழுது விடிந்துவிட்டது. விஜய் குளித்துவிட்டு வருவதற்கிடையில் அவனது அம்மா காலை உணவாக இடியப்பத்தைத் தயார் பண்ணிவிட்டாள். எல்லோரும் ஒன்றாய் இருந்தே சாப்பிட்டார்கள். சாப்பிட்டு முடிந்தவுடன் விஜய் அவனது கடைசித் தம்பி தருணை அழைத்து தனது பேக்கை எடுத்து வருமாறு கூற, மறுகணமே பேக்கோடு நின்றான் தருண். விஜய் பேக்கைப் பிரித்து உள்ளே இருந்த புதிய உடுப்புகளையெல்லாம் வெளியே எடுத்து வைத்தான்.

தருணிடம் "இந்தா நீ பொங்கலுக்குக் கேட்ட டெனிம் ரௌசரும் ரிசேட்டும்" என்று கொடுத்தான்.

கையில் வாங்கி சந்தோஷத்தில் துள்ளிக் குதித்து உடனே அதைப் போட்டுப் பார்த்து "சரியாக இருக்கிறது அண்ணா" என்றான்.

"என்னுடையது" என்று அவனது அடுத்த தம்பி ஜெகனும் கேட்க அவனது உடுப்புகளையும் கொடுத்துவிட்டு, அம்மாவிடம் "என் தெரிவில் உங்களுக்கு சாறி" என்று கொடுத்தான்.

"அப்பா உங்களுக்கு வேட்டியும் சேட்டும்" என்று அவரவர் உடுப்புகளைக் கொடுத்தான் விஜய்.

அப்போது அங்கே இரண்டு சல்வார் துணிகள் மிச்சமிருக்க அம்மா கேட்டாள், "இது யாருக்கு தர்ஷினிக்கா?"

"ஆமாம். ஒன்று தர்ஷினிக்கு" என்றான் விஜய்.

தர்ஷினி விஜய்க்கு கூடப்பிறக்காத தங்கை. விஜய்க்குப் பெண் சகோதரிகள் இல்லை. அதனால் அவளை தன் உடன்பிறப்பாகவே நினைத்து அவள் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்தான். இதைவிட அவளும் விஜய் மீது அளவு கடந்த பாசம் வைத்திருந்தாள்.

அந்த வேளை அங்கே வந்த தர்ஷினி, "அட பெற்றோல் அண்ணா" என்று கட்டியணைத்தாள்.

ஆமாம்; விஜய்க்குக் கோபம் வருவது அதிகம். அதனால் அவள் வைத்த செல்லப் பெயர்தான் பெற்றோல். "தர்ஷினி இந்தா" என்றவாறே துணியைக் கொடுத்து, "இதை இன்றே தைக்கக் கொடு, பொங்கலுக்கு இதைப் போட்டுக்கொண்டுதான் கோயிலுக்கு வர வேண்டும்" என்றான் விஜய்.

"சரி பெற்றோல்" என்றவாறே தர்ஷினி துணியோடு புறப்பட்டாள் தர்ஷினி.

தையற்காரியின் வீட்டுக்கு.

சற்று நேரத்தில் விஜய்! இந்தத் துணி யாருக்கு?" என்றாள் அம்மா. அவனோ "இது அகல்யாவுக்கு. நீங்களே சென்று கொடுத்துவிடுங்கள்" என்றான்.

"யார் அந்த அகல்யா?"

அவள்தான் விஜய்யின் மாமன் மகள். ஆமாம்! விஜய் அவளை எட்டு வருடங்களாக ஒரு தலையாக நேசிக்கிறான். இன்னும் அவன் காதலை அவளிடம் வெளிப்படுத்தவே இல்லை. காரணம், அவள் பிடிக்கவில்லை என்று மறுத்துவிட்டால் தன் வாழ்க்கை ஒரு சுடுகாடாய் சூனியமாகிவிடுமோ என்று பயந்தான். ஆனாலும் விஜய்யின் நண்பன் சிறி அவனை விடுவதாய் இல்லை. இது விடயமாக அடிக்கடி வாதிடுவான்.

அன்றும் அப்படித்தான் பேசினான் சிறி.

"டேய் விஜய்! அகல்யாவுடன் உன் காதல் விடயமாக பேசு. ஏனென்றால் அவளும் உன்னை விரும்புகிறாள். அதை அவளே வந்து கூற முடியாது. நீ ஆம்பிளயே அவளிடம் இதைப் பேச தயங்குகிறாய். அவன் பெண்மை எனும் மென்மையால் ஆனவள். அதனால் நீ அவளோடு பேசினால்தான் எல்லாவற்றுக்கும் முடிவு கிடைக்கும். இதற்குப் பிறகும் நீ அகல்யாவோடு பேசவில்லையென்றால் நான் நிச்சயமாக உனக்காக அவளிடம் பேசுவேன்" என்றான்.

உடனே விஜய்யும் "இம்முறை எப்படியும் அவளிடம் என் காதலை சொல்லுவேன்" என்றான். இதற்கிடையில் மூன்று நாட்களும் மறைய பொங்கல் பிறந்தது. எல்லோரும் புது உடுப்புகளை அணிந்தவாறே விஜய்யின் குடும்பமும் அவனது மாமா குடும்பமும் கூடவே அகல்யாவும் பெரியம்மா குடும்பம் தர்ஷினி என்று எல்லோரும் ஒன்றாய் சமைத்தார்கள். ஒன்றாய் சேர்ந்தே சாப்பிட்டார்கள். அன்று அந்திசாய்ந்த வேளையில் தினமுரசு பத்திரிகையோடு அகல்யா வேகமாக,

"விஜய் அத்தான் எங்கே?" என்றவாறே தேடி வந்தாள். அவனும் "என்ன" என்று கேட்டுக்கொண்டு அவள் முன்னே வந்தான்.

உடனே அகல்யா பேப்பரை விரித்து,

"அத்தான் நீங்க எழுதிய கனவுகளோடு மட்டும் என்ற கவிதை தேன் கிண்ணம் பகுதியில் வெளியாகி இருக்கிறது" என்று கூறிக்கொண்டே கேட்டாள்,

"அது என்ன கவிதை வரிகளில் ஏக்கம் அதிகமாக காணப்படுகிறது" என்றவள், "அது சரி அத்தான், கவிதையில் ஒரு வரி வருகிறதே, அவள் நகம் இல்லா விரல்கள் என் இதயத்தை வருடுகிறது என்று. அந்த நகம் இல்லா விரல்கள் யாருடையது என்று அறியலாமா?" சற்று கேலித்தனத்தோடே கேட்டாள்.

ஏதோ ஓர் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்த விஜய் அவள் கேள்வியைத் தனக்குச் சாதகமாக்கிப் பேசத் தொடங்கினான்.

"அகல்யா அந்த விரல்கள் உன்னுடையதுதான்" என்றவன் தொடர்ந்து பேசினான்.

"அகல்யா உன்னை நான் எட்டு வருடங்களாக காதலிக்கிறேன். என் காதலை உன்னிடம் சொல்ல பலமுறை முயற்சி செய்திருக்கிறேன். ஆனால் அத்தனையும் தோல்விதான். அதற்குக் காரணம் பயமும் தயக்கமும் எனலாம். எங்கே நீ என் காதலை ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுவாயோ என்ற பயம். இப்போ நான் உன் கூடப் பேசுவதற்கு என் நண்பனின் தூண்டுதலும் ஒரு காரணம். அகல்யா! உனக்கும் விருப்பம் என்றால் நான் இங்கு நிற்கப்போகும் ஐந்து நாட்களுக்குள் உன் சம்மதம் எனும் வார்த்தை மட்டும் என் காதில் விழட்டும். என் எட்டு வருட மௌனத் தவத்திற்கு உன் வார்த்தைகளால் வரம் மட்டும் கொடு. சாபம் வேண்டாம். உனக்குச் சம்மதமில்லை என்றால் தயவுசெய்து அந்த வார்த்தைகள் என் செவிகளுக்கு எட்ட வேண்டாம். அதைக் கேட்டு உயிர்வாழும் சக்தி என் இதயத்துக்கு இன்னும் வரவில்லை" என்றவன், "அகல்யா உன்னை எந்த அளவுக்கு நேசிக்கிறேன் என்று கேட்டால் அதைக் கூறுவதற்குத் தெரியவில்லை. ஆனால் எந்த நிலையிலும் என் காதல் ஊனமாகாமல் உனக்காகக் காத்திருக்கும் என்பது மட்டும் உண்மை" என்றான்.

விஜய் பேசியது அனைத்தையும் தலையைக் குனிந்தவாறே மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தவள்,

"வருகிறேன் அத்தான்" என்று கூறிப் புறப்பட்டாள்.

அன்று முதல் நாட்கள் நகரக் கூடாது என்று விஜய்யின் மனம் ஆசைப்பட்டாலும் வழமைக்கு மாறாக நாட்கள் வேகமாக ஓடின. நடந்தவை அனைத்தையும் நண்பன் சிறியிடம் ஒன்றும் விடாமல் கூறி முடித்தான் விஜய்.

சிறி விஜய்யைப் பார்த்துக் கேட்டான், "அதற்குப் பிறகு அகல்யா உன்னோடு பேசவில்லையா"

"இல்லையடா, அவள் மௌனமாக இருந்தால் நான் நிம்மதியாக சென்றுவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் இன்று அவள் மௌனந்தான் என் உயிரை கொஞ்சம் கொஞ்சமாக உருக்குகிறது" என்றான் தளர்ந்த குரலில் விஜய்.

"நீயாவது அவளிடம் பேசியிருக்கலாமே" என்றான் சிறி.

"பேசியிருக்கலாம். ஆனால் எப்படி அவள் முகம் பார்ப்பது" என்றான் விஜய்.

"அதையெல்லாம் விடு. வா இருவரும் போவோம். பேசுவோம்" என்றவாறே அகல்யாவின் வீட்டிற்குப் புறப்பட்டான். சிறி கூடவே விஜய்யும் சென்றான்.

"வீட்டிலே அகல்யா தனியே இருந்தாள். அருகில் சென்று அமர்ந்து,


"மன்னிச்சிடுங்க அகல்யா" என்றான் விஜய்.

"எதற்காக" என்றால் அகல்யா?

"இல்ல உங்களுக்கு பிடிக்காத விடயத்தைப் பேசி உங்க மனதை காயப்படுத்திவிட்டேன். நானும் நிம்மதியாய் இல்லை. நம் உறவும் முன்னையைப் போல் சந்தோஷமாக இல்லை. அதற்குக் காரணம் நான்தானே" என்றவனிடம் ஒரு மடிப்பை நீட்டினாள் அகல்யா. மடிப்பை விரித்தான் விஜய். கண்களை விரித்து வாசித்தான். "நானும் உங்களை உயிராய் சுவாசிக்கிறேன் அத்தான்" என்ற அந்த வரிகளால் அணைகளை உடைத்த வெள்ளமாக இமைகளைத் தகர்த்து கண்ணீர் வழிந்தது. உதடுகள் துடிதுடித்து புதிதாய்ப் புன்னகைத்தது.

**-வ.சந்திரபிரசாத், மாமாங்கம்.**

# எதிர்பாராதது



அந்த வாலிபனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது; அவன் ஒரு நடைபாதை வியாபாரி. தலைநகரரின் பிரதான பாதை ஒன்றின் ஓரமாய் அமைந்திருந்த கடைத்தொகுதி ஒன்றின் பக்கமாய் அவன் வியாபாரம் செய்து வந்தான். அது கடை உரிமையாளருக்கு அடியோடு பிடிக்கவில்லை. அவர் அவனை அங்கிருந்து விரட்ட நினைத்தார். ஆனால் அவனால் யாருக்கும் சிரமம் இருக்கவில்லை. எனினும் அவர் அவனை விடுவதாக இல்லை. பலமுறை அவனிடம் சொல்லிப் பார்த்தார். அவன் அதை செவிமடுப்பதாக இல்லை. அதனால் பொறுமை இழந்த முதலாளியோ அருகிலிருந்த காவல் நிலையத்தில் புகார் செய்யவும் அவன் காவல்துறையினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டான்.

அப்போது அவன் சொன்னான் "ஐயா! என்னால் எவருக்கும் சிரமம் கிடையாது; நான் ஒதுக்குப்புறமாகத் தான் எனது வியாபாரப் பொருட்களைப் பரப்பியுள் ளேன். வயிற்றுப் பிழைப்புக்காக காலியிலிருந்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். என்னை நம்பித்தான் எனது குடும்பமே உள்ளது. வயதான அம்மாவுக்கும் பாடசாலை செல்லும் இரண்டு தங்கைமாருக்கும் நான்தான் கஞ்சி ஊற்ற வேண்டும். என் பிழைப்பில் கைவைத்து விடாதீர்கள்.....!"

"சரி...நீ வேறு எங்காவது இடம் பார்த்து உனது வியாபாரத்தைச் செய்!" என்று நிலையப் பொறுப்பதிகாரி விமல் கூறவும் பதிலுக்கு அவன்,

"வேறு எங்கே நான் போவேன்! இதுவென்றால் பழகிய இடம். நாலு பணம் தேடக்கூடியதாயுள்ளது; தயவு செய்து என்னை விட்டுவிடுங்கள் ஐயா!" என்று கெஞ்சினான்.

அவனைப் பார்த்தபோது அதிகாரிக்கு இரக்கம் ஏற்பட்டது. அவர் யோசித்தார். ஆனால் கடை உரிமை யாளரோ விடுவதாக இல்லை. தொலைபேசி மூலமாக அதிகாரியோடு தொடர்புகொண்டு அவனை எப்படியும் இல்லாது ஒழிக்க முயன்றார். இதற்கிடையில் நிலையப் பொறுப்பதிகாரியோ ஒரு விடயமாக வெளியே செல்ல நேர்ந்தது. அவர் அவனைப் போகச் சொல்லியிருக் கலாம்; ஆனால் சொல்லவில்லை. அவர் திரும்பி வரும் வரை அவன் அங்கேயே காத்திருக்க வேண்டியதாயிற்று. காலையில் பத்து மணிக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவன் மணி பன்னிரண்டாகியும் திரும்ப வில்லை. பசித்தது அவனுக்கு. காலையில் கைவியளமாக ஒரு விற்பனையும் நடைபெறவில்லை. அதற்குள் அவனை இங்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டனர். 'சே! இது என்ன பொழைப்பு!' என்று அவன் அலுத்துக்கொண்டான்.

மணி மதியம் ஒன்றானது! 'டும்....' திடீரென ஒரு பயங்கரச் சத்தம்! அது வந்த திசை கேட்டு மக்கள் திரும்பினர். புகை மண்டலம் உருவாகி மக்களைக் கிலிகொள்ளச் செய்தது.

"குண்டு வெடித்துள்ளதாம்!"

"மக்கள் தமக்குள் பேசிக்கொண்டனர்."

"எங்கே....?"

"காவல் நிலையம் ஒன்றில்"

"என்னது காவல் நிலையத்திலா?"

சமாதான சூழலிலும் இப்படிக் குண்டுகள் வெடிப்பதனை மக்களால் நம்ப முடியாதிருந்தது. அதுவும் காவல் நிலையமொன்றில் என்றால்...? மக்களால் பீதியடையாமல் இருக்க முடியுமா என்ன? ஏதோ அனர்த்தம் நேரப் போகிறது என்று மக்கள் உள்ளூர அச்சம் கொண்டனர். காட்டுத் தீ போல் செய்தி பரவியது. பலர் கொல்லப்பட்டதாகவும் தகவல் கிடைத்தது. நிலையப் பொறுப்பதிகாரி விமலுக்கு வயலஸ் மூலமாகத் தகவல் சென்றதும் அவர் உடனே காவல் நிலையம் நோக்கி விரைந்தார். உள்ளே சென்றவருக்கு இடிபாடுகளைக் காண மனம் பதறியது. காவல்துறையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ள மையும் ஒரு மனித வெடிகுண்டுதாரி இத் தாக்குதலை நடத்தியுள்ளமையும் அவருக்குத் தெரிய வந்தது. சில பொதுமக்களும் இதில் காயமடைந்து, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

புலனாய்வுத்துறையினர் வந்து பார்வையிட்டனர். தற்கொலைக் குண்டுதாரியின் உடல் சிதறிய நிலையில் கிடக்க, தலை துண்டிக்கப்பட்டுக் கிடந்தது. இது தவிர மற்றொரு நபரின் உடலும் ஒரு பக்கம் கருகிய நிலையில் இரத்தம் தோய்ந்தபடி கிடந்தது. அது யாரென்று அடையாளம் காண முனைந்தனர். அருகில் சென்ற அதிகாரி விமலுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. காலையில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டிருந்த நடைபாதை வியாபாரியான அந்த வாலிபன்தான் அது என்பதை அடுத்த கணமே புரிந்துகொண்டார்.

"அட....கர்மமே! இவன் எப்படி இதற்குள் மாட்டிக்கொண்டான்!"

அவர் யோசித்தார். 'நான்தான் தவறு செய்துவிட்டேன்! அவனை அப்பவே அனுப்பியிருந்தால் இப்படி அநியாயமாக உயிர்ப்பலி ஏற்பட்டிருக் காது! என்னுடைய கவனயீனத்தினால் இவனை வீணில் பலியாக்கிவிட்டேன். நான் எவ்வளவு பெரிய முட்டாள். பாவம் அந்த இளைஞன்!' நடந்ததை எண்ணி வருந்தினார் அவர்.

**-யாழமீர் மர்சூன், தெஹிவளை.**

'காவல்துறையினர் உயிர் நீத்திருந்தாலும் கூட அது அவர்களின் கடமையின் நிமித்தமே நடந்த சம்பவம்! அதற்கு அவர்களின் குடும்பத்தினருக்கு அரசாங்கம் நட்டஈடு வழங்கும். ஆனால் ஒன்றுமறியாத இந்த வாலிபரின் குடும்பத்தினருக்கு யார் உதவி செய்யப் போகிறார்கள்?' இவ்விதம் அவர் சிந்தித்தார்.

தனது முப்பது வருடகால சேவையிலே நீதி தவறாமல் கடமையாற்றி வந்தவருக்கு இன்று நடந்த சம்பவமோ உள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி மன உளைச்சலை உண்டாக்கியது. அவர் எதிர்பாராத இந்தச் சம்பவத்தால் ஒரு குடும்பத்தின் எதிர்காலமே இருண்டுவிட்டதனை உணர்ந்தார். மனச்சாட்சிக்குப் பயந்த அந்த மனிதர் குற்ற உணர்வு மேலோங்க அவமானத்தினால் தலை கவிழ்ந்தார்!

## எழுத்தாளர்களுக்கு

கவிதை, சிறுகதை எழுத்தாளர்கள் முரசுக்கு உங்கள் ஆக்கங்களை தொடர்ந்தும் எழுதி வருவது வரவேற்கத் தக்கது.

இருந்தும் ஒருசில படைப்பாளிகள் சொந்த சிந்தனையில் உதிப்பதை விடவும் ஏற்கெனவே ஒரு எழுத்தாளரால் எழுதப்பட்ட கவிதையையோ, சிறுகதையையோ பெயர் மாற்றி அனுப்பிவைப்பது தெரியவந்துள்ளது. இது திருத்தப்பட வேண்டியதாகும். எனவே எழுத்தாளர்கள் எமது சிரமத்தைத் புரிந்து கொள்ளவும்.

ஆ-ர்

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## கடவுளை நம்பு! கவலையை விடு!!

✱ நேரத்தை மாற்ற உங்களால் முடியாவிடினும் உங்களை மாற்றுவதற்குரிய நேரம் இது என்பதை உணருங்கள்.

✱ நீங்கள் மற்றவர்களின் காரியங்களில் கவனம் செலுத்தும் வழக்கத்தைக் கொண்டிருப்பீர்களாயின் உங்களுடைய சொந்தக் காரியங்கள் நட்டத்திற்குள்ளாகிவிடும்.

✱ சில மனிதர்கள் வயதேற்றத்திற்குப் பயப்படுவதாலும் இன்னும் சிலர் பொறுப்புகளை ஏற்க மறுப்பதனாலும் முதிர்ச்சியடை வதில்லை.

✱ ஒரு நேர்மையான மனிதன் அந்நியன் கண்களுக்குப் பயப்படவே மாட்டான்.

✱ தன்னை உண்மையாகப் புரிந்துகொண்ட ஒருவனால் சுயமாக நிற்க முடியும்.

✱. சோம்பேறி எப்போதும் தனது சோம்பேறித்தனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பான்.

✱ உங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தங்களுடைய மனதை மாற்றிக் கொள்ளும்போது, உங்களின் மனோநிலையை நீங்கள் மாற்றாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

✱ நெருக்கடி நிலை தாக்கும் போது தைரியமாக இருப்பதே சிறந்த வழியாகும்.

✱ வாழ்க்கையின் மிகப் பெரிய கேள்வி மரணமாகும். மரணத்திற்குப் பதிலாகுவது வாழ்க்கையாகும்.

✱ கடவுள் நம்பிக்கை என்பது பயமற்றிருப்பதே.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

## அன்னப் பறவை அவளைத் தேடுது! ஆவரம் பூ மேனி வாடுது!!

எங்கிருந்தோ அன்றில் பறவையின் வருத்தம் தோய்ந்த குரல் கேட்டது. விசாலி மெல்லக் கண்திறந்து பார்த்தாள். ஜன்னலூடாக வெளியே வெண்ணிறக் குளுமை விரிந்தது. நிலவொளியில் நனைந்திருந்த மரங்களும், தரையும் ஒரு கணம் இரவென்பதை மறக்க வைத்தன.

நினைவுகளில் ஆரம்பித்து உடலெங்கும் பரவி ஓடிய வேட்கையின் கிளை வேர்களைப் பிடுங்கி வீசும் ஆத்திரத்தோடு படுக்கையிலிருந்து எழுந்தாள் விசாலி. மீண்டும் பனங் கூடலுக்குள்ளிருந்து அன்றிலின் சத்தம் கேட்டது. 'அதுவும் என்னைப் போல்தான் தனியே இருந்து துன்புறுகிறதா' என்ற எண்ணத்தோடு கதவைத் திறந்து வெளியே வந்தாள்.



முற்றத்துப் பூவரச மரம் நிலவொளியில் பளீரென நின்றிருந்தது. மஞ்சள் பூக்களை ஏந்திக் குலுங்கியது. அவை சிறிய ஒலிபெருக்கிகள் போல இருப்பதாக நினைத்தாள். மரத்தின் கீழே சென்றாள். நிலவின் ஒளியும் நிழலும் இழைந்த பின்னல் தரையில் கிடந்தாடியது.

குளுமையான காற்று விசாலியின் முகத்தை மென்மையாகத் தடவியது. பாதங்கள் ஜில்லென்ற புல் நுனியை உணர்ந்து சிலிர்த்தன.

தரையில் அமர்ந்து மரத்தில் முதுகைச் சாய்த்துக்கொண்டாள். தூரத்தே கடல் சன்னமான குரலில் முணுமுணுப்பது கேட்டது. அதுவும் தூக்கமின்றி மன இரைச்சலோடு கிடந்து புரளுகிறது என்று நினைத்தாள்.

அந்தக் கடலின் தவிப்பைக் கரையில் இருந்து பார்த்தபடி குணாவோடு மணலில் அமர்ந்திருந்த அன்றைய பொழுது ஞாபகம் வந்தது.

"என்ன தூக்கமா......கண்களை மூடிக்கொண்டிருக்கிறீர்கள்?" குணாவின் எதிரில் அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்து பொறுமையிழந்த விசாலி கேட்டாள்.

அவன் கண்ணைத் திறக்காமலே, "கடல் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

"கடல் என்னவாம் சொல்கிறது?"

"சுதந்திரமாக இருக்கக் கரை விடவில்லை" என்று புலம்புகிறது.

"அதற்கெதற்குச் சுதந்திரம்?"

"சுதந்திரமாக இருக்க விரும்புவதுதான் எல்லாவற்றினதும் விருப்பம்!"

"எல்லாவற்றினதுமென்றால்....?" விசாலி அவனை நெருங்கிக் கேட்டாள்.

"எல்லாம்தான். கண்ணை மூடிக்கொண்டால் நான் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால், கடலுக்கு அப்படிக் கரையிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடிவதில்லை. அதனால் இரைந்துகொண்டிருக்கிறது...."

"சுதந்திரத்திற்கும் கண்ணை மூடுவதற்கும் என்ன சம்பந்தம்?"

குணா, கண்களை மூடி மௌனமாயிருந்தான். கைகளில் மணலை அளைந்தான்.

"என்ன பேச்சைக் காணோம்" என்று அவனை உலுக்கினாள் விசாலி.

"கண்களைத் திறந்தால் உன்னைப் பார்க்க வேண்டியிருக்கிறது. உன்னைப் பார்த்தால் சுதந்திரம் பறிபோய்விடுகிறது. அடிமைத்தனம் வந்துவிடுகிறது....."

விசாலியின் கண்கள் பொய்க் கோபத்தைக் கக்கின. அவள் இரண்டு கை விரல்களும் அவன் முகத்தில் பதிந்து, அவன் கண்களைப் பலவந்தமாகத் திறந்தன.

"இப்போது என்ன?" என்றாள்.

அவன் வலிய உதடுகளில் புன்னகை விரிந்தது.

"கண்களின் சுதந்திரமும் போய்விட்டது" என்றான் அவள் மேனியில் அலைபாயும் கண்களோடு.

"பெரிய கெட்டிக்காரர் என்று உங்களுக்கு நினைப்பு....."

என்றாள் கோப நடிப்பைத் தொடர்ந்து.

"இல்லை....இல்லை...அது போய்ப் பல நாட்களாயிற்று" என்று சிரித்தான் குணா.

"எது போய்?" அவனை அடிக்க நெருங்குவது போல் நெருங்கினாள்.

"கெட்டித்தனம், சுயமுனைப்பு, சுதந்திரம் எல்லாம்தான்...."

"கண்ணை மூடிக்கொண்டிருப்பதென்றால் இங்கு வருவானேன்.... வீட்டிலே தூங்கியிருக்கலாமே!"

"இங்கேயே கொஞ்சம் தூங்கிக்கொள்கிறேனே....."

"தூங்குவதற்கு இது இரவல்ல, பகல்!"

"பார்வையற்றவனுக்கு ஏது பகலும் இரவும்....."

"குருடரா நீங்கள்?"

"ம்...இப்பொழுது குருடுதான். பெரியவர்களே இதைச் சொல்கிறார்கள்."

"பெரியவர்கள் சொல்கிறார்களா?"

"ஆமாம். காதலுக்கு கண்ணில்லை என்று அவர்கள்தானே சொல்லி வைத்திருக்கிறார்கள்!" என்று சிரித்தபடி அவளை இழுத்துத் தன் மார்பில் சாய்த்தான்.

"விடுங்கள்" என்று சிணுங்கினாள் பொய்யாக.

"விடப் போவதில்லை....விட்டால் ஆபத்து!"

"என்ன ஆபத்து? என்ன விடப் போவதில்லை?"

"உன்னை இனிப் பேச விடப்போவதில்லை" என்று அவர் மலரிதழ்களை இரு விரல்களுக்கிடையில் அழுத்திக் குவித்தான்.

"எழ்ழ்ப்பழி.....டி....?" என்று அவள் குழறினாள்.

"இப்படி!" என்று குனிந்து அந்த உதடுகளைத் தன் முரட்டு உதடுகளால் சிறைப்படுத்தினான்.

பேச்சற்ற அந்த இன்ப வெள்ளத்தில் மெல்ல மெல்ல மூழ்கி மறைந்தார்கள்.

கடல் அன்று தான்பார்த்ததைச் சொல்கிறேன் வா என்று அழைப்பது போல விசாலிக்குக் கேட்டது.

நிமிர்ந்து பூவரச மரக் கிளைகளினூடே வானத்தைப் பார்த்தாள். நிலவொளிப் பொட்டுக்கள் கண்ணை நிறைத்தன. எங்கிருந்தோ, யாரோ யாழ் மீட்டும் ஓசை மிதந்து வந்தது. அதுவும் அவளை அமைதிப்படுத்தவில்லை. கழுத்தளவு கடலில் அமிழ்ந்து திணறுபவள் போல திக்குமுக்காடினாள். தன்னை சமாளித்துக்கொள்ள முயல்பவள் போல வேகமுடன் மேலெழுந்தாள். கைகளைக் கட்டிக்கொண்டு நடந்து பார்த்தாள்.

பால் நிலவோ, பதமான தென்றலோ, கடலின் பேச்சோ, யாழின் மெல்லிசையோ அவளை அமைதிப்படுத்தவில்லை. மேலும் மேலும் மனதின் வெம்மையும், மேனியின் தகிப்பும் அதிகரிக்கவே அவை உதவுவதாகத் தோன்றியது. மீண்டும் அறைக்குச் சென்று படுக்கையில் வீழ்ந்தாள். உலகிலுள்ள எல்லாக் கொடுமைகளையும் விட இது பெரிது என்று நினைத்தாள். இத் துன்பத்தைக் களைபவனை வரக் காணோமே என்ற தவிப்பில், தன்னைச் சபிக்கப்பட்டவளாய் எண்ணிக் குமைந்தாள்.

*மைஇரும் பனைமிசைப் பைதல*
*உயவும் அன்றிலும் என்புறம்*
*நாலும் அன்றி விரல்கவர்ந்து*
*உழந்த கவர்வின் நல்யாழ்*
*யாமம் உய்யாமை நின்றது*
*காமம் பெரிதே களைஞரோ இலரே.*

*(நற்றிணை - 335: 70-11)*

## தருவது முழடியன்

## சிந்தியா பதில்கள்

**எப்பிடி இருந்த நாம்! இப்பிடி ஆகிப் போனோமே....?**

-ஆர். கணேஸ்ராஜ், யாழ்ப்பாணம்

விவேக்கைப் பார்த்துச் சிரிப்பது போல் நம்மை நினைத்தால் சிரிக்க முடியவில்லை. சமீபத்தில் வெளிவந்த நூல்களில் அவசியம் படிக்க வேண்டிய ஒரு கட்டுரைத் தொகுப்பு நாஞ்சில் நாடனின் 'நஞ்சென்றும் அமுதென்றும் ஒன்று' அதில் ஓரிடத்தில் சொல்கிறார்:

"அறுவடையின்போது ஏராளமான நெல்மணிகள் வயலில் விழுந்து சிதறிக் கிடப்பதைப் பார்த்து அப்பாவிடம் கேட்டேன்.

'இவ்வளவு நெல்லும் நமக்குச் சேதம் தானே?''

அப்பா சொன்னார்: 'இங்க வீசக்கூடிய காத்துக்கு, பெய்யப்பட்ட மழைக்கு, அடிக்கக்கூடிய வெயிலுக்கு எல்லாம் ரூவாயா கொடுக்கோம்? நாம பாடுபட்டதுக்குக் கூலி எடுத்துக்கிடலாம். நம்மைச் சுத்தி காக்கா, குருவி, எலி, பாம்பு, தவளை, விட்டில்பூச்சி, புழு எல்லாம் சீவிக்கணும். அதை மறந்திரப்பிடாது''

விவசாயியின் இந்தப் பரந்த மனதை நஞ்சாக்கி, பிறரைப் பற்றிச் சிந்திக்காத உள்முகமானவர்களாய்... இந்த நாட்டை மனிதர்கள் வாழ முடியாத வீரபூமியாக்கியிருக்கிறோம்.

**காதல் கவிதைகளுக்கு மூலம் காதல் தோல்விதானா?**

இராமையா ஸ்டாலின், கொட்டகலை.

ஏதோ சிலது இருக்கலாம். ஆனால் பெரும்பாலும், 'இதைப் படித்த பிறகாவது யாரேனும் காதலிக்கமாட்டார்களா....' என்ற ஏக்கத்திலும் பிறக்கிறது.

**காமம் தப்பா?**

எஸ். எம். ஏ. மனோ, ஹட்டன்.

தப்பாது எல்லோருக்கும் வரும் உணர்வு எப்படித் தப்பாகும்!

**களவும் கற்று மற என்பது போல், கொலையும் செய்து மற, பொய்யும் பேசி மற, மோசடியும் கற்று மற, கள்ளும் குடித்து மற, கஞ்சாவும் புகைத்து மற, சூதும் ஆடி மற... என்றும் சொல்லி இருக்கலாமே... எல்லாம் ஒத்த கருத்துதானே?**

க. கமால்தீன், ஏறாவூர்-03

மனிதர்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். மறப்பதற்குள் இறந்துவிடுகிறார்கள்.

**சத்தம் இல்லாத தனிமை எங்கே கிடைக்கும்?**

-நஸீஹா சம்சபாத், ஏத்தாலை.

காது செவிடான பின், எங்கேயும்.

**பாகிஸ்தானில் கிண்ணம் யாருக்கு?**

எம். ராஜு, கொழும்பு-12

சிம்பாவேக்கு இல்லை..... ஹஹ்ஹ....!

**சிந்தியா, இரவில் ஏன் தூக்கம் வருவதில்லை?**

இரா. கோணேஸ்வரன், நுவரெலியா.

நித்திராதேவி என்றழைக்கப்படும் பெண்ணுக்கு இன்னொரு பெண்ணைத் துரத்த விருப்பம் இல்லாததால்.

**சமீபத்தில் பார்த்த படத்தையும்? பிடித்த காட்சியையும் சொல்வீர்களா?**

ஜெ. திவ்வியராஜன், கிருலப்பனை.

என்னத்தை சொல்ல? கடைசியாகப் பார்த்த படம் 'அரசாட்சி' படத்தில் ஆக்ஷன் சிங் இருக்கிறார். உலக அழகி இருக்கிறார் ஜனங்களின் கலைஞன் இருக்கிறார். ரகுவரன், மணிவண்ணன், தேவன், சரண்ராஜ், ஆனந்தராஜ், ராஜன் பி தேவ், பொன்னம்பலம் என்று நடுங்க வைக்கும் வில்லன்கள் ஒருவர் இருவரல்ல, ஏழு பேர்.... எல்லோருமிருந்தென்ன, படம் முடிந்து வெளியே வருகிறபோது ஞாபகத்தில் நிற்பவர் ஏகத்தாளமாக இடக்குப் பண்ணுகிற அந்தப் பொலிஸ் அதிகாரி மன்சூரலிகான் மட்டும்தான்.

**இந்த நாட்டிலுள்ள சமூகங்கள் ஒன்றை மற்றது புரிந்து கொள்ள முயற்சி எடுக்காமைதான் பிரச்சினை தீராமலிருப்பதற்குக் காரணம் என்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?**

ஜெ. தியாகராஜா, நேபட.

எப்படி மறுக்க முடியும்! ஆங்கிலப் பழமொழி ஒன்று: "யாரையாவது நீங்கள் வெறுத்தீர்கள் என்றால், உங்களால் அவர்களைப் புரிந்துகொள்ள முடியாது!'' முதலில் வெறுப்பை வளர்ப்பதையே சமூக அரசியல் கடமையாய் எண்ணிச் செய்து வருபவர்களை இனங்கண்டு வெறுத்தொதுக்க வேண்டும் முடியுமா நம்மால்....!

**வெயிலோ, மழையோ ஆண்கள் வெறுங்கையுடன்தான் வெளிக்கிடுகிறார்கள். ஆனால் பெண்கள் எப்போதும் கையில் குடை கொண்டே செல்கிறார்கள். ஏன்?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

சுமப்பதற்குச் சலிக்காதவர்கள் பெண்கள்!

**நம் நாட்டுக் கலைஞர்கள் பற்றிச் சொல்லுங்களேன்?**

என். சரஸ்வதி, மட்டக்களப்பு.

திறமையாளர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், தாங்களாகவே "உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவியுங்கள்" என்று எப்போதும் வற்புறுத்திக் கொண்டிருப்பவர்களைப் பார்த்தால், கொஞ்சம் அதிகப்படியாகத் தோன்றுகிறது. திறமையாலும் தரத்தாலும் மற்றவர்களின் ஊக்குவிப்பைப் பெறுவதை விட, இரக்கத்தின் மூலமும், ஒருவிதமாய் மிரட்டியும் பயமுறுத்தியும் கவனத்தைப் பெற்றுவிட முனைவதில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ என்ற வருத்தமுண்டாகிறது.



**தமிழ்த் திரைப்பட நடிகையாவதற்கு என்ன மாதிரியான தகுதிகள் வேண்டும்?**

-சுகந்தி ராஜரூபன், ஹட்டன்.

தெளிவாகச் சொல்லத் தெரியவில்லை. ஒன்றுமட்டும் நிச்சயம். ஏவாள் இன்றிருந்தால் நடிகையாக முடியாது மனிதத் தாய் வயிற்றில் பிறக்காத ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தொப்புள் இருக்காதென்பதால்!

**கன்னங்களை அப்பிள், மாம்பழம் என்று பழங்களுக்கு ஒப்பிடுவது ஏன்?**

கே. சுதாகர், அக்கரைப்பற்று.

கடித்துப் பார்க்கும் ஆசையினால்!.

**ஏழு மாதங்களில் இந்த அரசு என்ன சாதித்திருக்கிறது?**

சு. கோபிசங்கர், செம்புகவத்தை.

எழுந்தும் நிற்கவில்லை, கவிழ்ந்தும் விழவில்லை என்பதுதான்.

**சமூகத்தில் ஏகக் குரல் இருப்பதுதான் சரியானது என்பதுபோல படித்தவர்களும் ஏற்றுக்கொண்டு பயமுறுத்தும் இந்தச் சூழல் எப்படி உருவானது?**

எஸ். வினோ, வவுனியா.

லத்தீன் அமெரிக்கச் சிறுகதை ஒன்றில் - ஒரு வீடு. அந்த வீட்டில் ஒரு குரல் கேட்டுக் கொண்டே இருக்கும். என்ன குரல் என்று தெரியாது. அது ஆதிக்கம் செலுத்திக் கொண்டேயிருக்கும். வீட்டில் இருப்பவர்கள் தாங்கள் புழங்கும் பகுதியைக் குறைத்துக் கொண்டே போவார்கள். ஆனாலும் குரல், அவர்களை விடாது. வேறு வழியில்லாமல் சகித்துக்கொள்வார்கள். அதுவே அந்த வீட்டின் குரலாகவும் ஆகிவிடும்.

**கடைசி வரை சேர்ந்து வாழும் எல்லாக் கணவன் - மனைவிகளும் சந்தோஷமாகத்தான் வாழ்கிறார்களா?**

இ.கமலனாந்தன், திருகோணமலை.

உங்களுக்குத் திருமணமாகி குறைந்தது ஒரு வருடமாவது ஆகியிருக்கும் என்பதைச் சொல்ல துப்பறியும் மூளை ஒன்றும் தேவையில்லை. ஆறுதலுக்கு ஒரு குட்டிக் கதை தருவது என் கடமை!

மனைவி மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த ஓர் ஆங்கிலக் கவிஞர், ஒவ்வொரு நாளும் மனைவியின் கல்லறைக்குச் சென்று பூ வைத்துவிட்டு வருவதை வழக்கமாய்க் கொண்டிருந்தார். கவிஞருக்கு நெருக்கமான ஒரு நண்பர். அவரது மனைவி தன் கணவரிடம் சொன்னார்: "உங்கள் நண்பரைப் பாருங்கள். அவருக்குத் தன் மனைவி மீது எவ்வளவு பிரியம்! தினமும் கல்லறைக்குப் போய் பூ வைக்கும் அளவிற்கு எவ்வளவு அன்பு! நீங்களும் இருக்கிறீர்களே....."

அந்தக் கணவர் பதற்றப்படாமல் சொன்னார்: "எனக்கு மட்டும் இந்த நிலைமை வரட்டும். தினமும் நான் இரண்டு முறை பூ வைக்கத் தயாராக இருக்கிறேன்."




'**பொடி** லைன்' கிரிக்கெட் போட்டித் தொடரின் போது இங்கிலாந்து அணியை வழிநடாத்தி பெரும் சர்ச்சைக்குள்ளான 'இரும்பு மனிதன்' என அழைக்கப்பட்ட இங்கிலாந்து அணியின் தலைவர் டக்ளஸ் ஜாடின், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். இவரது தந்தை 1891இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக கிரிக்கெட் அணிக்குத் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இதில் இன்னுமொரு வியக்கத்தகு விடயம் என்னவெனில் டக்ளஸ் ஜாடின் பிறந்தது



இங்கிலாந்து அணி முதற் தடவையாக தனது நாட்டில் அவுஸ்திரேலியா அணியிடம் தோல்வி கண்டபோது இரு இன்னிங்ஸிலுமாக 90 ஓட்டங்களைக் கொடுத்து 14 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணி வீரர் எப். ஆர். ஸ்பொபர்த்

இந்தியாவிலாகும் என்பதே. இவர் 1900ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி பம்பாய், மலபார் மேடு என்ற இடத்தில் பிறந்தார். இங்கிலாந்து அணிக்காக விளையாடிய இவர் 22 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 1,296 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

'பொடி லைன்' டெஸ்ட் தொடர் கிரிக்கெட் போட்டிகள் அவுஸ்திரேலியாவின் சிட்னி மெல்போர்ன், எடிலேட் ஆகிய மைதானங்களில் நடைபெற்றன. மேற்படி மூன்று மைதானங்களினதும் வரலாறுகளை சுருக்கமாகக் காண்போம்.

அவுஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் அமையப்பெற்றுள்ள மெல்போர்ன் விளையாட்டு மைதானத்தில் உலகின் முதலாவது உத்தியோகபூர்வ டெஸ்ட் போட்டி, முதலாவது நூற்றாண்டு விழா கிரிக்கெட் போட்டி மற்றும் உலகின் முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி என்பன நடைபெற்றன.

இம் மைதானம் 1853ஆம் வருடம் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. 1856ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம், 27ஆம் திகதிகளில்தான் இம் மைதானத்தில் முதல்தர போட்டிகள் முதற் தடவையாக நடைபெற்றன. இப் போட்டிகள் விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய மாநில அணிகளுக்கு இடையில் இடம்பெற்றன.

1956இல் மெல்போர்ன் ஒலிம்பிக் போட்டிகளும் இம் மைதானத்திலேயே நடாத்தப்பட்டன. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியொன்றின்போது தனிப்பட்ட வீரர் இம் மைதானத்தில் எடுத்த அதிகூடிய ஓட்டங்கள் 307 ஆகும். அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த ஆர். எம். கவ்பர் 1965-66ஆம் வருடங்களில் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற ஒரு போட்டியின்போதே மேற்படி ஓட்டங்களைப் பெற்றார்.

சிட்னி மைதானம் அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் தலைநகரான சிட்னி நகரத்தில் அமைந்துள்ளது. இதில் முதன்முறையாக முதல்தரப் போட்டி ஒன்று 1857 ஜனவரி மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் ஆகிய இரு மாநில அணிகளுக்கு எதிராக நடைபெற்றது.

முதலாவது டெஸ்ட் போட்டி 1882ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் நடைபெற்றது. இதில் ஐந்து விக்கெட்டுகளினால் அவுஸ்திரேலிய அணி வெற்றியீட்டியது.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி 1979 ஜனவரி மாதம் 13ஆம் திகதி அவுஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம் பெற்றதுடன் மழை காரணமாக அப் போட்டி இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

1979ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி, மின் ஒளியின் துணையுடன் நடாத்தப்பட்ட உலகின் முதலாவது ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டி சிட்னி மைதானத்திலேயே நடத்தப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

தென் அவுஸ்திரேலியாவின் தலைநகரான எடிலேட் நகரில், எடிலேட் மைதானம்



**பொடி லைன் போட்டியின் ஒரு காட்சி லாவூட்டில் பந்துக்கு முகங்கொடுக்கும் டொனால்ட் பிரட்மன்**

அமைந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் பிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட அணியும், இங்கிலாந்தில் பிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட அணியும் இணைந்து எடிலேட் மைதானத்தில் முதலாவது கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டன. இப் போட்டி 1872ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது. எடிலேட் மைதானம் 1871ஆம் வருடம் திறக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.


1884ஆம் வருடம் டிசம்பர் மாதம் 12,13,15 மற்றும் 16அம் திகதிகளில் மேற்படி மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்து எட்டு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

1975 டிசம்பர் மாதம் 20ஆம் திகதி இம் மைதானத்தில் முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி, அவுஸ்திரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையில் இடம் பெற்றது. இதில் அவுஸ்திரேலிய அணி ஐந்து விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.


1929-30ஆம் வருடங்களில் க்வீன்ஸ்லாந்து அணிக்கு எதிராக, நியூ சவுத் வேல்ஸ் அணிக்காக விளையாடிய டொனால்ட் பிரட்மன் ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்ட 452 ஓட்டங்களே இம் மைதானத்தில் வைத்து ஒரு வீரர் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொண்ட அதி கூடிய ஓட்டங்களாகும்.

**-மைந்தன்.**


# இனிய தோழர்களே! உங்களுக்கு இதய அஞ்சலிகள்!




*கப்டன் பாலன் செல்வகுமார் (ரகு)*
**மண்ணில் உதித்தது:** 17.06.1971
**மக்களுக்காய் மரித்தது:** 09.10.1995




*லெப்டினனட் ஆசைப்பிள்ளை மோகனதாஸ் (தாஸ்)*
**மண்ணில் உதித்தது:** 09.03.1969
**மக்களுக்காய் மரித்தது:** 09.10.1995

**சகோதரப் படுகொலையின்**
**சரித்திரத்துக்கு**
**நீங்களும் சாட்சியமானீர்கள்.**
**தலைவனின் உயிர் காக்க**
**உங்கள் உயிர் கொடுத்தீர்கள்.**
**ஆண்டுகள் ஒன்பது**
**கடந்துவிட்டபோதும்**
**உங்களுக்காக அழுத எங்கள்**
**விழிகளில்**
**ஈரம் இன்னும் காய்ந்துவிடவில்லை.**
**அழியாத உங்கள் நினைவுகளை**
**இதயத்தில் சுமந்துகொண்டு**
**இனிய எங்கள் தலைவனின்**
**வழிகாட்டலில்**
**தொடர்கிறது மக்கள் பணி.**
**எத்தடை எம்முன் இருப்பினும்**
**அத்தடை தகர்த்து எம் இலக்கினை**
**அடைவோம்.**
**இதுவே உங்கள் நினைவுகளில்**
**நாம் கூறும் உறுதிமொழி.**

09.10.95இல் கொழும்பு ஹெவலொக் வீதியில் அமைந்திருந்த ஈ.பி.டி.பி. அலுவலகத்தை புலிகள் தாக்கியபோது உயிரிழந்தவர்கள்.



*லெப்டினனட் கிருஸ்ணபிள்ளை உதயகுமார் (வரதன்)*
**மண்ணில் உதித்தது:** 09.08.1967
**மக்களுக்காய் மரித்தது:** 09.10.1995



*கோப்ரல் அரசானந் உதயானந் (குட்டி)*
**மண்ணில் உதித்தது:** 22.01.1973
**மக்களுக்காய் மரித்தது:** 09.10.1995

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**


**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**


**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**


## ஆதிக்கம் 5: பிறந்த கிழமை வியாழன்

**எ**ண் ஐந்து யோகத்தின் சின்னமாகும். பிறந்த கிழமையாகிய வியாழக்கிழமை நல்ல முன்னேற்றத்தின் அச்சாணியாகும். இப்படியான ஆதிக்கத்தில் பிறந்துள்ள நீங்கள் நல்ல மனம் உடையவராக இருப்பீர்கள். இதயமுள்ள நல்ல குணமும் நல்ல பண்பாடுகளும் உள்ளவராகத் திகழ்வீர்கள். யாருடைய மனதையும் புண்படுத்தமாட்டீர்கள். தீய காரியங்களைக் கனவில்கூடச் செய்யமாட்டீர்கள். வார்த்தைகளை முட்களாகவோ, கற்களாகவோ பாவிக்கமாட்டீர்கள்.

அன்பு என்பதையும் அதன் ஆழம் என்ன என்பதையும் உங்களிடம்தான் காணலாம். இரக்கமான மனம் உடையவர்கள். நீங்கள் ஒன்றைச் சொன்னால் அதனை எப்படியாவது செய்வீர்கள். சொன்ன சொல் தவறாத நாணயமிக்க நற்பண்புள்ளவர்தான் நீங்கள், மேதைகள், மகான்கள் ஆகியோரிடம் காணப்படுகின்ற அம்சங்கள் உங்களிடம் காணப்படும். பெரிய செல்வாக்குள்ளவர்களின் அன்புக்கு ஆளாகக் கூடியவர்கள்தாம் நீங்கள். இதனால் பெரிய இடத்து அல்லது பெரிய புள்ளிகளின் நட்பு உங்களுக்கு இருக்கும்.

எந்த ஒரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் எடுத்த எடுப்பிலேயே உடனடியாகச் செய்யமாட்டீர்கள். தீர ஆராய்ந்து அதிலுள்ள சிக்கல்கள், சிரமங்கள், நன்மைகள் பற்றித் தெரிந்த பின்னர்தான் செய்வீர்கள். வீண் காரியங்களில் ஒருபோதும் ஈடுபட்டு நேரத்தையும் பணத்தையும் வீண் விரயம் செய்யமாட்டீர்கள். புகழ்பெற்றவர்களைப் பார்ப்பதற்கும், பேசுவதற்கும், பழகுவதற்கும் பிறர் விரும்புவது போல உங்களுடன் பேசப் பழக விரும்புவார்கள். இதற்குக் காரணம் உங்களுடைய முன்மாதிரியான நடத்தைதான். நடை, உடை, பாவனை, உங்கள் பேச்சு, உங்களுடைய அறிவு, உங்களுடைய அழகு இவைதான்.

நீங்கள் பிறந்த ஊரில் வசிக்கும் பேறு உங்களுக்கு இல்லை. வேறு வேறு ஊர்களில்தான் வசிப்பீர்கள். அதிகம் படித்திருக்கமாட்டீர்கள். என்றாலும் உங்கள் பேச்சும், உங்கள் தோற்றமும், உங்கள் ஆளுமையும் படித்தவர்கள் போல் காட்டும். உங்களுடைய இளமைக் காலத்தில் சிலருடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்து சம்பாதிப்பீர்கள். கடினமான தொழில் செய்து வருமானம் தேடக்கூடிய நிலையில் நீங்கள் இல்லை. எளிதான முறையில் அதிக வருமானம் உங்களுக்குக் கிடைத்த வண்ணம் இருக்கும். உங்களிடம் அதிகமானவர்கள் வேலை செய்வார்கள். நீங்கள் என்ன தொழில் செய்தபோதிலும், உங்களின் 32ஆவது வயதிற்குப் பின்னர்தான் முன்னேற்றம் ஏற்படும்.

35, 38, 41, 44, 47 ஆகிய வயதுகளில் நிறைவான வருமானம் உங்களுக்குக் கிடைக்கும். இடையிடையே பணக் கஷ்டங்கள் ஏற்படும். இருந்தாலும் சிரமத்தைக் கொடுக்காது. உங்களது 48ஆவது வயதில் அதிகப் பெறுமதியுள்ள பணத்தொகை உங்களுக்குக் கிடைக்கும். இதனைக் கொண்டு கட்டடப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள் சம்பந்தமான வியாபாரத்தைத் தொடங்குவீர்கள். இதனால் நிறைவான, குறைவில்லாத வருமானம் பெற்று ஆயுள் வரை சுகமாக வாழ்வீர்கள். 7ஆவது, 42ஆவது வயதுகளில் கண்டம் ஏற்பட்டு நீங்கும். உயிருக்குத் தீங்கு நிகழாது.

தலைவலி, வயிற்றுவலி, கிறுகிறுப்பு, இலேசான மயக்கம் போன்றவை உங்களுக்கு அடிக்கடி ஏற்படும். இதற்குக் காரணம் உங்களுக்கு குடலில் மலச்சிக்கல் இருப்பதுதான். இதனைத் தடுப்பதற்கான உணவு வகைகளை நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். அகத்திக் கீரை, ஏலக்காய், கத்தரிக்காய், கொய்யாப்பழம், பசளைக் கீரை, வாழைப்பழம், பசுநெய், வெங்காயம், பருப்பு, நெல்லிக்காய் என்பன.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் என்ன தெரியுமா? அது எண் மூன்று. 3, 12, 21, 30ஆம் திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகளில் நீங்கள் பிறந்த கிழமையாகிய வியாழக்கிழமையில் அமைந்தால் இதன் பலன் இரட்டிப்பாகும். வெள்ளை நிறத் துணியில் பச்சை, சிகப்பு, நீலம் ஆகிய நிறத்தில் கோடுபோட்ட சாட் அணிந்து வந்தால் அதிக யோகத்தை அது உண்டு பண்ணும்.

மோதிரம் அணிவதற்கு ஆசை இருந்தால், நீல நிற வட்டமான, நீலக்கல் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். வெற்றியும் சிறப்பும் உங்களைத் தேடி வரும்.

ஆகவே ஆதிக்க எண் 5ஐயும் பிறந்த கிழமையாகிய வியாழக்கிழமையினையும் கொண்டுள்ள நீங்கள் வாழ்க்கையில் அதிக மகிழ்ச்சி பெற்று வாழ என் நல்லாசிகள்.

பண்பும் பாசமும் நற்குணமும் உங்கள் எண்ணுக்கும் வியாழனுக்கும் உண்டு. உண்மையும் நேர்மையும் உங்கள் மனசுக்குண்டு. அதனால் வாழ்வில் யோகமுண்டு.

அடுத்து ஆதிக்கம் 5 வியாழக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்

> "மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவையான தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

இந்த அட்டைக் குழாயை குவளையின் மேலிருந்து சேர்க்கவும், எடுக்கவும் வசதியாக இந்த அட்டைக் குழாயைத் தயார் செய்து அதன் மேல் கறுப்பு வர்ணம் பூச வேண்டும்.

நடுவில் தொடை எலும்பு இரண்டையும் 'X' போல வைத்து மேலே மண்டை ஓட்டை வைத்தது போன்ற ஓர் அபாயக் குறியை வரைந்து வைத்துவிட வேண்டும்.

காட்சியை ஆரம்பிக்கும் காட்சியாளர் மேடைக்கு வரும்பொழுது கையில் மந்திரக்கோலுடன் வந்து மேடையில் நின்று மந்திரக்கோலைச் சுழற்றிக் காண்பித்துவிட்டு, ஸ்ரூலின் மேலுள்ள டப்பியை எடுத்து உள்ளே உள்ள சொருகு குவளை கீழே விழுந்து விடாதபடி இடது கைப் பெருவிரலை குவளையின் விளிம்பில் வைத்துப் பிடித்துக்கொண்டு குவளையைத் தலைகீழாகச் சாய்த்துக் காண்பித்தால் உள்ளே உள்ள நூல் அட்டை கீழே விழும். உடனே குவளையினுள் மந்திரக்கோலை விட்டு கடகடவென்று ஆட்டிவிட்டு, குவளையை ஸ்ரூலின் மேல் வைத்துவிட்டு கீழே விழுந்த நூல் அட்டையை எடுத்து நூலின் முனையைப் பிடித்து இழுத்தால் நூல் பிரியும். அந்த அட்டையிலுள்ள நூல் அத்தனையையும் பிரித்துப் போட்டு அந்த அட்டையை மட்டும் குவளையில் போட்டுவிட்டு பிரித்த நூலைக் கையில் எடுத்து அதை கன்னா பின்னாவென்று பிய்த்து அந்த நூல் முழுவதையும் துண்டும் துணுக்குகளுமாக்கி சபையோரிடம் பிய்த்துப் பிய்த்துக் காண்பித்து, அதைக் கையில் எடுத்து உருட்டி உருண்டையாக்கி குவளைக்குள் தாராளமாக இறங்கும்படி செய்து, குவளையைக் கையில் எடுத்து தலைகீழாகச் சாய்த்துக் காண்பிக்க, அதில் போட்ட அட்டை கீழே விழும். அந்த அட்டையைக் கையில் எடுத்து மறுபடி குவளைக்குள் போட்டு, துண்டு துண்டாக அறுத்த நூல் உருண்டையை சபையோருக்கு முன் குவளையில் போட்டு ஸ்ரூலின் மேல்வைத்து, அட்டைக் குழாயை அதன் மேல் சொருகி, கறுப்புக் கைக்குட்டையை அதன்மேல் விரித்துப் போட்டு, மந்திரக் கோலைக் கொண்டு குவளையைச் சுற்றி மந்திரம் போடுவது போல் முணு முணுத்துவிட்டு, குழாயின் மேல் போட்ட கறுப்புக் கைக்குட்டையை எடுத்து விட்டு, அட்டைக் குழாயைச் சற்று அழுத்திப் பிடித்து, முதல் குவளையில் சொருகப்பட்டிருக்கும் இரண்டாவது குவளையின் விளிம்பை அழுத்தி, இரண்டாவது குவளை மட்டும் குவளையிலிருந்து தனியே வந்து அட்டைக் குழாயுடன் சேர்ந்து வரும்படி எடுத்து, அட்டைக் குழாயுடன் பக்கத்தில் வைத்துவிட்டு, முதல் குவளையினுள் கையை விட்டு, நூலின் முனையைப் பிடித்து வெளியே எடுத்து அதை சேம்பிச் சேம்பி இழுக்க, அது நீளமாகப் பிரிந்துகொண்டே வரும். கடைசியில் குவளையைக் கவிழ்த்துக் காண்பித்தால் உள்ளே இருந்து நூல் சுற்றிய அட்டை விழும். குவளையில் மந்திரக்கோலை விட்டு கடகடவென்று ஆட்டிக் காண்பித்துவிட்டு காட்சியை முடித்துவிட வேண்டும்.

*குறிப்பு :* உல்லன் நூல் கிடைத்தால் அதில் சிவப்பு நூல் தேவையான அளவு வாங்கி இந்தக் காட்சியை நடத்தினால் ரொம்ப அழகாக இருக்கும். முதல் குவளையில் போடப்பட்ட நூல் அட்டையில், நூலின் தலைப்பைச் சற்று நீளமாக இழுத்துவிட்டு வைத்தால் உள்ளே கைவிட்டு நூலை இழுக்க வசதியாக இருக்கும். இரண்டாவது குவளையை அட்டைக் குழாயுடன் சேர்த்து எடுக்கும்பொழுது கவனமாக எடுக்க வேண்டும். அட்டைக் குழாயைத் தயாரிக்கும்பொழுதே குவளையின் உயரத்தை விட மேலும் மூன்று செ.மீ. அளவு உயரம் வைக்க வேண்டும்.

துண்டுகளாக்கப்பட்ட நூல் உருண்டையை குவளையில் போடும் போது அது அடி வரை இறங்கும்படி செய்ய வேண்டும். மேலே சிறிதளவும் தெரியக் கூடாது. கவனமாக இருக்க வேண்டும்.

## குவளையில் மணலைக் கொட்டி மல்லிகைப் பூ வரவழைத்தல்

இந்தக் காட்சியை நடத்துவதற்கு, அறுத்த நூலை நீளமாக வரச்செய்யப் பயன்படுத்திய அதே குவளையைத்தான் பயன்படுத்த வேண்டும். காட்சி ஆரம்பிக்குமுன் முதலாவது குவளையில் வாடாத, அழகாக உள்ள உதிரி மல்லிகைப் பூவைக் கொண்டுவந்து, முதல் குவளையில் சற்று அழுத்தமாகப் போட்டு இரண்டாவது குவளையை அதன்மேல் சொருகி வைக்க வேண்டும். இப்படிச் செய்யும்பொழுது, இரண்டாவது குவளை மேலே தூக்கி நிறக்கக் கூடாது. விளிம்பு வரை மட்டமாகவே இருக்க வேண்டும். ஒரு கண்ணாடி டம்ளரில் சுத்தமான மணலைப் போட்டு வைக்க வேண்டும். மேடையில் இரண்டு ஸ்ரூலைப் போட்டு ஒன்றின் மேல் குவளையையும் அட்டைக் குழாயையும் வைத்துவிட்டு, மற்றொரு ஸ்ரூலின் மேல் மணல் டம்ளரை வைத்துவிட வேண்டும்.

காட்சியாளர் மேடைக்கு வந்து குவளையை எடுத்து, உள்குவளை விழுந்துவிடாதபடி பெருவிரலினால் அழுத்திப் பிடித்துக்கொண்டு குவளையைத் தலைகீழாகப் பிடித்து உள்ளே மந்திரக்கோலை விட்டு கடகடவென்று ஆட்டிக் காண்பித்து விட்டு, குவளையை நேராகப் பிடித்துக்கொண்டு மணல் உள்ள டம்ளரை சபையோரிடம் காண்பித்து, சிறிதளவு மணலை கீழே கொட்டிவிட்டு, குவளையினுள் தூக்கிக் கொட்டி, மறுபடி குவளையைச் சாய்த்து உள்ளே உள்ள மணலில் சிறிதளவு கீழே விழும்படி செய்து குவளையை ஸ்ரூலின் மேல் வைத்து அட்டைக் குவளையை எடுத்து குவளையின் மேல் சொருகி ஒரு கறுப்புக் கைக்குட்டையை எடுத்து அதன் மேல் விரித்து மூடிவிட வேண்டும். பிறகு மந்திரக்கோலைக் கொண்டு மந்திரம் போடுவது போல நடித்து, கறுப்புக் கைக்குட்டையை எடுத்துவிட்டு, அட்டைக் குழாயை மேல் நோக்கித் தூக்கி எடுக்கும்பொழுதே, உள் குவளை அட்டைக் குழாயுடன் வரும்படி பிடித்து எடுத்து உள்ளே குவளையுடன் கூடிய அட்டைக் குழாயை எடுத்து ஸ்ரூலின் மேல் வைத்துவிட்டு, குவளையை எடுத்து அதன் பக்க வாட்டில் மந்திரக்கோலைக் கொண்டு இலேசாகத் தட்டி குவளையை மெதுவாக ஆட்டினால் அழுத்திய மல்லிகைப் பூ மெதுமெதுவாக உபரியாகி மேலே கிளம்பி குவளையை நிரப்பி மேல் நோக்கி வந்து கீழே சிதறும். இதை மெதுமெதுவாக எடுத்து சபையோர் மேல் வீச வேண்டும். குவளையில் பாக்கி இருப்பதை சபையோர் மேல் வீசிக் கொட்ட வேண்டும். இதை சபையோர் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

குறிப்பு : சொருகுக் குவளையில் மணல் இருப்பதால் அது சற்றுப் பளுவாக இருக்கும். ஆகையால் அட்டைக் குழாயுடன் எடுக்கும்போது, கவனமாகப் பிடித்துத் தூக்க வேண்டும். மல்லிகைப் பூவை வாங்கும்பொழுது அது முழுவதும் மலராத பூக்களாகப் பார்த்து வாங்க வேண்டும்.

(தொடர்ந்து வரும்..........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
> *-காதில பூ கந்தசாமி-*

**கௌ**ரவ சபாநாயகர் அவர்களே! இப்போது எடுக்கப்பட்டிருக்கும் விவாதம், தமிழ் இனத்துக்கு எதிரான விவாதம். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் விவாதம். எமது மக்களின் வாக்குரிமையைச் சேற்றுக்குள் புதைக்கும் விவாதம்.

என்ன! ஏதோ புதுசாப் பேசிறனெண்டு பாக்கிறியளோ? ஒண்டுமில்லை, இந்த ஐடென்ரிக் காட்டைத் தேர்தலுக்கு ஒரு அடிப்படைச் சான்றாப் பாவிக்க வேணுமெண்டு ஒரு சட்டமூலம் கொண்டு வந்தவையெல்லே பார்லிமென்டில. அதுக்கு எதிரா எங்கட கூட்டமைப்பு நிலைப்பா டெடுத்திருந்த தெல்லே. அதுதான் அந்த விவாதத்தில எங்கட தானைத் தலைவர் சம்பந்தனையாவிட்ட இந்த ஐடென்டிக் காட்டை நொருக்கித் தள்ளி ஒரு பாராளுமன்றப் பேச்சொண்டைப் பேசச் சொன்னால், எப்பிடி ஒரு பிடி பிடிப்பாரெண்டு யோசிச்சுக்கொண்டு படுத்தன். அப்பிடியே சம்பந்தனையாவின்ர உருவம் பாராளுமன்றச் சபையில பேசிறதாக் கண்ணுக்கு முன்னால தெரிஞ்சுது. அந்தப் பேச்சைத்தான் இங்க தாறன். இது சம்பந்தனையா பேசிற பேச்சா நினைச்சு தயவு செய்து உணர்ச்சியை ஏத்திக்கொள்ளுங்கோ.

"ஐடென்ரிக் காட்டைக் காட்டித்தான் தமிழினம் வாக்களிக்க வேணுமென்றால், அது அவமானம். அடையாளம் இல்லாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் தமிழர்கள். அவர்களுக்கு ஏன் ஒரு அடையாள அட்டை? இந்த அடையாள அட்டையைக் கட்டாயமாக்கிவிட்டால் எங்கள் தமிழனின் தார்மீக உரிமையாம் கள்ள வோட்டை மறுத்துவிடலாமென்று கனவு காண்கிறது இந்த அரசாங்கம். கடந்த தேர்தல்களில், எமது மக்களின் சார்பில் நாம் பெற்ற வாக்குகளெல்லாம் அடையாளம் கடந்தவை. இல்லாதவர்களும் இறந்தவர்களும் எங்களுக்கு எத்தனை ஆயிரம் வாக்குகளை அள்ளியள்ளித் தந்தார்கள். அத்தனை வாக்குகளையும் ரத்துச் செய்துவிட்டால் தமிழர் பிரதிநிதிகளென்று இங்கே யார் மிஞ்சப் போகிறார்கள்? அதனால்தான், தமிழர்களின் வாக்குப் பலத்தை முறியடிப்பதற்காகவே திட்டமிட்டு இந்த அரசாங்கம் அடையாள அட்டைச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறது. தமிழ் மக்களின் உண்மையான வாக்குகளை மட்டும் வைத்து அரசியல் பிரதிநிதித்துவத்தைத் தேர்ந்தெடுக்க முனைந்தால், துரோகிகளெல்லாம் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுவிடுவார்கள். நாங்கள் எத்தனை கஷ்டப்பட்டு கடந்த தேர்தலில் அவர்களைப் பிரதிநிதித்துவம் பெற முடியாமல் தடுத்துப் பார்த்தோம். இருந்தும், எம் சக்தியையும் மீறி ஒரு ஆசனத்தை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். இதனால் தமிழ் மக்களின் ஒருமித்த தலைமை என்ற பெருமையை உலகுக்குக் காட்ட முடியாத நிலைமை எமக்கு ஏற்பட்டுவிட்டது. இந் நிலையில், அடையாள அட்டைச் சட்டத்தைக் கொண்டுவந்தால் என்னாகும் என்று யோசித்துப் பார்க்க முடியவில்லை. மக்களின் உண்மையான வாக்குகள் மட்டும்தான் எண்ணப்படுமானால் எமது அழிவுகாலமும் எண்ணப்படுகிறது என்றே அர்த்தமாகிவிடும். ஆதலால் சபாநாயகர் அவர்களே! தமிழ் மக்களின் இந்த வாக்குரிமையைப் பறிக்காதீர்கள். வெளிநாடு போனவர்களுக்கும் வாக்குரிமை உண்டு என்பதே எங்கள் கோரிக்கை. ஏன், இறந்தவர்களுக்குக்கூட வாக்குரிமை உண்டு. அவர்கள் ஏன் இறந்தார்கள்? எங்களுக்காகவே இறந்தார்கள். எங்களுக்காக இறந்தவர்களின் வாக்குரிமையைத்தன்னும் நாம் பாதுகாத்துப் பேண வேண்டாமா? அதனால் சபாநாயகர் அவர்களே! அவர்களை வாக்களிக்க அனுமதியுங்கள். இல்லாதவர்களும் இறந்தவர்களும் எப்படி வாக்களிப்பார்களென்று கேட்கிறீர்களா? அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் அதை. அவர்களுக்காக எந்த ஆபத்தையும் கருதாமல் திரும்பத் திரும்பச் சென்று வாக்களிக்க எத்தனையோ தமிழ் மறவர்கள் தயாராக இருக்கி றார்கள். ஏன் எங்கள் பல்கலைக்கழக மாணவர்களே தங்கள் படிப்பையும் துச்சமாக மதித்து இந்தப் புனித காரியமாம் கள்ள வாக்கைத் தங்கள் தலையாய கடமையாக எடுத்துச் செய்திருக்கிறார்கள், இனியும் செய்வார்கள். பன்னிரண்டு வயது நிரம்பாத பச்சிளம் பாலகர்கள் கூட, அரைக் காற்சட்டையுடன் சென்று எவரெவரதோ வாக்குகளையெல்லாம் எமதாக்கித் தந்திருக்கிறார்கள். இத்தனை அர்ப்பணத்துடன் நிகழ்ந்தேறும் கள்ள வாக்கை அடியோடொழிக்கச் சதித்திட்டம் தீட்டுகிறது அரசு. அதற்குச் சில கோடரிக் காம்புகளும் உடந்தையாக நிற்கிறார்கள். அவர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தும் எங்கள் கள்ள வாக்கு மார்க்கத்தை அசைக்க முடியவில்லை. கடந்த தேர்தலில் பொலிஸாரையும் இராணுவத்தினரையும் சோதனை செய்ய இறக்கி இதனை முறியடிக்கலாமென்று கனவு கண்டார்கள். ஆனால் நாங்கள் கையாண்ட ராஜதந்திரத்தால் அந்தத் திட்டத்தை முறியடித்து, பொலிஸையும் ஆமியையும் தெருவுக்கு இறங்காமலே பாத்துக் கொண்டோம். அதனால்தான் ஒரு கோவில் திருவிழாவைப் போல அள்ளுண்டு போய் எம்மவர் கள்ள வாக்களித்தார்கள். இந்த இலட்சிய வேகத்தைக் கண்டு பொறுக்க முடியாத கயவர்கள், இப்போது ஒரு மாற்றுத் திட்டத்துடன் வந்துள்ளார்கள். அடையாள அட்டையை தேர்தலுக்கான ஆவணமாக ஆக்க வேண்டுமென்று அவர்கள் ஒரு சட்டமூலத்தைக் கொண்டு வருகிறார்கள். இந்தச் சட்டமூலம் நிறைவேறினால் எமது கள்ள வாக்குகள் பெரும் கேள்விக்குறியாகி விடும். உரியவரைத் தவிர வேறு எவரும் மாற்றாருடைய வாக்குகளை அளிக்க முடியாது போய்விடும். இறந்தவர்களும் இங்கு இல்லாதவர்களும் எப்படி வாக்களிப்பது? எனவேதான் இது எமது அடிப்படை உரிமையை மீறும் செயலென நாம் கண்டிக்கிறோம். ஆகவே சபாநாயகர் அவர்களே! இந்த அடையாள அட்டையென்ற தடுப்புச் சுவரை உடைத்தெறிய நாம் கங்கணம் கட்டிவிட்டோம். அதனால் நாம் இத் தீர்மானத்தை எதிர்த்தே தீருவோமென்று கூறி எனது இலட்சிய உரையை முடித்துக்கொள்கிறேன். வாழ்க தமிழ். ஒழிக அடையாள அட்டை!! வணக்கம்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(07.10.2004 தொடங்கி 13.10.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கன்னி - சூரியன், வியாழன், புதன், செவ்வாய், துலாம் - கேது, மேடம் - இராகு, க்ர்க்கடகம் - சனி, சிங்கம் - வெள்ளி

சந்திரன் சிங்கம், கன்னி, துலாம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)
தொழில் நிலை மாற்றம், தொழில் பலிதம், உறவினர் உதவி, பிரயாண மிகுதி, இனசன நன்மை, செலவு மிகுதி, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் கஷ்டம், வெளியிடப் பிரயாணம், பண விரயம், உத்தியோக மாற்றம், மனக் கவலை, மாணவர் கல்வி சிரமம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)
தொழில் நிலை மாற்றம், புதிய தொழில் முயற்சி, அன்னியர் நட்பு, உயர்ந்தநிலை, பிரயாண மிகுதி, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் உயர்ச்சி, பண வரவு, காரியானுகூலம், கௌரவம், தேக சுகம் பாதிப்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் மந்தம், பணச் செலவு, உறவினர் உதவி, அன்னியரால் தொல்லை, மறைமுக எதிர்ப்பு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, அன்னியர் சகவாசம், குடும்ப கஷ்டம், செலவு மிகுதி, உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)
தொழில் மந்தம், பொருள் விரயம், உறவினரால் தொல்லை, வீண் கஷ்டம், உத்தியோக மேன்மை, பதவி உயர்ச்சி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் மந்தம், பொருட் செலவு, காரியானுகூலம், இனசன விரோதம், பெரியோர் நட்பு, உத்தியோகச் சிக்கல், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)
தொழில் சிக்கல், செலவு மிகுதி, வீண் விரயம், இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை, உத்தியோகக் கஷ்டம், புதிய பதவி மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை )
தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, வெளியிடப் பிரயாணம், குடும்ப சுகம், மனமகிழ்ச்சி, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், உற்சாக மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம் :- 04


**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் சிறப்பு, பண வரவு, காரியானுகூலம், பெரியோர் சகாயம், உத்தியோக நன்மை, பதவி உயர்ச்சி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் சிரமம், பணியாளர் பகை, கடன் சுமை, வீண் மனஸ்தாபம், குடும்ப கலகம், உத்தியோகக் கஷ்டம், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)





இங்கிலாந்தில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணத் தொடரில் சச்சின் விளையாடாதது குறிப்பிடத் தக்கது. எதிர்பார்க்கப் பட்டதைப் போல இந்திய அணி தோல்வி கண்டது. தோல்வியை விடவும் சச்சினின் விளையாட்டைப் பார்க்க முடியாமல் போனது இரசிகர்களுக்கு ஏமாற்றம்தான். தற்சமயம் தான் குணமடைந்து விட்டதாக சச்சின் கூறிய போதிலும், முதல் டெஸ்ட் போட்டியில் களமிறங் கவுள்ள இந்திய அணியில் சச்சினின் பெயர் இடம்பெற வில்லை. சச்சினின் உடல் நிலை குறித்து மருத்துவர்கள் திருப்தி தெரிவித்தால் சச்சின் களமிறங்குவார் என எதிர்பார்க்கப் படுகிறது.




பொதுவாகவே கலைஞர்களின் படைப்புகள் மற்றவரின் கவனத்தை ஈர்ப்பது குறைவு. எழுத்துத்துறையாக இருக்கட்டும், ஓவியத்துறையாக இருக்கட்டும் - பொருளாதார ரீதியில் படைப்பாளிகளை உயர்த்துவார் எவரும் இல்லை. ஆனாலும் படைப்பாளிகள் படைப்புக்களில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்வதுமில்லை. கனடா நாட்டைச் சேர்ந்த தொம் தொம்சன் என்பவர் வரைந்த மேற்கத்தையக் காடுகள் தொடர்பான 58 வகையான் ஓவியங்கள் அண்மையில் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. தற்சமயம் மேற்கத்தையக் காடுகள் அழிக்கப்பட்டு சிறப்பிழந்து காணப்படுகின்றன என்கிறார் தொம் தொம்சன்.




பார்க்கப் பசுமையாகத் தெரிந்தாலும், இங்கே காடுகளும் இல்லை, புற்றரையும் இல்லை. எரிமலையின் பக்கவாட்டில் காணப்படுகின்ற பச்சை மூடுபடை இவை. எரிமலைக் குழம்புகள் வளமாக்கிகளாகக் காணப்படுவதால் இப் பச்சையம் வளர்கிறது. இதை உணவாக உட்கொள்ள காட்டெருமை, குதிரைகள் பெரிதும் விரும்புகின்றனவாம். பார்ப்பதற்குப் பசுமையாகத் தெரிந்தாலும், பாசிகளால் ஆனவை. இதைத்தான் இக்கரைக்கு அக்கரை பச்சை என்பார்கள்.










அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் புயல் தாக்குவதென்பது சாதாரணமான ஒன்றாகிப் போய்விட்டது. கடந்த மாதம் 5ஆம் திகதி புளோரிடா மாநிலத்தில் வீசிய பெரும் புயல் காற்றினால் பாரிய சேதம் ஏற்பட்டது. படகுகளின் கீழ்த்தள இறங்குதுறையைப் புயல் தகர்த்தெறியும் காட்சி இது. சூறாவளிகளை இனங் கண்டுகொள்ளும் வானிலை அவதானிகள் மேற்படி புயலை இனங் காண்பதற்கு முன்னமே அது தன்னை இனங்காட்டிச் சென்றிருக்கிறது இப்படி.

## வளரும் பயிர்

ஸ்டாபன் கொல்ஸ்கோ எனும் மூன்று வயதுச் சிறுவன் தாயைக் காப்பாற்றும் முயற்சியில் தன்னையும் வெளி உலகத்திற்குக் காட்டியுள்ளான். வீட்டில் எதிர்பாராத விதமாக காயமடைந்த தாய், அசைய முடியாமல் கிடந்ததால், சிறுவன் அவசரப் பிரிவான 911க்கு விடயத்தைத் தெரிவிக்க தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு அவர்களை வரும்படி அழைத்திருக்கிறான். தகவலறிந்த உதவியாளர்கள் சிறுவனின் தாயைக் காப்பாற்றியதுடன் இது பற்றிக் கூறுகையில், மூன்றே வயதுச் சிறுவன் பதற்றமும் குழப்பமும் இல்லாமல் தாய்க்கு உதவி தேவை என்ற தகவலை தமக்கு நேர்த்தியாக வழங்கியது வியப்பளிக்கிறது என்றதோடு, அச் சிறுவனின் புத்தி சாதுரியத்தைப் பாராட்டுவதாகவும் தெரிவித்தனர்.




இந்தோனேசியாவைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் காணப்படுகின்றது இப் புள்ளி நண்டு இனம். சுமார் 10-12 C.M. நீளம் வரை வளரக்கூடிய இவை மென் நண்டினம் என அழைக்கப்படுகின்றன. இவை வெளிச்சம் குறைவான பாறைகள், பாறை இடுக்குகளிலேயே அதிகம் வாழ்கின்றன. இளம் சிவப்பில் நாவல் கலந்த புள்ளிகளையும் அதன் மேல் மஞ்சள் புள்ளிகளையும் கொண்டிருக்கிக்கும். இந் நண்டினம் பக்கவாட்டிலும் பின்பக்கமாகவுமே ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் செல்கின்றனவாம்.

## புதுசு

நாகரிக உலக வளர்ச்சியில் செல்ஃபோன் தவிர்க்கமுடியாததாகியுள்ளது. அடையாள அட்டையைத் தவறவிட்டுப் போவோர் உண்டு. செல்ஃபோனை மறந்துசெல்வோர் இல்லை எனலாம். நடந்து முடிந்த் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டுப் பல வகையான விநாயகர் சிலைகள் உருவாக்கப்பட்டன. ஐதராபாத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் புதுமையாக எதையாவது செய்துவிட எண்ணினார். செல்ஃபோன் பிள்ளையார் உதயமானார். ஃபோன் வடிவத்துக்குள் பிள்ளையார் உருவம் இருப்பது போல் சிலை வடித்தார். திருவிழாவில் ஊர்வலத்தின்போது காண்போரின் கவனத்தை செல்ஃபோன் பிள்ளையார் ஈர்த்தார். அடியார்கள் செல்ஃபோன் பிள்ளையாருக்குக் கொடுத்த வரவேற்பு புதுமையாய் இருந்தது.